# அவனில்லாமல் நானில்லை

## 1

சுவாதிக்கு அவனைப் பிடிக்கவில்லை!

ஆக நேருக்கு நேராய் அவனைப் பாராமல் சற்று திரும்பி நின்று கொண்டாள்.

முதலில் கண்களில் பட்டு பிடிக்காமற் போனது அவனது உயரம்ந்தான்...! ஒடிசலாய் இருந்ததால் மிக வளர்த்தியாய் தெரிந்தான். ஆட்டுக்கும் கூட வாலை அளந்து வைத்திருக்கும் இறைவன் இவனைப் படைத்த விதம் அது... அளந்து விட்டிருந்த வரம் - சரி. ஆனால் ஆறடிக்கும் துளி மேற்பட்ட அந்த உயரத்திலிருந்து அவன் தன்னை மிக இளக்காரமாய் பார்த்தது அவளை எரிச்சலூட்டியது.



அவனைவிட தான் முக்காலடி கம்மியாயிருக்கக் கூடும் - அதனால் என்ன இப்போது?

தான் புத்தியிலோ திறமையிலோ மட்டமானவள் இல்லையே...?

இங்கிலாந்தில் தன்னந்தனியே ஒரு தங்கும் விடுதியை நடத்துமளவு திறமை உள்ளவள். தந்தையை இளம் வயதிலேயேப் பிரிந்து, இப்போது தாயையும் சாவிற்கு பறிகொடுத்த பின்பும் அலமலந்து அரற்றாத அளவு திண்ணிய மனதுடையவள்.

இருபத்தி மூன்றே வயதுள்ள ஒரு அழகிய பெண் தொடர்ந்து தனியே இங்கே அதாவது அவளுக்கு சொந்தமல்லாத நாட்டில் இருப்பது உசிதமல்ல என்று அவளைச் சுற்றிலுமிருந்த அத்தனை பேரும் ஒருமுகமாய் சொன்னது தான் அவளை இப்போது இங்கே வரவழைத்தது. தவிர அம்மா உயிரோடு இருந்தபோதும் அவர்களும் இப்படியேத்தானே புலம்பினார்கள்?

“நீ பிறந்து வளர்ந்தது இங்கிலாந்தில் என்றாலும், இது நம்ப தேசமல்ல சுவாதிம்மா - இது நம் தாய்நாடில்லை - நீ ஒரு இந்திய தமிழ்ப் பையனைக் கல்யாணம் பண்ணினால்தான் இந்தியா பேக முடியும் - அங்கேப் பொருந்தி வாழக் கூடும்.”

அன்று சுவாதி சிரித்தாள் -

“இந்தியா போய் வாழ, நான் டெல்லியிலுள்ள 'ஹோம் டிபார்ட்மெண்டி'ற்கு விண்ணபம் செய்தால் போதும்மா. அங்கிருந்து அனுமதி வந்தால் நான் இண்டியன் சிட்டிஸனாய் வாழ முடியும்.. அதற்கேன் கல்யாணம்.. அதிலும் தமிழ் மாப்பிள்ளை...?”

அப்படி சுலபமில்லை அந்த... மாற்றம் சுவாதி. இங்கேயே பிறந்து வளர்ந்த உனக்கு இந்திய வாழ்வு முறை, பழக்க வழக்கங்கள் ஏதும் முழுமையாய் தெரியாது. ஒரு நல்ல, சரியான பையனைக் கல்யாணம் செய்து, அல்லது நிச்சயமாவது பண்ணின பிறகு, அவன் துணையோடு நீ அங்கே போனால் வாழ்வு சுலபம்.. பிறரோடு சுமுகமாய் கலந்து பழக முடியும்.. எளிதாய் ஒன்றக் கூடும்... தனியே போய் புது சூழலில் நின்றால், நீ அநாதைன்னு ஒரு எண்ணம், தவிப்பு உன் உள்ளேயிருக்கும் உறுத்தலாய்...''

''ஏம்மா நாம சேர்ந்து போகலாமே? இந்தியா போவதற்காய் ஒரு கல்யாணமா?''

செல்லமாய் அலுத்தவளைத் தாயின் விழிகள் பரிவுடன் வருடின. ''நான் எவ்வளவு.. எத்தனை நாள் சுவாதி உங்கூட இருக்க முடியும்? உன் எதிர்காலம்ன்றது உனக்கு வரும் துணையோடுதான்...''

''என் துணையை எப்படிம்மா தேடிப் பிடிக்கப் போறோம் - இந்த நாட்டு வழியிலா, இந்திய நாட்டு மரபிலா?'' பாதி கிண்டலான வினா, அது.

''உனக்கு எது சரின்னு படுது?''

அம்மா சுவாதிக்குப் போதிய சுதந்திரம் தந்து வளர்த்தவள்.

''இங்கிலாந்தில் உள்ளது போல 'டேட்டிங்' செய்வது ரொம்பக் கஷ்டம்மா! இப்போ பெண்கள்தான் பையன்களைத் துரத்த வேண்டியிருக்காம் - ப்யூலா ரொம்ப அலுத்துக்கறா. தினம் ஜாகிங் போகும் ஜேஸனின் குறுக்கும் மறுக்குமாய் இவள் சைக்கிளில் போய் அவன்



கவனத்தை ஈர்க்க பெரும்பாடு படறா! இந்தியாவில் நிலைமை உல்டான்னுவீங்களே?''

''பின்னே? பசங்கதான், வீட்டை விட்டு பெண்கள் வெளியே தலைகாட்ட மாட்டாங்களான்னு அலைபாய்வாங்க.. ஆனால் அங்கே பெரும்வாரியாய் பெரியவங்க பார்த்து நிச்சயிக்கறதுதான்... என் கல்யாணமும் அப்படி நடந்திருந்தால் நிலைச்சிருக்குமோ... என்னவோ?''

பெருமூச்சுடன் சொல்லியதுண்டு அம்மா.

''எனக்கும் காதலில் நம்பிக்கையில்லம்மா - அது பற்றிய நக்கலான ஒரு அபிப்ராயம் - கேட்கறீங்களா?''

''ம்ம்.''

''காதல் என்பது நீங்கள் சொறிந்து கொள்ள முடியாத ஒரு நமைச்சல்.. இதயத்தைச் சுற்றி ஏற்படக் கூடியது! - எப்படி?''

அம்மா சின்னதாய் முறுவலித்தார்கள் - அதனூடே கசப்பு தெரிந்தது. ''ம்ம்.. ஆரம்பத்தில் சொறிந்தால் சுகம்.. பிறகு ரணமாயிடுது! உனக்கேற்ற பையனாய் எனக்கு.. நமக்குத் தெரிஞ்சவங்களிடத்தில் சொல்லி வச்சிருக்கேம்மா சுவாதி... அதுவும் உன் அழகுக்கு ராஜகுமாரனே வருவாம் பாரு...''

அம்மா சொன்னதை - அதாவது தன் அழகு பற்றியதை - சுவாதி நம்பவில்லை - ''காக்கைக்கும் தன் குஞ்சு பீற்றத்தக்க பொன் குஞ்சு'' தானே என்ற அலட்சியம். ஆனால் அதை பலரும் சொல்லியதுண்டு - சாலையில் நடந்து போபவர்களின் பார்வைக் கண்ணாடியின் பிரதிபலிப்பில் தான் அழகிதானோ என்று சந்தேகமாய் சந்தோஷித்திருக்கிறாள்!

ஆனால் இப்போது தன் எதிரே நிற்பவனின் முகபாவம் வெகு அலட்சியமாயிருக்கிறது.

'நீ அழகியென்றால் அதில் எனக்கென்ன?' என்ற ஒரு அகம்பாவ பாவனை.

இவன் எதிரே ஏன் தான் ஒரு அசடு போல நிற்க வேணும்? புறமுதுகு காட்டி ஓடிவிட்டால் என்ன? அவளது யோசனைகளை அவனது ஆழ்ந்த குரல் ஊடுருவியது.

"உன் முகமே பேசுது.. உன் யோசனைகளை எல்லாம் பளிங்காய் காட்டும் முகம் உனக்கு. ஆக நீ எதையும் என்னிடமிருந்து மறைக்க முடியாது."

இப்போது சுவாதிக்கு அவனை மேலும் பிடிக்க வில்லை!

சகலமும் தெரிந்தவன் போலல்லவா அலட்டுகிறான்!

முகபாவங்கள் மூலம் மனதின் எண்ணங்களை எப்படி யூகிப்பதாம்? பெரும் ஞானி போல அவன் தன்னைக் கீழ்பார்வையாய் பார்த்து பேசியது சுவாதிக்கு ரசிக்க வில்லை.

அவனது கூரிய பார்வை அவளைக் கூறு போட்டது தான். ஆனாலும் உன் சிந்தனைகள் எனக்குத் தெரிகிறது என்பதெல்லாம் சரடு... அப்படித் தெரிந்தால் 'ஆஹா தன்னை இவளுக்கு சுத்தமாய் பிடிக்கவில்லை' என்பது புரிந்து விலகியிருக்க மாட்டானா?

அவனை சந்திப்பதற்காய் அவள் வந்திருந்த இந்த இடம், அவளுக்கு மிகப் பிடித்தமானது - லண்டன் நகரின் 'கவன்ட் கார்டன்.' சந்திப்பிற்கு ஏற்ற இடம். அதிலும் அறிமுகமற்ற இருவர் சந்திக்க கச்சிதமானது. இப்போதும் அந்தரத்தில்...



விநோதங்களைச் செய்து கொண்டிருந்தான் ஒருவன்! சுற்றிலும் நின்ற சிலர் ரசித்துக் கை தட்டியபடி - இந் தியாவிலும் முன்பு கழை கூத்தாடிகள் இப்படி சாலை களில் வித்தைக் காட்டி பிழைப்பதுண்டு என்றிருக் கிறார்கள் அம்மா. இது மைதானம் போன்ற சிறு இடம் இங்கு இப்புதியவனை வரச் சொன்னது இவள்தான். ஆனால் இப்போது ஏன் வரச் சொன்னோம் என்ற தவிப் புடன் திரும்பி வித்தைக்காரனைப் பார்த்தபடி நின்றாள். கூட்டம் அடுத்த பக்கம் சாய்ந்தது. காரணம் அங்கு சில பெண்கள் தங்களின் நவீன ஆடைகளைக் காட்ட அணிவகுத்திருந்ததுதான். மலர்களும், புட்டாக்களும் கோடுகளுமான பருத்தி ஆடைகளை அவர்கள் விளம் பரப்படுத்திக் கொண்டிருந்தனர் போலும் - முழங்கிய இசைக்கேற்ப அங்கிருந்த மேடையில் இப்படியும் அப் படியுமாய் சுழன்று திரிந்தார்கள் - வாயெல்லாம் பல்லாக, தங்களுக்காய் திரண்ட கூட்டத்தாரிடம் பறக்கும் முத் தங்களை வீசினர். இது போன்ற 'கவுன்'களை அம்மா சுவாதியை அணிய விட்டதேயில்லை - அதாவது பதின் நான்கு வயதிற்கு மேல்! பாவாடை சட்டை, அல்லது ஸல்வார், பின்னாட்களில் புடவைதான், மகளுக்காய் அம்மா வாங்கித் தந்ததெல்லாம். இங்கே வேலைக்குச் செல்பவர்கள் பெரும்பாலும் அணிவது கறுப்புதான் - கறுப்பு பிஸினஸ் ஸூட், மற்ற சமயங்களில் ஜீன்ஸ் இங்கும் வெகு சகஜமாகிவிட்டிருந்தது.

ஆனால் அம்மா இவள் ஒரு ஜீன்ஸ் கூட வாங்க சம்மதித்ததில்லை.

"ச்சே... அது கூடாரத் துணியிலிருந்து கிழியாமல் வெகுநாள் உழைக்க, ஒருத்தன் உருவாக்கிய துணி சுவாதி.

உன் போல மிருதுவான பெண்களுக்கானதல்ல'' என்று கறாராய் சொல்லிவிட்டு, இந்தியா போய் வருபவர்களிடம் மகளுக்காய் வித விதமான புடவை, ரவிக்கைத் துணி களை வாங்கி வரச் சொல்வாள். கூடவே தமிழ் பத் திரிகைகளையும்.

''இதை வாசிச்சு, இதிலுள்ள படங்களைப் பார்த்து, அங்கே எப்படி உடுத்தி, அலங்கரிச்சுக்கறாங்கன்னு தெரிஞ்சுக்கோ, சுவாதிம்மா'' என்று அறிவுறுத்துவாள்.

அப்படங்களில் சிரிக்கும் அழகிகளின் ஜாக்கெட் மாடல்களை அப்படியே தைத்தும் தருவார் - பேப்பர் கட்டிங் இருப்பதால் இப்போது சுவாதியே கூட தைக்கப் பழகியாயிற்று. ஆடைக்குப் பொருத்தமாய் சில நகை களும் சேர்ந்திருந்தன. அதில் குண்டு, கல் ஜிமிக்கி சுவாதிக்கேக் கூட மிகப் பிரியம்.

பட்டு கட்டி, அந்நகையைப் போடும் பொழுதெல்லாம் அம்மா மகளைக் கண்ணெடுக்காமல் பார்த்து நாலைந்து முறை முத்தமிட்டு விடுவார்கள்...

அவளையும் மீறி வெளிப்பட்டது ஒரு பெருமூச்சு...

''என்ன, சீக்கிரமே இங்க்லன்டைப் பிரியப் போவது குறித்த வருத்தமா?''

அதே அமர்த்தலான மட்டந்தட்டும் தொனியில அவன் கேட்க, இவள் கேள்வி தன் காதில் விழாதது போல நின்றாள்.

இவள் ஏதுமறியாக் குழந்தை போலவும் தான் சகலமும் அறிந்தவன் போலிருந்த அவனது ஆணவத் தொனி...

சுவாதிக்கு சுத்தமாய் பிடிக்கவில்லை!



முதல் பார்வையில் பிடிக்காமல் போனது அவன் நின்ற தோரணைதான்.

மூடப்பட்ட ஒரு வங்கியின் வாசலில் நின்றிருந்தான் - அதன் வாசற்படியில் வலதுகாலை தூக்கி வைத்தபடி. யாரையோ எதிர்பார்த்து நின்றது போலிருந்த அவனது தோரணையும், அவனது உயரமும், தான் பார்க்க வந்திருப்பது அவனைத்தான் என்பதை சுவாதிக்கு உணர்த்த, தயங்கி அவனை நெருங்கினாள்.

லேசாய் செருமிவிட்டு இதமாய்தான் கேட்டாள் -

''நீங்க மிஸ்டர் - திவாகர்?''

இவள்புறமாய் துளி திரும்பியவனின் பார்வை புதியவளை ஒரு கணம் அளவெடுத்தது - பின் தலையை 'ஆம்' என்பது போல லேசாய் அவன் ஆட்டிய விதம் முறையானதாயில்லை!

ஒரு பெண் தன்னை அணுகிப் பேச, ஒரு ஆண் என்ன செய்ய வேண்டும்? அலட்சியமாயல்லாமல், நேரே நின்று, சிறு முறுவலுடன் சற்றே குனிந்து (அவன் அதிக வளர்த்தியாயிருப்பதால்!)

''யெஸ் - நான் திவாகர்... நீங்க மிஸ். சுவாதிதானே? உங்களை சந்தித்ததில் மகிழ்ச்சி'' என்று இதமாய் சொல்ல வேண்டாமா? இவனோ, தான் தனது பரந்த ராஜாங்கத்து பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து கொண்டிருக்கும் ஒரு மன்னனைப் போலவும், இவள் தன் அந்தரங்க அறைக்குள் தத்தி நுழைந்த விட்ட ஒரு தவளையைப் போலுமல்லவா தன்னை நோட்டமிட்டான்?

தன்னைப் பற்றி தன் தோழி வாஸந்தி இவனிடம் என்னதான் சொன்னாள்?

...தாய்திருநாட்டிற்குப் போகத் துடிக்கும் ஒரு அபலைப் பெண் என்றா?

அதற்காய் இப்படி ஒரு குறுக்கு வழிமுறையைத் தேர்ந்தெடுத்தவள்தானே இவள் - என்ற இளப்பமா இவனுக்கு?

அப்படியானால் வாஸந்தியைத்தான் போய் கடிந்து கொள்ள வேணும்தான்.

வாஸந்தி முதலில் அந்த யோசனையைத் துள்ளலாய் சொன்னபோது சுவாதி - 'ச்சே.. சேச்சே..' என்றுதான் அதை கை வீசி ஒதுக்கித் தள்ளினாள்.

''என்ன வாஸி, இப்படி ஒரு அபத்த யோசனையைச் சொல்றே?'' என்று.

''இந்தியாவில் இப்பெல்லாம் கல்யாணங்கள் இப்படித் தான் முடிவாகுதுன்றேன். ஜாதகம் புரட்டி, பெண் பார்த்து பஜ்ஜி, சொஜ்ஜியெல்லாம் சாப்பிடறதில்லை. முதல்ல பெண்ணும் பையனும் பார்த்து, பிடிச்சிருந்தால்தான் குடும்பத்தார் சந்திக்கறது. உங்கம்மா சொன்னது போல நீ இந்தியாக்கு ஒண்டியாய் போறது சுலபமில்லை, பாதுகாப்புமில்லை. திவாகர் இஸ்... நீ நேரே போய் அவரைப் பாரு... பிறகு சொல்வே பாரு...!''

வாஸந்தி உளறியிருந்தாள்.

அந்த உளறலை நம்பி இப்படி இவன் முன்பு வந்து நிற்பது பெரிய மடத்தனம் என்று பட்டது.

''இந்தியா நம்ப நாடுன்னாலும் இதுவரை நீ அங்குப் போனதேயில்லை. ஒரு புது நாட்டில், புது முகங்களின் நடுவே நீ ஒண்டியாய் சமாளிக்க முடியாது. அங்கும் கெட்டவங்க, ஏமாற்றுக்காரங்க இருப்பாங்க சுவாதி.



நாதியற்ற ஒரு பெண்ணை பிய்ச்சு தின்னுடுவாங்க.. நீ பக்காத் துணையோடு அதாவது ஒரு புருஷனோடு அல்லது புருஷனாகப் போறவரோடு இந்தியா போறது தான் சரியானமுறை. திவாகரைப் பாரேன் - பிறகு சொல்வே...''

கண்கள் மின்ன தோழி சொல்ல, இவளும் மட்டித்தனமாய் வந்தாயிற்று. எப்படித்தான் இருப்பான் அந்த திவாகர் என்று பார்க்கும் ஆர்வமும் காரணமோ?

ஆனாலும் இப்படியா ஒரு முன்பின் அறியாதவனின் முன் வந்து நிற்க வேணும்...?

தவிர, சுவாதிக்கு அவனைப் பிடிக்க வேறு இல்லை!

## 2

''பொருட்களைப் பயன்படுத்து; அன்பு செய்யாதே - மனிதர்களை அன்பு செய்; பயன்படுத்தாதே'' இது அம்மா அடிக்கடி மகளுக்கு உபதேசித்தது. இதைப் பின்பற்றத் தவறுவதே கோளாறுகளுக்கெல்லாம் ஆரம்பம் என்பது அம்மாவின் முடிவு.

ஆனால் தான் இப்போது செய்யத் துணிந்திருப்பது என்ன - ஒருவனை.. ஒரு மனிதனைப் பயன்படுத்தத் தானே?

அவனிடம் இப்போது அவளுக்கு அன்பு சுரக்கவில்லை -

மாறாய் பிடிக்கவேயில்லை.

ஆனால் இந்த திவாகரைப் பயன்படுத்தி தான் இந்தியா போய் விட வேண்டும், சௌகர்யமாய் - என்பது ரொம்பக் கேவலமான யுக்தியாகவல்லவா தோன்றுகிறது...?

அம்மாவிற்கும் இந்த திட்டம் திருப்தி தந்திருக்காது - ஆனால் அம்மாவின் சிநேகிதியான கலா ஆண்ட்டி அடித்துச் சொன்னார்களே -

''உங்கம்மா சுஜாதா உனக்குத் தேடியது இப்படியொரு மாப்பிள்ளையைத்தான் சுவாதி. கட்டியவன் உன்னை முழுக்க இந்தியாவிலேயே வைத்துக் கொண்டால், உனக்கு மூச்சடைக்குமோன்னு பயப்பட்டாள் சுஜாதா. அப்பப்போ, நீ பிறந்து வளர்ந்த இந்த இங்கிலாந்திற்கும் வரப் போகன்னு நீ இருந்தால் நீ சௌகர்யமாய் உணர் வாய்ன்ரது அவ எண்ணம். தவிர திவாகர் நல்ல குடும்பத்து பிள்ளை - இந்தியாவிலும் இங்கேயுமாய் அவனுக்கு வியாபாரத் தொடர்புகள் உண்டு. ஆக நாங்களும் உன்னை அப்பப்போ பார்த்துக்கலாம் - ஆளும் பார்க்க 'ஜம்'முனு இருக்கான் வேறென்ன?'' என்று.

''பார்த்து பேசியதும் எப்படி தெரியும் ஆண்ட்டி... இவர் நான் கல்யாணம் செய்து வாழ சரியான ஜோடிதான்னு...?''

''சிலரைப் பார்த்ததும் காதல் பொத்துக்குதே - அதெப் படி?'' எதிர் கேள்வியிட்ட கலா கறாராய் சொல்லி விட்டாள்.

''உங்கம்மா சுஜாதா. அப்படி காதலில் விழுந்துதான் வாழ்க்கையில் அடிபட்டுகிட்டா. ஒரு பஞ்சாபியை விரும்பி, அவனுக்காய் மொத்த குடும்பத்தையும் விட்டு விலகியவளுக்கு அந்த காதல் கடைசிவரை நிலைக்



கலையே... நீ பெரியவங்க சொல்றதைக் கேட்டு நட... என்ன? சரி நீங்க எங்கே சந்திக்கப் போறீங்க சொல்லு'' என்று இவளைக் கிளப்பியும் விட்டு விட்டாயிற்று.

காதலைத் தொடர்ந்து கல்யாணமும் செய்து கொண்ட சுவாதியின் பெற்றோர், திரவியம் தேடியல்ல, நிம்மதியும் தேடித்தான் திரைக்கடலைக் கடந்து இங்கிலாந்து வந்தது.

இருபக்கத்தாரின் உறவும் பிரியமும் இல்லாவிட்டால் என்ன ஒருவருக்கொருவரே போதும் என்று அயல் தேசத்திற்கு 28 வருஷங்களுக்கு முன்பு வந்தவர்களுக்கு வசதியாகவே வாழ்வு அமைந்தது. அப்பா மேற்படிப் பையும் தொடர்ந்தார் என்றாலும் அம்மாவின் சமையல் பக்குவம் தான் அவர்களை வியாபாரம் தொடங்க, துணிவித்தது.

குழந்தை பிறப்பை தள்ளி வைத்துவிட்டு ஊக்கமாய் உழைத்தார்கள் இருவரும். முந்நூறு வருஷத்து பழமை யான 'மொனாஸ்ட்ரி' ஒன்றை லீஸிற்கு எடுத்தவர்கள் அதை மாணவர்கள் தங்கும் விடுதியாய் நடத்தி, நாவிற்கு ருசியாய் சமையலும் செய்து போட, இந்திய மாணவ மாணவியர் அங்கு தங்க முண்டி மோதினார்கள். ஐம்பது கல்லூரிகளால் ததும்பிய ஆக்ஸ்ஃபோர்ட்டின் ஒதுக்கு புறமாய் அவர்களது விடுதி அமைந்தது கூடுதல் அதிர்ஷ்டம்.

ஐந்து வருஷங்கள் கழித்து அத்தம்பதியருக்கு மகள் பிறக்க, அவர்களது வாழ்வின் நம்பிக்கை நட்சத்திரமாய் அவளைக் கொண்டாடி இட்ட பெயர்தான் - சுவாதி!

ஆனால் சுவாதி எட்டு வயதாயிருக்கையில் அம்மா வின் வாழ்விலிருந்த சூரியன் தொலைந்து போனான் - அதாவது அப்பா வேறொரு இளம் பெண்ணின் மீது

மையல் கொண்டு, அவளது வாழ்விற்கு 'ஒளி' தர ஓடிப் போனார்!

கிறிஸ்தவ மதத்தினைச் சேர்ந்த அம்மா அதுவரை ஆலயம் போனதில்லை. புருஷனே தெய்வமெனக் கிடந்தவள் அவன் விட்டுப் போனதும், சர்க்கஸின் ட்ரெப்பீஸ் ஆட்டக்காரனைப் போல, லாவகமாய் அடுத்த ஆடும் கயிறினைப் பற்றிக் கொண்டாள்! கீழே விழாதிருக்க, அம்மா பற்றிக் கொண்ட கடவுள் நம்பிக்கை, மகளுக்கும் தரப்பட்டது. ஜெபிக்க, ஆலயம் போக, தினம் வேதத்தை வாசித்து தன் வாழ்க்கையை நடத்த சுவாதியும் பழகிக் கொண்டது - அந்த கடவுளின் அருள்தான் - இல்லையெனில் அம்மாவையும் இழந்த பிறகு அவளுக்கு உலகில் எந்த பிடிப்பும் இருந்திருக்காது - பயம் மட்டுமே மிஞ்சியிருக்கும்!

தாயும் மகளுமாய் ஜெபிக்க முழுந்தாளிடும் போது சில சமயம் சுவாதிக்கு வேண்டாத சந்தேகங்கள் எழும்...

''ஏம்மா ஜீஸஸ் நமக்கு நிறைய கஷ்டங்களைத் தர்ரார்?''

''ஷ்.. சுவாதி - தப்பும்மா - இதெல்லாம் எனக்கு நானே வரவழைச்சுகிட்ட துன்பம். காணாததைக் கண்டது போல ஒரு பதட்டத்தோட என் உறவுகளை விட்டுட்டு இவரை நம்பி வந்தேன்... என் கடவுளைக் கூட அவருக்காய் ஒதுக்கினேன்... எந்த ஆதரவுமில்லாமல் வாழ்வு தள்ளாடிருச்சு.. விடு.... கஷ்டம் யாருக்கில்லை? அந்த கஷ்டங்களைக் கடக்கும் துணிவையும் தெம்பையுந்தான் நாம நம்மைப் படைத்தவரிடம் வேண்டி வாங்கிக்கணும்.''

ஒண்டிப் பெண்ணாய் ஒரு விடுதியை நடத்துவது லேசாயில்லை. ரிப்பேர் வேலைகள், தோட்டப் பரா



மரிப்பிற்கு ரிச்சர்டும், அறைகளை சுத்தப்படுத்த அவரது மனைவியும் வாரத்தில் மூன்று நாட்கள் உதவியதால் முதுகு ஒடியாமல் தப்பினது! அவர்களும் அறுபதைத் தாண்டியவர்கள். ஆங்கிலேய இளையவர்களுக்கு இம் மாதிரியான வேலைகளைச் செய்ய நாட்டமில்லை. அறைக்கு இரண்டு பேர் என அங்கு தங்கிய இருபது மாணவர்களுக்கு சமைத்துப் போட்டு, விடுதியைப் பராமரிக்க சுவாதி திணற வேண்டியிருந்தது.

அந்நேரங்களில் நெஞ்சுள் நட்சத்திரமாய் ஜொலித்து அவளைக் காப்பாற்றியது அம்மா, இந்தியாவில் வாழ்ந்த காலத்தைப் பற்றிச் சொன்ன கதைகள்தான். தன் குடும்பத்தினரைப் பற்றி, அவர்களது பாசம், கிண்டல், பண்டிகைக் கொண்டாட்டங்கள், வீட்டுத் திருமணங்கள் பற்றி எல்லாம் அம்மா சொன்னவை நினைக்குந்தோறும் வாடிய இவள் மனதை வளப்படுத்தின.

அந்த ஞாபகங்கள் எல்லாம் வளையல்கள் போல, உள்ளே கலகலவென ஓசையெழுப்பி சுவாதியின் தனிமை ஏக்கத்தைத் தணித்தன. தனக்கென்று ஒரு வாழ்வு, குடும்பம் அமைய வேண்டுமென்ற ஆசை அவளுக்குண்டு.

இதுவரை மிதித்தறியாத இந்திய மண் அவளை ஈர்த்தது - பழகியறியாத உறவுகளை எண்ணி மனம் இளகியது! தாத்தா, பாட்டி இறந்த தகவல் சற்று தாமதமாகவே இவர்களை எட்டியதால், ஊர் போக அம்மா அன்றும் அவசரப்படவில்லை.

பெரியவர்களின் மரணம், மனித வாழ்வின் சுலப முடிவு பற்றி மற்ற உறவினர்க்கு அழுந்த சொல்லியது போலும் - இந்தியா வந்து திரும்பிய இங்கிலாந்து

வாசிகளிடம், அம்மாவின் உறவினர், பலகாரங்கள், சிறு பரிசுகளோடு, பாச விசாரிப்புக்களையும் அனுப்பி வைத்தார்கள்!

அம்மாவிற்கும் ஊரை, உறவை அதிகம் தேடலாயிற்று. ''சுவாதிக்கு ஏற்ற பையனாய் பார்த்து, அவ கல்யாணத்தை, சிந்து பூந்துறையிலிருக்கும் எங்க பூர்வீக வீட்டில நடத்திப் பார்க்கணும்'' என்று கனாக் காண ஆரம்பித்தார்கள்.

மகளின் தலைகோதி,

''உனக்கு எப்பேறப்பட்ட மாப்பிள்ளைத் தேடுவேன் தெரியுமா சுவாதி செல்லம்?'' அம்மா கேட்க, மகளுக்கு வெட்கம் பிய்த்துக் கொள்ளும்.

இங்கிலாந்தில் 'டேட்டிங்', அதில் விளையும் ஊடல், தடவல் எல்லாம் பார்த்தாலும் சுவாதிக்கு ஆண்களிடம் மிக நெருங்கிப் பழக முடியவில்லை. கூச்சம் அவளைக் கயிறு கட்டி இழுத்து வைத்திருந்தது!

இப்போதும் பெருகிய அக்கூச்சத்தை ரசித்த தாய், ''நீ பேரழகிதான்டி சுவாதி. அஞ்சடி ஐஞ்சங்குலங்கறது சராசரி இங்கிலீஷ்காரிகளுக்குமே மிஞ்சிய உசரந்தான். இளம் இஞ்சி நிறம். இது கிடைக்காதான்னுதானே இங்குள்ள வங்க வெயில்ல காய்றது? கருநாவல் கணக்கா கண்ணும், கைக் கொள்ளாத கூந்தலும் தனி. எல்லாத்தையும் விட 'நான் யார் தெரியுமா'ன்னு ரோஷமாய் முட்டிகிட்டு நிக்குதே உன் மோவாய், அதன் மிளகு மச்சம் - அது விசேஷம். யாருக்குக் காலமெல்லாம் ரசிக்கக் கொடுத்து வச்சிருக்கோ?''

''எங்கம்மாக்குத்தான்...''

அம்மாவின் முகம் சற்று இருளும். தன் உடல்நலம் பற்றி அப்போதே அவர்களுக்கு கலக்கம் இருந்திருக்க வேணும்.



''அசட்டுப் பொண்ணே. எப்பேறபட்ட ஒருத்தனை நான் தேடறேன்னா... சரி எல்லாம் கலா ஆண்ட்டிட்ட சொல்லியிருக்கேன். நாங்க சொன்ன பேச்சுக்கு நீ தலையாட்டிட்டாப் போதும் என்ன? இதோ இந்த வெட்கம்.. இதுதான் ஒரு பெண்ணின் அழகுக்கு மகுடம். நாணத்திலே நனையற அழகுதான் சோபிக்கும். ஒரு வயசுக்கு மேல நாணம் பொங்கி வடியாது. எந்த ஆணைப் பார்த்தாலும்,

'ஓஹோ... இவந்தானா? நமக்கு சரிப்படுவானா?'ன்னு நோட்டமிட ஆரம்பிச்சாச்சுன்னா.. ஒருத்திக்குக் கல்யாணமானது போலதான் அந்த முதிர்ச்சி வர்ரதுக்குள்ளே பெத்தவங்க அலசி தேடி உரியவனை எடுத்துடணும்.''

அப்போது சுவாதி சிரித்தாள். ஆனால்,

''திவாகரை உங்கம்மா பார்த்தால் பூரிச்சு போயிருப்பா - அவ, எதிர்பார்த்தது போலவே இருக்கான். பார்க்க, பழக எல்லாத்திலேயும் என்று அம்மாவின் சிநேகிதி கலா ஆண்ட்டி சொன்ன போதும் கலக்கந்தான். ஆண்ட்டியின் கொழுந்தன் மகளான வாஸந்தி, சுவாதிக்கு நெருக்கம். அவர்கள் இருவருமாய் சேர்ந்து நெருக்கவுந்தான் சுவாதி இந்த சந்திப்பிற்குத் தலையாட்டினது.

திவாகரின் சித்தப்பா குடும்பத்தினர் லண்டனில் பல வருஷங்களாய் இருப்பவர்கள். அவர்களது மகள் வேறு வாஸந்தியிடம் தன் 'திவா அண்ணனை'ப் பற்றித் தாளிக்க,

''அவரும் வெளிநாடு பழகிய ஒரு இந்தியப் பெண்ணைத் தேடறாராம், சுவாதி - ஆக உங்களுக்குள் ஏகப் பொருத்தம்'' சிலாகித்திருந்தாள் தோழி.

...பொருத்தந்தானா? அம்மா தேடிய மாப்பிள்ளை இவனேதானாமே?'' ஓரக்கண்ணால் அப்புதியவனை நோட்டமிட்டாள்.

அதிக உயரந்தான். ஆனால் தோள்கள் அகலம், உடம்பு ஒடிசலானாலும், திடமானது என்பதால் மோசமில்லை.

பெண்ணைக் கண்டதும் மொத்தப் பற்களையும் அவன் காட்டாதது சின்ன ஆறுதல்.

ஆனால் பார்வையில் இளக்காரமும் பேச்சில் இடக்கும் இருக்கின்றனவே...?

ஜீன்ஸுக்குள் புகாமல், கறுப்பு நிற உல்லன் பேண்டும், உயர்ரக பழுப்பு அரைக்கை சட்டையும் அவன் அந்தஸ்தைக் கூட்டின.

எல்லாவற்றையும் விட முக்கியம் அவன் ஒரு தமிழ் பேசும் பெண்ணை இங்கிலாந்தில் தேடும் ஒரு பிரம்மசாரி!

வேறெங்கோ நோக்கிய அவன் கண்கள் 'சட்'டென அவள் கண்களைக் கவ்விப் பிடித்து கேலியாய் சிரித்தன.

''முகத்தை வேறு பக்கமாய் திருக்கிக் கொண்டு முதல்ல நீ நிற்க, உனக்கு என்னைப் பிடிக்கலையோன்னு ஒரு சந்தேகம் வந்தது... இப்போ அது இல்லை சுவாதி. ஏன்னா நீ என்னை ரொம்ப உன்னிப்பாய் ஆராய்ந்ததை நான் பார்த்தேனே...''

சிவந்த தன் முகத்தை சிடுசிடுப்பாக்கிக் கொண்டாள் சுவாதி. ''நம்மிடையே இது.. அதாவது கல்யாணம்.. ஒரு.. வந்து, வெறும் ஒரு ஒப்பந்தம் போலத்தான். நான் இந்தியாவிற்கு உரிமையோடு போக அது உதவி.. அது போல நானும் உங்களுக்கு உதவக் கூடும்...''



''எனக்கென்ன உதவி? பல விஷயங்களில் ஒரு ஆணுக்கு மனைவியின் உதவி.. அவசியந்தான். அது தெரியும்! ஆனா நீ அதைக் குறிப்பிடலைன்னு நினைக்கிறேன்.. வேறென்ன?''

அவள் முகம் மேலும் குழம்பிச் சிவந்தது.

இவனைத்தான் முதல் பார்வையிலேயே பிடிக்கவில்லையே - பிறகேன் பேச்சை வளர்ப்பது?

''ஸாரி - நான் ஏதோ அறியாமல் வந்து விட்டேன். இப்போது புத்தி தெளிந்து விட்டது. நா வர்ரேன்'' என்று கைக்கூப்பி விட்டுக் கிளம்பாமல், வேண்டாததைப் பேசி, ஏன் வாங்கிக் கட்டிக் கொள்கிறாள்?

அவளது நெற்றிப் பொட்டுக்களில் வலி ஆரம்பித்தது.

அவளது பதிலுக்காய் சற்று காத்திருந்து விட்டு, அவனே பேசினான்.

''உனக்குப் பசின்னு நினைக்கிறேன் சுவாதி. முதல்ல சாப்பிடலாம். பிறகு தெளிவாய் யோசிச்சு பேசு...''

என்றவன் நடக்க, வேறு வழியின்றி அவனைத் தொடர்ந்தாள் அவள்!

## 3

''காரியம் ஆக வேண்டியிருந்தால் காலைப் பிடி'' என்று அறிவு முதிர்ந்தோர் சொல்லிப் போயிருந்தனர்.

அது கழுதையோ, குதிரையோ - குனிந்துதான் போக வேண்டும். இவனோடு காரியம்.. அதிலும் கல்யாண மென்பது யோசிக்கவே பிடிக்கவில்லை - ஆக என் இந்த திவாகரிடம் தான் தழைந்து நிற்க வேணும்?

கலா ஆன்ட்டியும் வாஸந்தியும் பரவசமாகி தன்னை இந்த இக்கட்டுக்குள் தள்ளி விட்டு விட்டார்கள்.

''திவாகரை விட பொருத்தமான வேறு பையனை - யோசிக்கவும் கூட முடியாது'' என்ற பிதற்றலோடு!

இவனையும் நழுவ விட்டு விட்டால் வேறு யார் இவர்களுக்குத் தோதாய் சிக்குவார்கள்?

சற்று புத்திசாலிதான் இவன்.

தனக்குப் பசிக்கிறது என்பதைச் சரியாய் புரிந்து கொண் டானே! தள்ளுவண்டியில் ஆவி பறக்கப் போன 'ஜாக் கெட் கிழங்கு'களைக் கண்டு தான் எச்சில் கூட்டி விழுங் கியதைப் பார்த்தா? அல்லது பசி தன் கண்களில் சோர்வாய் எட்டிப் பார்த்ததா?

இரண்டு மணி நேரம் இந்த சந்திப்பிற்காய் ஒதுக்க வேண்டி, சுவாதி காலையிலிருந்து பம்பரமாய் சுழன்றிருந் தாள். அந்த பதட்டத்தில் சாப்பிட ஒழியவில்லை. இப்போது வயிறு பசியில் காந்தியது. அம்மா இறந்த அதிர்ச்சியில், அவள் உணவை வெறுத்ததில், அல்சர் உருவாகியிருந்தது. காரமற்ற உணவு வகைகள், குளிர்ந்த பால் என்று கவனமாய் உண்டு வயிற்றுப் புண்ணை ஆற்றியிருந்தாள். ரோட்டோரம் அல்லது வெளியே உண்டு பல காலமாயிற்று. தோலுடன் வேக வைக்கப் பட்ட பருத்த உருளைக்கிழங்கை விதவிதமான சட்னி களுடன் சாப்பிட்டது பல வருஷங்களுக்கு முன்பு.



''இங்க பக்கத்தில் ஒரு சைனா ரெஸ்டாரண்ட் உண்டு. உணவு தரமாய் இருக்கும் - '' என்றபடி நடந்தவனை பின் தொடர்ந்தாள்.

இங்கிலாந்தில் இப்படி ஆணும் பெண்ணுமாய் சேர்ந்து உண்பது வெகு சகஜம் என்றாலும் சுவாதி அப்படி யாரோடும் உரிமையாய் போனதில்லை. அப்படி விச் ராந்தியாய் வெளியே போய் உண்ண அவளது வேலைப் பளு அவளை விட்டதுமில்லை.

ஆக சற்று யோசனையாகவே திவாகருடன் நடந்தாள்.

பில் தொகையில் பாதியைத் தான் தந்தால் போயிற்று என்ற சமாதானத்துடன்.

இங்கே இருவர் உணவகத்திற்குப் போவது என்பது பசியாற மட்டுமல்ல, பழகி புரிந்து கொள்ளத்தான்.

ஆனால் இவன் பேசினால், பதிலோ, பிடியோ தரக் கூடாது என்றும் தனக்கே அறிவுறுத்திக் கொண்டாள்.

வாஸந்தியின் பேச்சைக் கேட்டு ஒரு அந்நியனைக் காண, அதுவும் மனதில் கல்யாண திட்டங்களோடு ஓடி வந்தது சர்வ முட்டாள்தனம்!

அப்படி வாஸந்தி என்ன சொன்னாள்?

திவாகர்தான் தனக்கான கணவன் போலல்லவா ஆர்ப்பாட்டம் செய்தாள்!

''கல்யாணமான பிறகும் நீ அடிக்கடி இங்கே ஆக்ஸ் ஃபோர்டுக்கு வரலாம் சுவாதி. திவாகர் இங்கே பிஸினஸ் மூலம் காலூன்ற முயற்சிக்கிறார் - அவருக்கும் நீ பெரிய உதவியாச்சே.''

இதை நம்பிதான் ''நானும் உனக்கு உதவுவேன்'' என்று உளறி அவன் கிண்டலுக்கு ஆளாகியிருந்தாள்!

சுவாதியும் வாஸந்தி வாயைக் கிண்டத்தான் ''என் வாஸி.. அவரைத்தான் உனக்கு ரொம்ப பிடிச்சிருக்கே. நீயே அவரைக் கல்யாணம் செய்துகிட்டால் என்ன?'' எனக் கேட்டாள்.

''உங்கம்மா சொன்னது சரி சுவாதி. ஒரு வயசுக்கு மேலே கல்யாணம், அதைத் தொடர்ந்த மாற்றங்கள் நம்மைக் கலவரப்படுத்துது. கவருவதில்லை! தவிர உங்களுக்குள் ஊர், மதம்ன்னு ஏகப் பொருத்தம்.. ஆக நான் ஒதுங் கிட்டேன்!''

''சரி... நானும் அந்த திவாகரும் பார்த்துப் பேசினதும்...?''

''பிறகு குடித்தனம் பண்ணி, குழந்தைகளைப் பெற்றுக்கணும்!''

''ஷ்ஷு.. நான்சென்ஸ் வாஸி.. முன்பின் அறியாதவரோடு...''

''பெரும்பாலான இந்திய கல்யாணங்கள் அப்படித்தான். ஆனா அதில் மர்மம் என்னன்னா தம்பதிகள் குஷியாய் வாழறதாத்தான் தோணுது!''

தோள் குலுக்கிய வாஸந்தி, கூந்தலை ஒட்ட வெட்டி, ஜீன்ஸ், சட்டைக்குள் இருந்தாள்.

சில வருடங்களே அயல்மண்ணிலிருந்த வாஸந்தி முழுமையாய் மாறியிருக்க, இங்கு பிறந்து வளர்ந்த நான் மிக இந்தியத்தனமாய் இருப்பது சுவாதிக்கு ஒரு சுவாரஸ்யமான ஆச்சரியம்.

மற்றவள் உணவைக் கையால் தொடுவதேயில்லை முள்கரண்டிதான். ஆனால் சுவாதிக்கு நொறுங்க பிசைந்து சாப்பிடுவதுதான் பிடிக்கும்.



தமிழகத்தில் ரசத்தை எப்படி கையில் ஊற்றச் சொல்லி வாங்கி, உறிஞ்சி குடிப்பார்கள் என்பதை அம்மா விளக்கிய துண்டு.

இங்கு அது ரசக்குறைவாக அல்லவாப் போகும்?!

இவள் ஏதேதோ யோசனைகளில் உழல, திவாகரே இவளுக்குமான உணவைச் சொல்லி விட, விரைவில் மணமாய் சீன உணவு வகைகள் அவள் முன் பரப்பப் பட்டன. அவ்வகை உணவு சாப்-குச்சி அல்லது முள் கரண்டியால் சாப்பிட்டாலே சுவைக்கும் என்பதால் அவள் அப்படியே சாப்பிடலானாள்.

வித்தியாசமான மணத்தை, சுவையை அவளது நாக்கு ருசித்தது. ஆனால் நாலைந்து வாய் உணவு இறங்கிய பின் மீண்டும் யோசனைகள் அவளை ஆக்ரமித்தன.

''ஒரேயடியாய் யோசிக்காதே சுவாதி.. சாப்பிடு.''

தன்னை ஒருமையில் அழைத்து, உரிமையாய் அதட்டியவனை அவளுக்குப் பிடிக்கத்தானில்லை.

ஏதோ கொண்டவன் போலல்லவா கொண்டாடுகிறான்? அவன் சொன்னது கேளாதது போல சாப்பிட முயன்றாள்.

''சாப்பாடு நல்லாயிருக்கில்ல?''

''ம்ம்.''

''சொர்க்கம் எதுவாம் தெரியுமா? அமெரிக்க சம்பளம் சீன உணவு அப்புறம் இந்திய மனைவி.''

லேசாய் புன்னகைக்க முயன்றாள்.

''நரகம் - 'அமெரிக்க மனைவி, இங்கிலீஷ் உணவு. அப்புறம் இந்திய சம்பளம்!'''

"இது உங்க அனுபவமா?"

"அனுபவசாலிகள் சொன்னது. நான் ஆமோதிக்கறேன். அவ்வளவுதான்."

தலையைத் துளி தாழ்த்தி சிரித்தான்.

சிரித்தால் இவன் அத்தனை மோசமாய் தெரியவில்லையோ?

சுவாதி யோசித்தாள்!

மிகச் சிறிய இருவருக்கு மட்டுமேயான அந்த மேஜையின் கீழ் தங்களது கால் முட்டிகள் உரசுவது வேறு புதுத் தவிப்பாயிருந்தது. கால்களை சரித்து ஒதுங்கினாள்.

"உனக்கு ஆன்ட்ரோ போஃபியா உண்டா, சுவாதி?"

கரிசனையாய் கேட்டவனைக் கேள்வியுடன் நோக்கினாள்.

"என்ன புரியலியா?"

"ஃபோபியான்னா பயம்... அதீத பயம்னு தெரியும்."

"ஆன்ட்ரோன்னால் ஆண்கள்!" - விளக்கியவனின் கண்கள் சீண்டின!

சண்டியராக அல்லவா இருக்கிறான்!

அவசரமாய் ஒரு வாய் நூடில்ஸைத் திணித்தாள்.

"இவ்வளவு மும்முரமாய் சாப்பிட்டால் எனக்கு பதில் சொல்ல வேண்டியிராதுன்னு நினைக்கறே... ம்ம்?"

நிதானமாய் மென்று விழுங்கியவள் சொன்னாள் -

"கோபப்படும் போது மூளையை விட நாக்குதான் வேகமாய் வேலை செய்யும்னுவாங்க. அதான் அதற்கு வேறு வேலை, அதாவது சாப்பிடற வேலையைக் கொடுத்தேன்."



"மூளை இல்லாதவங்களுக்குத்தான் கோபமே வருகின்றது என் எண்ணம்.. சரி.. இப்ப உன்னைக் கோபப்படுத்த நான் என்ன சொல்லிட்டேன்?"

அவள் அடுத்த கரண்டி உணவை வாய்க்குள் திணிக்க, திவாகர் வாய்விட்டு, சிரித்தான்!

அடக்க முடியாத, அவன் அடக்கவும் முயலாத சிரிப்பு பொங்கி வெடித்தது.

"கூடப் பிறந்தவங்க இல்லாததால் நீ ரொம்ப தொட்டாச் சிணுங்கியாய் இருக்கே சுவாதி. ஆனால் அதுவும் கூட உனக்குப் பொருந்தும். சரி இப்ப சைனீஸ் உணவை ரசிச்சிட்டிருக்கோம் - என் வாழ்க்கைத் துணையாய் இந்திய, அதிலும் தமிழ் பெண் வேணும்னும் முடிவு பண்ணிட்டேன். ஆனால் இந்திய சம்பளம் ஒண்ணுதான் நான் சொர்க்கத்தை அடைய சின்ன தடைகல்லாய் இருக்குது."

"ஹென்றி ஃபோர்ட் பெரிய பணக்காரர்தான் - ஆனால் அவர் தெளிவாய் சொல்லியிருக்கார் -

"பணம் தவிர வேறு எதையும் தராத தொழில் அற்பமான தொழில்'னு.."

இப்போது அவன் கண்களில் சதா மின்னிய சிறு கேலி மறைந்து வேறு ஒரு புது பாவனை துளிர்த்தது.

ஆனாலும் அதை ஆராயாமல் ஒரு மிடறு லெமன் தேநீரைப் பருகினாள்.

"உண்மைதான் சுவாதி. ஆனால் திரைகடலோடி திரவியம் தேடவும் நம்மவங்க சொல்லியிருக்காங்களே - அதான் என் பிஸினஸை வெளிநாட்டிலும் பரப்பலாமான்ர ஒரு யோசனை. அது பணம் மட்டுமல்ல, என் மீது எனக்கொரு புது நம்பிக்கையை, சவாலை, திருப்தியைத் தரும் ஆசை..."

அவன் தந்த விளக்கம், இவளையும் அவனை ஒரு புது கோணத்தில் பார்க்க வைத்தது. ஆக, தன்னை மதித்து விளக்கம் அளிக்கிறான்.

''பட்டில் ஆண்களுக்கான 'டை'யும், பெண்களுக்கு 'ஸ்கார்ஃப்பும்' தயாரித்து விற்றால்.. வெளிநாட்டில்...''

''நல்லா விற்கும். நம் நாட்டு பட்டிற்கு இங்க ரொம்ப மரியாதை'' ஆமோதித்தாள்.

''ம்ம் - அதை உணர்ந்ததால்தான் இந்த ஏற்றுமதி முயற்சி. சரி. நீ இந்தியாவிற்கு இறக்குமதி ஆக விரும்ப காரணம் என்ன?''

அவன் ஒரு 'பேட்டி' எடுப்பது போல கேட்ட விதத்தில் அவளையும் மீறி புன்னகைத்தாள்.

''நான் இந்தியன் என்பதால்.. அம்மா, சதா அவங்க ஊரைப் பற்றி பேசுவாங்க...''

''நீ இதுவரை உன் ஊர்.. அது?''

''திருநெல்வேலி.''

''அங்கே போனதேயில்லை நீன்ரதை நம்ப முடியலை.. அத்தனை தமிழ் வாசம் உன்னில்...''

''ரோஜா எங்கே எந்த மண்ணில் பதிஞ்சு பூத்தாலும் அதே வாசனைத்தானே...?'' சொன்ன பிறகு சற்று வெட்கமாய் போனது அவளுக்கு. தன்னை ரோஜாவிற்கு ஒப்பிட்டதை கர்வம் என்று நினைப்பானோ...?

''வந்து... சும்மா ஒப்பு.. உவமைக்காய் சொன்னேன்...''

''ரொம்பக் கச்சிதமான உவமை. இங்கே தொழிலில் ஏதும் பிரச்சினையா?''



''பிரச்சினைனு இல்லை... கடும் சரிவில் மேலேறுவது பிரச்சனையில்லை - ஆனா.. சிரமந்தானே? அது போல.''

''தனியே ஒரு விடுதியை நடத்துவது கடும் சவால் தான். தினம் மூச்சு வாங்கும்.''

அவன் தன் 'பிரச்சினையைப் புரிந்து, பேசிய விதம் அவளுக்குப் பிடித்திருந்தது.

''தவிர ஒத்தாசைக்கு ஆட்கள் கிடைக்கறதில்லை. இனி வருங்காலத்தில் எப்படியோ?''

''மேலும்.. சிரமமாகும்...''

''தவிர... இந்தியாவிலுள்ள அம்மாவின் பூர்வீக சொத்தில் ஒரு பங்கு எனக்கு வந்திருக்குது. அங்கே.. அந்த வீட்டை, உறவினர்களைப் பார்த்து வரணும்னு ஒரு ஆசை... ஆனா அம்மாக்கு என்னைத் தகுந்த துணையோடுதான் இந்தியா அனுப்பணும்னு ஒரு எண்ணம்...''

ஏன் இத்தனையையும் இவனிடம் சொல்கிறோம் என்று தோன்ற நிறுத்திக் கொண்டாள்.

ஆனால் திவாகர் மிக இயல்பாய் தொடர்ந்தான்.

''பூர்வீக வீடுன்னா பழையதாயிருக்கும். நிறைய மராமத்து வேலைகள் இருக்கும்.. செலவு இழுக்கும். ஆனால் இங்கிலீஷ் பவுன்ட் ஒன்று அங்கே எண்பது ரூபாய் தரும். ஆக சமாளிச்சுடலாம். ஆனால் யாரும் உன்னை ஏமாற்றாமல் கவனமாயிருக்கணும்...''

சாப்பிட்டு முடித்ததும் புன்னகையோடு உணவிற்கான பணத்தை சிப்பந்தியிடம் திவாகர் தந்த போது இவளுக்கு குறுக்கிட்டு பாதி பணம் தரத் தோன்றவில்லை!

# 4

சற்று சகஜமாய் உருள ஆரம்பித்த அவர்களின் பேச்சு அவன் 'ஏமாற்று' பற்றிக் குறிப்பிடவும், அவளுள் சிக்கியது.

பெண்களைப் பிறர் ஏமாற்றுவது இருக்கட்டும், அவர்களை ஏமாற்றும் முதல் எத்தர்கள் அவர்களின் புருஷர்கள்தானே...?

ஆப்கானிஸ்தானில் பெண்கள் தங்கள் புருஷர்களின் பின்னே பத்து அடி இடைவெளி விட்டே நடக்க வேண்டுமாம். சமீபமாய் அங்கு சென்ற ஒரு வெளிநாட்டவர், மனைவி 10 அடி முன்னே நடக்க, கணவன் தொடர்வதைக் கண்டு ஆச்சரியமாய் ஆனந்தித்தாராம் -

''பெண்கள் இவ்வளவுக்கு முன்னேறி விட்டீர்களே'' என்று. ஆனால் மனைவி ஒருத்தி காரணத்தைத் தெளிவு படுத்தினாளாம் -

''அப்படியில்லை. வழிநெடுகக் கண்ணி வெடிகள் புதைத்து வைக்கப்பட்டிருக்கின்றன'' என்று!

ஆக பெண்களைப் பலிகடா ஆக்குவது ஆண்களுக்கு பழக்கந்தான் - தன் தகப்பனைப் போல...

பாதி வாழ்வுவரை நம்பி வந்தவளை 'திடும்'மென உதறிவிட்டுப் போனவர் தானே?

இதோ இந்த திவாகரும்தான் யோக்யமா என்ன?

இங்கிலாந்தில் தன் தொழிலைக் காலூன்ற வைக்க, தன்னைப் பயன்படுத்தத்தானே முயலுகிறான்?

ஆனால் தானும் ஒன்றும் உத்தம ரத்தினமல்லவே - கௌரவமாய், பாதுகாப்பாய் தாய்நாடு போய் இறங்க, அவ்வப்போது இங்கிலாந்தும் வந்து போக இவன் தோது என்றுதானே இவனை சந்திக்க வந்திருக்கிறாள்?

இவர்கள் சாப்பிட்டு முடிப்பதற்குள் வெளியே சிறு மழை பெய்து ஓய்ந்திருந்தது - உலகம் மேலும் பொலிவாகியிருந்தது. ஈரக் காற்றை அனுபவித்தபடி அவனுடன் நடந்தாள்.

''நீ இந்தியாவில் செட்டிலாக ஆசைப்படறது சரி, சுவாதி. ஆனால் அதற்குத் திருமணம் உதவும்னு நீ நினைக்க வேண்டாம். இப்ப அங்கே பெண்கள் முன்பு போலில்லை... இருபத்தியிரண்டு வயசில் படிப்பை முடிச்சு, நாலு வருஷம் வேலை பார்த்த பிறகுதான் தினத்தாளின் 'மணப்பந்தல்' பகுதியை நோட்டமிடறாங்க. ரொம்ப அலசி, யோசிச்சு செய்த திருமணங்கள் கூட நிலைக்கறதில்லை. விவாகரத்துக்கள் அதிகம்...''

இவள் மெல்லிய அதிர்ச்சியுடன் அவன் பேச்சைக் கேட்டிருந்தாள். இந்தியாவின் மாற்றம் மட்டுமல்ல அவளை உலுக்கியது, திருமணமின்றியே நீ உன் நாட்டிற்குப் போகலாம் என்றவன் சொன்னதும்தான்.

''இங்கிலாந்தும் மாறியிருக்குதுன்னாங்க என் சித்தி. இப்போ லிவிங்டுகெதர் சகஜமாயிருக்குது. இருபது வருஷங்களுக்கு முன் அப்படியில்லையே...''

அவன் சொன்னது வாஸ்தவம்.

'கறுப்பு காமெடி' ரக நாடகம் ஒன்றிற்கு ஓசி டிக்கெட் ஒன்று கைக்கு வர, சுவாதி அங்கு போய் உட்கார்ந்த பத்தே நிமிஷத்தில் வெளியேறிவிட்டாள். கண்ணியத்திற்குப்

பேர் போன இங்கிலாந்து மக்கள் எப்படியிந்த கொச்சை வசனமுள்ள, அருவெறுப்பான காட்சிகளை ரசிக்கிறார்கள்? ஆக மாற்றங்கள் உலகைப் புரட்டிப் போட்டுக் கொண்டிருக்கின்றன தான்.

ஆனால் அவன் சொன்ன கருத்தில் அவன் மீதான இவளது வெறுப்பும் கூட வெகுவாய் விலகியிருந்தது.

ஆக அவன் தன்னை நிர்பந்திக்கவில்லை.

நானில்லாமலும், என் மனைவியாக இல்லாமலும் நீ உன் நாடு போகலாம் என்கிறானே...?

தன் காலில் தனியே நிற்கும் கௌரவத்தைதான் இவளும் வேண்டுவது. கலா ஆன்ட்டி, தோழி வாஸந்தி, ஏன் மிஸஸ். ரிச்சர்ட்ஸ் எல்லாருமாய் சேர்ந்து தன்னை சற்று குழப்பி விட்டார்கள்.

''ஆனால் என்னோடு வருவது உனக்குப் பல விதங்களில் வசதி. போய் இந்தியாவில் உன் வீட்டைப் பாரு.. மற்ற விஷயங்களைப் பிறகு யோசிக்கலாம்...''

திவாகர் இலகுவாய் சொல்ல, இவளும் பேசினாள்.

''உங்க அப்பா, அம்மா.. இங்கேயா, இந்தியாவிலா?''

''ல்ல.. இறந்தாச்சு.. அதான் சித்தி எனக்கு மும்முரமாய் பெண் தேடறாங்க... அதுவும் இங்கே'' முறுவலித்தான்.

அந்த முறுவல் அவளுக்கு இப்போது பிடித்திருந்தது! தன்னை சிலர் திருமணத்திற்கு நிர்பந்தித்தது போல, அவனும் அதே நிலையில் சிக்கிக் கிடப்பவன் என்ற ஒரு மன இளக்கம்!

'தான் அநாதை' என்பதை அவன் பரிதாபமாய் சொல்லாமல் சாதாரணமாய் சொன்னதை வியப்பாய் கவனித்தாள்.



''சித்தி குடும்பத்தார் மட்டுந்தானா?''

''அக்கா ஆர்மி மேஜரைக் கல்யாணம் செய்து, வெள்ளிப் பனிமலையில் குடித்தனம் செய்கிறாள். அங்கே தம்பிக்குத் தகுந்த பெண்கள் கிடைக்காததால் சித்தியைத் தூண்டி விடறது மட்டுந்தான் இப்போ அவளாலானது.''

சாலையைக் கடப்பதற்காய் அவர்கள் நிற்க, அவன் தன்னை மிக உன்னிப்பாய் கவனிப்பது புரிந்தது. இந்த மண்ணில் அப்படி ஒருவரை முறைப்பது அநாகரீகம் - அதை பெற்றோர் பிள்ளைகளுக்கு இளம் வயதிலேயே சொல்லித் தர, யாரும் மற்றவரை வெறிப்பதில்லை.

அம்மா சொன்னதுண்டு.

''முதன்முதலில் நாங்க இங்கிலாந்தில் இருந்தது ஏறக்குறைய சேரி போன்ற பகுதி. அங்கே என்னை வெறித்த ஆண்களைக் கண்டு பயந்து உன் அப்பாட்ட அழுதேன் - ''படிக்காத காட்டான்கள் என்னை முழுங்கிடறது போல பார்க்கறாங்க''ன்னு. ஆக படித்த கண்ணியவான்களிருந்த பக்கமாய் தேடி ஆக்ஸ்ஃபோர்டில் குடியேறினோம். ஐம்பது கல்லூரிகள் கொண்ட அந்த பழமையான டவுன் எங்களுக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சு. பதினோராம் நூற்றாண்டிலிருந்து கல்விக்காய் எழுப்பப்பட்ட கம்பீர கட்டிடங்கள். தங்கள் அறிவை மேலும் செழுமையாக்கிக் கொள்ள அங்கு வந்து சேரும் மாணவர்கள்னு - ரசிச்சுதான் வாழ்ந்தேன்.. திரும்பிய திசையெல்லாம் படிப்பை மென்று தின்று முகமெல்லாம் அறிவுகளை வீச நிற்கும் இளையவர்கள்... ஆனா...''

தாயின் பெருமூச்சிற்கான காரணம் சுவாதிக்குத் தெரியும். படிக்காத காட்டான் என அவர்கள் சொன்னதற்கான தண்டனைதானோ என்னவோ... அங்கு படிக்க வந்த ஒரு

மேதாவிப் பெண் இவளது அப்பாவைக் கவர்ந்து.. கொண்டே போய் விட்டாள்!

அவளும் பஞ்சாபி என்பதால் உரிமையாய் அடிக்கடி அவள் தனது கணவனுடன் பேசிச் சிரித்ததை அம்மா பொருட்படுத்தாமல் சமையலறையில் ஒண்டியாய் உழன்றாள். அப்பாவும் அந்த மாணவியும் பேச்சில் ஆரம்பித்தவர்கள், பிறகு கண்கள் கலந்து, மனம் ஒன்றிப் பிசைந்து - பின் தொட்டு தாளித்து விட்டார்கள்...!

படித்த அந்த புண்ணியவதியோடு 'ஓடி'ப் போன அப்பா பெரும் மனதுடன் நாற்பது வருஷ லீஸிற்கு எடுத்த அப்பழைய கட்டிடத்தை அம்மாவிற்கு விட்டுப் போனார் - கூடவே சுவாதியையும்!

முறைப்பதில் ஆரம்பித்த தன் மனது தன் தந்தையை தான் வெறுக்கும் காரணத்திற்குத் தாவி விட்டது புரிவதற்குள், அவள் கையைப் பற்றியவன் சாலையைக் கடந்து கொண்டிருந்தான்.

அதிகமாய் அழுத்தாத, இதமான தொடுதல்.

சாலையை கடந்த பின் அவன் கை விலக், சிறு வெறுமை உணர்ந்தாள்!

மீண்டும் அம்மாவின் இழப்பு மனதைப் பிசைந்தது.

ஒரு ஆணின் அன்பு. அண்மையெல்லாம் மிக சுகம் தானோ?

தன் பசியறிந்து, சரியான ஒரு உணவகத்திற்குக் கூட்டிப் போய் உண்ண வைத்து கைபிடித்து பாதுகாப்பாய் கூட்டிச் செல்பவனைப் பிரிந்தால் துளி கலவரமாய் இருக்குமோ?



அப்படியெனில் காலமெல்லாம் இவரோடுதான் என்று கனிந்திருந்த அம்மாவின் அதிர்ச்சி எவ்வளவு அதிகம்...?

தனக்காய் அம்மா அதை ஜீரணித்துக் கொண்டு, இயங்கியது இப்போது மகளுக்குப் புரிகிறது.

''பயப்படாதே திகையாதே - நான் உன்னோடே கூட இருக்கிறேன்'' என்ற வேத வசனங்கள் வீட்டின் சுவரில் ஆறுதலளித்தன.

''பஞ்சு பல கஷ்டங்களுக்குப் பிறகுதான் மானம் காக்கும் ஆடையாகுது - துன்ப அனுபவங்கள் மனுஷனுக்கு விவேகம் கற்றுத் தருதும்மா.'' என்று தத்துவம் பேச ஆரம்பித்தார்கள் அம்மா.

''அற்பமாய் முயன்றார் யாரும்
அறிவினால் பழுத்தவர் இல்லை
கற்பூரத் தீயினாலே
கற்சூளை வெந்தா போகும்?''

என்ற சுரதாவின் வரிகள் அவரது டைரியில் சிவப்பு மையில் பளிச்சிட்டன.

கடும் உழைப்பினால் அம்மாவின் 'இந்தியன் ஹவுஸ்' ஸிற்கு நல்ல பெயர். அந்த உழைப்புதான் அவரது எலும்புகளை தேய்த்து, எலும்புருக்கி நோயை தந்து விட்டதோ?

தாயை இழந்த தனக்குத் தாய்மண்ணின் அண்மை, ஆறுதலேனும் தேவை என்று ஒரு ஏக்கம் தினம் தினம் சுவாதியினுள் வளர்ந்து கொண்டிருந்தது.

தனக்கு பூர்வீக வீட்டின் ஒரு பகுதியைத் தந்திருப்பதாகவும், வந்து அது சம்பந்தமாய் வேண்டிய முடிவுகளை எடுக்க வேணும் என்ற தகவலுடன் வந்த நெல்லை

மாமாவின் கடிதத்தைப் பார்த்தவளுக்கு ரொம்பவே ஆச்சரியந்தான். மனசு உறவைத் தேடி மேலும் இளகியது - ஆனால் கலா ஆன்ட்டி அதை பெரிதுபடுத்தவில்லை.

"உங்கம்மா சொன்னதையெல்லாம் வச்சு யோசித்தால், இதுலே ஏதோ வஞ்சம் இருக்குமோன்னு படுது, சுவாதி. உன்னைத் தனியே அங்கே அனுப்பறதில் எனக்கு இஷ் டமேயில்லை. நானும் வாஸந்தியும் உங்கூட வரலாம். ஆனா அவங்களுக்கு ஒரு கூட்டம் பெண்களைக் கண் டால் இளப்பந்தான். இந்திய சட்ட திட்டம், நுணுக்க மெல்லாம் எனக்குப் பரிச்சயமில்லை. அதனால் நீ தக்க ஆண் துணையோடுதான் அங்கேப் போகணும்.. அதுக் காய் அவசரப்பட்டு நாங்க ஒருத்தனைப் பிடிச்சிட் டோம்னு நினைக்காதே. இந்த திவாகர் எனக்குத் திருப்தி யாய் படறான்..."

ஆனால் சுவாதி ஆண்களை நம்ப விரும்பவில்லை.

அவளது அப்பாவின் முன்னுதாரணம் அப்படி!

அவர் அப்படித் தங்களைக் கைகழுவி விட்டு ஓடா திருந்தால், அம்மா இன்று உயிரோடு இருந்திருக்கக் கூடும்.

ஆண் துணை வேண்டி இவளும் இப்படி ஒரு முச்சந்தியில் வந்து நிற்கத் தேவை இருந்திருக்காது...

எண்ணங்களின் கசப்பு, காட்டம் தாளாமல் சுவாதியின் கை முஷ்டிகள் இறுக மூடின.

"வேண்டாதவைகளையே நினைச்சு உன்னை வருத் திக்காதே சுவாதி. எதிர்காலத்தை நம்பிக்கையோடு எதிர்நோக்கலாம். தகுந்த துணை வாய்த்தால் வாழ்க்கை சுவாரஸ்யமாயிடும்.. சந்தோஷமும்தான்..." என்று



சொன்ன திவாகர் அவள் தோள்களைத் தன் இடது கையால் சுற்றிக் கொள்ள, அவள் உடம்பு சிலிர்த்தது.

அது வெறுப்பினாலா அல்லது விருப்பா.. எனக் குழம்பி, திகைத்து நின்றாள் சுவாதி!

# 5

அப்பெரிய ஆஃப்ரிக்கன் தன்னை உரசுவது போல கடந்து சென்றதும் தான் அவளுக்கு உறைத்தது - அதுவும் அவனிடமிருந்து வீசிய நாற்றம்தான் விளக்கியது.

அக்குடிகாரனின் தள்ளாட்டத்தைக் கண்டு தன்னைப் பாதுகாப்பாய் ஒதுக்கியிருக்கிறான் திவாகர்...

தான் ஏன் அதைக் கவனிக்கவில்லை?

அப்பாவைப் பற்றிய கசந்த எண்ணங்கள் தன் கண் களைக் கட்டியிருந்தன போலும்.

ஆனால் திவாகரனின் தொடுதல் அவளை மிக மிரட் டியது.

பாதுகாப்பாய், பதமாய் அவன் கரம் தன்னை அணைத் ததை தன் மனம் விரும்பியதோ என்ற மிரட்சி!

"கல்யாணம்ன்ர எண்ணம் உன்னைக் குழப்பி கலவரப் படுத்துதுன்னு நினைக்கறேன் சுவாதி..."

ஆழ மூச்செடுத்தவள் ஒத்துக் கொண்டாள்.

"ஆமா.. எனக்கு இப்ப இந்தியா போகணும்.. அவ்வளவு தான். அதை கலா ஆன்ட்டி, வாஸி எல்லாம் கல

...யாணத்தோடு முடிச்சிட்டு நீளமான பிரச்சனையாக்கிட்டாங்க...''

''இந்த குழப்பத்திற்குக் காரணம் உங்கப்பான்னு நினைக்கறேன்...''

''ல்ல... அவரால்தான் இவ்வளவு தெளிவாய் சிந்திக்கறேன். நினைச்ச நேரத்தில் ஆண்கள் தங்களின் மனசை, துணையை மாற்றிக்கிடுவாங்கன்றதைப் புரிஞ்ச தெளிவு!''

''உனக்குத் தெரிஞ்ச எல்லா ஆண்களும் அப்படித்தானா? இல்லை 60%......... 40% மட்டுமா?''

அவன் வெகு இயல்பாய் கேட்க, இவளுக்குள் சுருக்கென்றது.

பதிலின்றி நடந்தாள்.

அப்பாவைப் போன்ற கயவர்கள் வேறு யார் யாரை அவளுக்குத் தெரியும்? கேள்விப்பட்ட வெகு சில கதைகளை ஒதுக்கி விட்டால், அவள் அறிந்த தம்பதிகள் அனைவரும் அன்பு கெடாமல் குடித்தனம் செய்வதாய் தானே படுகிறது? ராபர்ட் தம்பதிகளின் அந்நியோன்யம் சில சமயங்களில் அவள் கண்களைப் பனிக்கச் செய்திருக்கிறதே?

கணவரோடு பகிர்ந்துதான் எதையும் சாப்பிடுவார் மிஸஸ். ராபர்ட்.

மனைவியை சற்று கனமான எதையும் தூக்க விடமாட்டார் அவர்.

ஏன் - இப்போதுள்ள இளைய தலைமுறை கூட கல்யாணம் வரை போக அஞ்சிதானே 'சேர்ந்து வாழ்வது?' திருமணம் பவித்ரமான பந்தம் என்று புரிந்துதான் எட்டி நிற்கிறார்களோ?



தான்தான் திருமணத்தை அல்ப சொல்பமாய் நினைத்து விட்டோமோ?

''வாளை மீனுக்கும், விலாங்கு மீனுக்கும் கல்யாணம்'ன்ர பாட்டு ரெண்டு, மூணு வருஷங்களுக்கு முன் தமிழ்நாட்டுல ரொம்பப் பிரபலம்.. சதா ரேடியோ, டி.வி.யில, கல்யாண, விசேஷ வீடுகளில் அதுதான்...''

அவளும் அதைக் கேட்டதுண்டு. ஆனால் என்ன தொடர்பில் 'திடும்'மென அதைச் சொல்ல வருகிறான் என்பது புரிவயில்லை.

''ஓவியர், மேதை லியோனடா - வின்ஸி அதை ஒத்த ஒரு கருத்தைச் சொல்லியிருக்கார் -

'பாம்புகள் நெளியும் ஒரு மூடிய கூடைக்குள் ஒருவன் தன் கையை விட்டு, ஒரு விலாங்கு மீனை அதிலிருந்து உருவி எடுத்துத் தப்பும் அதிர்ஷ்டம் போன்றது கல்யாணம்னு!' ''

''இப்போதான் ஆண்களுக்கும், தாம்பத்தியத்திற்கும் ஆதரவாய் பேசினீங்க...?''

''பாவம் - சொன்னப்போ டாவின்ஸிக்கு என்ன பிரச்சனையோ, சோதனையோ? ஆனால் திருமணம் அத்தனை குழறுபடியான சமாச்சாரம்னால் அத்தனை பேரும் அதை ஏன் செய்துக்கணும்... அதுவும் சந்தோஷமாய்?'' அவன் சொல்ல இவள் பொதுவாய் தோள் குலுக்கினாள்.

''அந்தக் காலத்தில் சொல்றதுண்டு - 'காசிக்குப் போனவங்க திரும்ப மாட்டாங்க'ன்னு. அங்கென்ன போறவங்களைக் கொல்ல புலியோ பூதமா உண்டு? பிள்ளைகளுக்குக் கல்யாணம் செய்து வைச்சுட்டு ஐம்பது வயசிலே யாத்திரைன்னு கிளம்புவாங்க.. அக்காலம் காசி

போய் சேரவே ரெண்டு வருஷமேனும் ஆகுமாம். பிறகு அங்கே தங்கி செய்து, சேர்த்த பாவம் தீர குளித்து விட்டு, ஊர் திரும்ப மறுபடி ரெண்டு வருஷமாகும்.. ஆக பலர் ஊர் வந்து சேர்வதில்லை - ஆனா இப்ப நிலைமை அப்படியில்லையே - ஒரு நாள் காலை போனால், மறுநாள் ஊர் திரும்பிடலாம்.''

இதையேன் தன்னிடம் சொல்கிறான் என்று மறுபடி ஒரு குழப்பம். ஒரு பெரிய பிரயாணத்தை, மாற்றத்தைத் தான் எதிர்நோக்கியிருப்பதாலா? நினைத்ததைப் பேசுகிறான்...

ஆக தானும் தோன்றியதைப் பேசலாம் போல இவளுக்குள் ஒரு தளர்வு.. உந்துதல்.

''அப்படி நீ இந்தியா கிளம்பணும்னா - இங்குள்ள 'இன்டியா ஹவுஸை' என்ன செய்யப் போறே சுவாதி?''

''நாற்பது வருஷ லீஸிற்கு எடுத்தது - இன்னும் பாதி வருஷங்கள் இருக்குது - அதற்கு யாரேனும் நல்ல விலைத் தருவாங்கன்னால், அவங்களிடம் ஒப்படைச்சிடுவேன்.''

''அப்ப, ஏஜென்ஸியிடம் சொல்லி வச்சாச்சா?''

''ல்ல.. அந்தந்த பகுதி செய்தித் தாளில் முதல் விளம்பரப்படுத்தலாம்ன்ர யோசனை. தரகர்களை இடையே வர விட வேண்டாம்னு.. நினைச்சேன்.''

''அதுவும் சரிதான்.. அல்லது விற்காமல் அதை அப்படியே வைத்திருக்கலாம் நீ...''

''பராமரிக்கலைன்னா அந்தப் பழைய கட்டிடம் பாழாகிடும். தோட்டம் காடாய் மண்டிடும்... ரிச்சர்ட் தம்பதிகளால் சமாளிக்க முடியா[illegible]ர தங்கியிருக்கும்



மாணவிகளிடம் முதலில் காலி பண்ணக் கேட்கணும். அவங்களும் வேறு இடம் பார்க்கணும்...''

அவனது கண்களைப் பார்த்து பேச, அவள் தன் மோவாயை தூக்கி நிமிர வேண்டியிருந்தது.

''நான்.. கிளம்பணும் - உணவிற்கு நன்றி...''

''சேர்ந்து உண்டதை நானும் ரசிச்சேன்.. ஆனா நன்றியை வெறுமே வார்த்தைகளில் சுருக்கி விட்டால் எப்படி?''

சற்று குழப்பமும் கோபமுமாய் அவனை ஏறிட்டாள்!

''மறுபடி நாம் எப்போ, எங்கே சந்திக்கலாம்னு சொல் என்கிறேன்.''

அவன் புன்னகையின் ஓரமாய் குறும்பிருந்தது.

''அடுத்த சந்திப்பு பற்றி ஆவலாய் கேட்குமளவு நமது சந்திப்பு அத்தனை சுவாரஸ்யமாய் இருந்ததா என்ன?'' அவனுக்கு ஈடுதரும் ஒரு நக்கல் தொனியில் கேட்டாள்.

''நிச்சயமாய் - விறுவிறுப்பான புத்தகத்தைப் பாதி வாசிப்பில் விட்டுட்டது போலிருக்குது...!''

இவன் தன்னை கிண்டலடிக்கிறான் என்ற எரிச்சலில் -

''இனி, நாம சந்திப்பது அவசியமில்லைன்னு நினைக்கிறேன்'' - என்றாள் சுருக்கமாய்.

''உன் போன் நம்பர் என்னிடம் இருக்குது சுவாதி. ஏதும் தகவல் இருந்தால் கூப்பிடறேன்'' என்றபடி கையசைத்தான் அவன். மறுகணம் அவன் திரும்பி நடந்து விட, சிலையாய் நின்று அவன் நடந்து போவதையே பார்த்திருந்தாள் அவள்!

அன்றிரவு உறக்கம் அத்தனை லேசில் அவளை நெருங்கவில்லை. அவனை முதன் முதலாய் பார்த்த

தோற்றம், தோரணையிலிருந்து, அவர்களது பேச்சு, அவன் கையாட்டி விடைபெற்றது வரை உள்ளே படமாய் ஓடியது.

'நீ என்னைக் கல்யாணம் செய்ய வேண்டிய அவசியமில்லை' என்றான்.

'இந்த காலம் பயணப்படுவது வெகு சுலபம்' என்றான்.

'எல்லா ஆண்களும் கயவர்கள் இல்லை' என்றவன், டாவின்ஸி திருமணத்தை அவரவர் அதிர்ஷ்டம் பொறுத்தது என்றும் ஏன் சொன்னான்?

அவன் குழம்பியிருந்தானா.. அல்லது இவளைக் குழப்பும் முயற்சியா?

ஆனால் அவன் தன் பசியறிந்து உண்ண வைத்ததும், பாதுகாப்பாய் நடத்திச் சென்றதும் இதம்தான்.

திரும்ப தொடர்பு கொள்வானாமே...?

சகலமும் எண்ணி முடித்தவள், உதட்டில் சிறு புன்னகையுடன் உறங்கிப் போனாள்!

சலவை இயந்திரம் அழுக்கு நீக்கிய துணிகளை இவள் மதிய வெயிலில் உலர விட்டுக்கொண்டிருந்த நேரம், மிஸஸ். ராபர்ட்ஸ் அவசரமாய் எட்டிப் பார்த்தார் - சிரிப்பில் பூரித்த அவரது கன்னங்கள் சற்று அதிகமாகவே சிவந்திருந்ததை ரசித்தவள்,

''எஸ் மிஸஸ். ராபர்ட்ஸ்?'' - என்றாள் கேள்வியாய்.

''அவர் வந்திருக்கார் ஸ்வாதி.''

முதியவளின் நீலக் கண்கள் மின்னின.

ரோஜா நிற சருமத்திற்கு நீலக் கண்கள் வெகு தோது என்று வழக்கமாய் நினைக்கும் சுவாதிக்கு கடந்த இரு



நாட்களாய் அவனது பழுப்பு சருமமும், அடர்ந்த புருவங்களுக்குக் கீழே மின்னிய கருப்பு விழிகளுமே அடிக்கடி ஞாபகத்திற்கு வந்தபடி இருந்தன!

''யாரு?''

''நம்ப பாஸ் - உட்கார சொல்றேன்'' - என்றபடி அவர் போய்விட கைகளைத் துடைத்தவளுக்கு 'திக்'கென்றது - 15 வருஷங்களுக்கு முன்பு தவிக்க விட்டுப் போன அப்பாதான் திரும்பி விட்டாரோ என்று. ஆனால் அதனை இத்தனை உற்சாகமாய் அறிவிக்கப் போவதில்லை மிஸஸ். ராபர்ட்ஸ்.

முன்னறைக்கு வந்தவள் திகைத்துப் போனாள்!

## 6

சற்று முன்பு கூட அவள் நினைத்து வியந்த அந்த கறுப்பு விழிகள் இவளது திகைப்பை ரசித்து.. பின் கேலியாய் சுருங்கின.

''எதிர்பார்க்கலை இல்லையா சுவாதி?''

''இல்ல - என்ன விஷயம்?''

''அடடா.. தமிழர் பண்பாடு உனக்குச் சொல்லித் தரப்படலை போலவே.'' அவன் அலட்டலாய் வருந்திய விதம் சிரிப்பு மூட்டினாலும், முகத்தை சிடுசிடுப்பாகவே வைத்தவள்,

''அதெல்லாம் தெரியும் - இப்ப அந்த உபசரிப்பு அவசியம்னு தோணலை - அவ்வளவுதான்'' - என்றாள்.

"அதுதான் இந்திய விருந்தோம்பலின் விசேஷமே. எதிரியே எதிர்பாராமல் அதாவது போன் செய்து அனுமதி கேட்காமல் வந்து விட்டாலும் முகம் சுளியாமல் வர வேற்கணும்."

"ஓஹோ.. அப்ப ரௌடி, கொள்ளைக் கும்பலுக்கு ரொம்ப கொண்டாட்டம்தான்."

"ம்ம் - கெட்டிக்காரத்தனமான சமாளிப்பு" - என்றவன் இவளது 'வாங்க' வை எதிர்பாராதது போலவே 'உட் காருங்க' வரும் முன்பே வசதியான ஒரு இருக்கையில் அமர்ந்தான்.

"மிஸஸ். ரிச்சர்ட்ஸ் ஏதோ 'பாஸ்'னாங்க...?" இழுத் தாள்.

"ரெண்டு நாள் முன்னே என்னை சந்திக்கத்தான் சுவாதி 'கவன்ட் கார்டன்' வந்திருந்தான்னதுமே அந்தம்மா புரிஞ்சுகிட்டாங்க. நம்ப கல்யாணத்திற்குப் பிறகு உனக்கு, இந்த இடத்திற்கு பாஸ் நான்னு..."

"நான்சென்ஸ் - நம்ப சந்திப்பின் போது, திருமணம் ரொம்ப ரிஸ்க்கான விவகாரம், அது அவசியமற தில்லைன்னு நாம பேசினதாய்தான் எனக்கு ஞாபகம் - பிறகேன் இப்போ கல்யாண பேச்செடுக்கறீங்க?"

"நீ என்னைத் தேடி வந்தது மாப்பிள்ளை - பார்க்கும் படலம்தானே சுவாதி? பஜ்ஜி சொஜ்ஜின்னு இல்லாம நான் உனக்கு சைனீஸ் மீல்ஸே வாங்கித் தந்தேன் - காலெல்லாம் உரச நாம சேர்ந்து சாப்பிட்டோமே...?"

அவனது அப்பாவி முகமும் தொனியும் மிக வேடிக் கையாய் இருந்தாலும் இவளுக்குள் கோபமும் பொங் கியது.



"மறக்கலை - அதே போல உங்களுக்கும் நான் சொன்னது நினைவிருக்கணுமே - நாம இனி சந்திக்க அவசியமில்லைன்னேன்."

"அட.. ஆமா.. உனக்கு நல்ல ஞாபக சக்தி."

"உங்களுக்கு அது மோசமாயிருக்கறது புரியது."

அவள் மோவாய் உயர்த்தியபடி நின்றாள் - தொடர்ந்து வாதம் பண்ணாமல் கிளம்பி விடமாட்டானா என்ற நப்பாசையில்.

அதில் மண் இட்டது போல மிஸஸ். ரிச்சர்ட்ஸ் தேநீர் கோப்பைகளுடன் அறைக்குள் வந்து -

"ஏற்கெனவே சுடுநீர் தயாராயிருந்ததால் - உங்களைக் கேட்காமலேயே டீ தயாரிச்சுட்டேன் - ப்ளீஸ்" என்று பரிமாறினார்!

"நன்றி. உங்களைப் பற்றி சுவாதி ரொம்ப நன்றியோடு பேசினாள் - நீங்களும் உங்க கணவரும் இல்லாமல், இருபது மாணவர்களுள்ள இந்த விடுதியைத் தன்னால் இத்தனை சிறப்பாய் நடத்தியிருக்கவே முடியாதுன்னு. ம்ம்... டீயும் பிரமாதம்."

"தாங்க்ஸ் ஸார். எங்களாலும் தொடர்ந்து எவ்வளவு நாள் தான் வேலை செய்ய முடியும்? வயசாகுதே.. இப்ப இங்கேயுள்ள வாழ்க்கை முறை ஒண்ணும் கண்ணியமா யில்லை. ஆக சுவாதி இப்படி ஒரு நல்ல வாழ்க்கை அமைச்சுகிட்டதில் எங்களுக்கு ரொம்ப திருப்தி..."

"என்னைப் பார்த்துட்டு வந்ததும் என்ன சொன்னா, உங்க சுவாதி?"

இவள் மீது ஓரப்பார்வையுடன் அவன் கேட்க, மதத்த வளின் கன்னங்கள் மறுபடி சிவந்து திரண்டன.

நாம் கேட்கவே வேண்டிய தில்லை, இளைஞனே. பெண்ணின் முகத்திலிருந்தே கணிச்சிடலாம்! அவ முகத்தில் புது மகிழ்வு தெரிஞ்சது - அடிக்கடி புன்னகைத்துக் கொண்டாள் - அது போதாது?''

அவன் இப்படி துணிகரமாய் பேச, நம்மாளும் இப்படி ஏமாந்து உளறுகிறார்களே - முகம் சிவக்க பற்களைக் கடித்தாள் இளையவள்!

''நீங்க பேசிட்டிருங்க பாஸ்..'' கண்கள் மின்ன மிஸஸ். ரிச்சர்ட்ஸ் உள்ளே போக, சுவாதி சின்ன குரலில் சீறினாள்.

''என்ன இதெல்லாம்?''

''கூல், சுவாதி. முன்பே நான் விலாங்கு மீன் பற்றி சொன்னது போல, நாம இருவருமே பாம்பு இல்லை - ஆபத்தில்லாதவர்கள்தான். ஆக கல்யாணம் செய்துக் கறோமோ இல்லையோ, பரஸ்பரம் உதவறதில் தப்பி லையே?''

இவள் முறைப்பாய் அமர்ந்திருந்தாள்.

''நாற்பது வருஷ ஒத்திக்கு எடுத்திருக்கும் இந்த விடுதி இன்னும் இருபத்து இரண்டு வருஷங்கள் உன் கையில்தான். அதற்கு ஒரு நல்ல ஆள், தொகை கிடைத் தால், நீ நிம்மதியாய் இந்தியா கிளம்பலாமே - அதாவது இப்பழைய கட்டடத்தை யார், எப்படி பராமரிப்பார் - என்ற கவலையின்றி? எனக்குத் தெரிஞ்ச தன்வீருக்கு இப்படி வாங்கி விற்பதில் பரிச்சயமுண்டு - நீ சரின்னால் அவனை நாளைக்கே கூட்டி வர்றேன்.''

பேசியபடி உயர்ந்த கூரையுடனிருந்த அந்த ஹாலை பார்வையிட்டவன் வினவினான்.

''அதென்ன மேலே இரும்பு கொக்கிகள்?''

''இது முன்னூறு வயதான ஒரு மொனாஸ்ட்ரி. இது மடத்தின் பாதிரிமாருக்கான சமையலறை - அந்த கொக்கிகளில் உணவிற்கான மாமிசம் தொங்கவிடப் படுமாம்.''

''ஓ.. ஆனா இப்ப இது உன் வரவேற்பறை?''

''ம்ம்.. விசாலமாயிருப்பதால்'' சுருக்கமாய் சொன்னாள்.

உதவும் எண்ணத்தோடு வந்திருப்பவனிடம் முகம் கோண முடியவில்லை. இல்லையெனில் -

''ஆமய்யா - வேண்டாத விருந்தாளிகளை அதில் தூக்கி தொங்கவிட வசதியல்லவா?'' என நக்கலடித்திருக் கலாம்!

சொச்ச இருபது வருஷங்களுக்கான உரிமையை அவள் நல்ல விலைக்கு விற்க முடிந்தால் - உடனடியாய் இந்தியாவிற்குக் கிளம்பி விடலாம். 'பாஸ்போர்ட்', 'விசா'வில் எந்த பிரச்சனையையும் அவள் எதிர்பார்க்க வில்லை. திவாகர் சொன்னது போல கல்யாணம் செய்து கொள்வது போன்ற சிக்கல்களை ஏற்படுத்திக் கொள் ளாமல், இந்தியா போய் வரலாம்.

ஆனால்.. இங்கிலாந்து திரும்பும் போது அவளை வரவேற்க இங்கே இந்த வீடு இராதே...?

இவள் இத்தகு சஞ்சலமான எண்ணங்களுடன் அல்லாட, திவாகர் மிக சௌகர்யமாய் சாய்ந்தபடி வீட்டை நோட்டமிட்டுக் கொண்டிருந்தது சற்று எரிச்சலூட்டியது.

ஆக உறுத்திய அந்த சந்தேகத்தை கேள்வியாக்கினாள் -

''எனக்கு உங்களைப் பற்றி ஒரு விஷயம் புரியலை.''

''எதுவானாலும் கேட்கலாம்'' என்பதாய் தன் கைகளை விரித்தவனின் கண்கள், ஆவலாய் இவளில் பதிந்தன.

இருவரது பார்வைகள் தொட்டுக் கொள்ளும் போதெல்லாம் இவளுக்குள் ஒரு நூதன பதட்டம்.

''மறுபடி இவனைப் பார்க்கக் கூடாது'' என்றும்.

''மறுமுறை பார்த்தாலும் அதே உணர்வு வருமா - பாரேன்'' என்றுமாய் ஒரு புது அல்லாட்டம்!

''புரியாததைப் புரிய வைக்கக் காத்திருக்கிறேன், சுவாதி.''

''எனக்கு இந்தியா போக ஒரு துணை.. தேவை.''

''நோ - கணவன்.'' குறுக்கிட்டான்.

''துணை கூட அவசியமில்லைன்னு சொன்னீங்களே...?'' மடக்கினாள்.

''அது இந்தியாவிலுள்ள உன் குடும்பத்தைப் பொறுத்த விஷயம். தனியாளாய் நீ திண்டாடக் கூடாதுன்னு உன் அம்மா தயங்கியிருக்காங்க - தன் குடும்பத்தாரைப் பற்றி நன்கு அறிந்த அவங்க பயப்படணும்னா...?''

''சரி. இந்த சொத்தை கைமாற்றவும் கூட எனக்கு உங்க ஒத்தாசை தேவைப்படலாம். உங்களின் தேவை என்ன? என்னைக் கல்யாணம் செய்வதில் உங்களுக்கென்ன.. வந்து.. லாபம்?''

தன் கைவிரல்களைப் பார்த்தபடி கேட்டவள் பதில் வராததால் நிமிர்ந்து அவனை மறுபடி விழிகளாய் தொட வேண்டியதாயிற்று! திவாகர் முகத்தில் ரகசியமாய் கொப்பளித்து, பின் விரிவாய் பரவிய சிரிப்பைக் கண்டவளுக்குச் சற்று அதிர்ச்சிதான்.

வெடித்துக் கிளம்பிய, மாய்மாலமல்லாத அச்சிரிப்பில், அந்த உற்சாகத்தில் அவன் முகம் இளமையாய், இனியதாய், விரும்பத்தகுந்ததாய் தோன்ற, பார்த்தபடியிருந்தாள்.

''சுருக்கமாய் சொல்லணும்னால் - என் காரணம் சுவாதி'' என்றான். நெஞ்சம் படபடக்க, அவசரமாய் மறுபடி தன் கைவிரல்களை ஆராயலானாள்.

''உன் அழகை மட்டும் குறிப்பிடலை நான். நீ பேரழகின்றதில் சந்தேகமில்லை - அதிலும் உன் கூர் மோவாயை உயர்த்தி நீ பார்க்கும் தோரணை வெரி இன்ட்ரஸ்டிங். ஆனால் வெகு அழகான சிற்பம், ஓவியங்களை ரசிக்கும் நாம் அவற்றை உரிமை கொள்ள முயலுவதில்லை... உன்னை விசேஷமாய், விரும்பத்தக்கவளாய் காட்டுவது கொப்பளிக்கும் உன் உணர்வுகள். 'சட்'டென்று கிளம்பும் கோபம், ரோஷம், வருத்தம், ரசிப்பு, வெறுப்பு அத்தனையும் கலந்த நீ ரொம்ப சுவாரஸ்யமானவள்.''

''கூடவே போதுமான பணமும் இருக்கிறது - இல்லையா?'' தன் கூச்சத்தை மறைக்க அதிரடியாய் கேட்டாள்.

ஆனால் அதை அலட்சியம் செய்தவன் -

''பணம் என்னிடமும் உண்டு சுவாதி. தவிர போதுமானளவு சம்பாதிக்க திராணியுமுண்டு. போன வருஷம் எனக்குத் தெரிஞ்சவர் ஒருவர் அமெரிக்காவிலிருந்து இந்தியா வந்திருந்தார் - ஆறு மாசங்கள் தாய்நாட்டில் தங்க வேண்டியிருந்ததால் ஒரு செகண்ட் - ஹாண்ட் காரை வாங்கினார். 40,000 கிலோமீட்டர் ஓடிய ஒரு வருஷ பழைய வண்டினு ப்ரோக்கர் சொல்ல, சிறு சோதனையில் அது வாக்ஸ்-பாலிஷ் செய்யப்பட்ட மூணு வருஷத்திற்கு முந்திய கார்னு தெரியவந்தது - ஸ்பீடா - மீட்டர்முள்ளை அதிர வைத்து நகர்த்தியிருந்தார்கள் - ஆர்.சி.புக், இன்வாய்ஸ், இன்ஷுரன்ஸ் எல்லாம் பார்க்க, உண்மை அம்பலமாச்சு.''

இதை என்னிடம் ஏன் சொல்கிறாய் என்பது போல அவள் மோவாயை உயர்த்திப் பார்க்க,

“ஆக ஏமாற்றுபவர்கள் எங்கேயும் உண்டு. நீ தனியே ஒரு புது இடத்திற்குப் போவது சரியில்லை... உணர்வுகளை உடனுக்குடன் காட்டும் உணர்வுபூர்வமான பெண்.. அழகிய பெண் நீ சுவாதி. உன்னைத் தனியே அனுப்ப எனக்கும் மனமில்லை - தவிர உன்னை மேலும் தெரிந்து கொள்ளணுமென்ற ஆர்வம் வேறு எனக்கு அதிகமாகிட்டே போகுது.”

மிக சீரியஸாய் அவன் விளக்க இவள் முகம் சிவந்து போனது - பெரும்பாலும் கோபத்தில்!

இதென்ன அடாவடித்தனம் என்ற படபடப்பில்!

“கோயிலில் சிம்ப்பிளாய் நம் திருமணம் நடத்தணும் என்றாலும்...” அவன் தொடர, பதட்டம் தாளாமல் எழுந்தாள்.

“பிறக்காத, பிறக்கவே முடியாத ஒரு குழந்தைக்குப் பெயர் தேர்ந்தெடுக்கும் முயற்சியில் இறங்காதீங்க, திவாகர்” - என்றாள் சூடாக.

ஆனால் அவன் சிரிப்பு மேலும் விரிந்தது - அதற்குப் பொருத்தமாய் அவனது கருவிழிகளும் மின்னியது வெகு கவர்ச்சிதான். ஆனால் அது தனக்குப் பிடிக்கக் கூடாதென்பதில் சுவாதி பிடிவாதமாகவே நின்றாள்!

## 7

‘ஏவான்’ என்றால் நீர்நிலை.

‘ஸ்ட்ராட்ஃபர்ட் அப்பான் ஏவான்’ - என்பது ஆற்றை ஒட்டி நின்ற ஊரைக் குறித்த பெயர்.

இங்கிலாந்தின் அவ்விடம் நீருக்காகவோ பொருத்தமான பெயருக்காகவோ பெயர் பெற்றதல்ல - பதினாறாம் நூற்றாண்டில் தோன்றி உலகப் புகழ் மிக்க நாடகங்களை எழுதிய ஷேக்ஸ்பியர் பிறந்ததால் புகழ் பெற்றது!

மிக அற்புதமான, பிரம்மாண்டமான ஒரு ஓவியத்திற்குள்ளே நுழைந்து நின்றது போலிருக்க, பிரமித்து நின்றாள் சுவாதி. ஒரு துளி இடம் கூட விடாமல் பச்சை பூசப்பட்ட தினுசில் புல்வெளி - கண்களைக் குளுமைப் படுத்தியபடி நடுவே கண்ணாடியை பதித்தது போல, தளும்பாத ஏரி. அதில் அழகு சேர்ப்பதற்காய் விடப்பட்ட பருத்த வெண்ணிற கூஸ் வாத்துக்களுக்கு நீந்தும்போது நீரை சிலுப்பி விடக் கூடாதென்பதில் விசேஷ பயிற்சி தந்திருப்பார்கள் போலும் - துடுப்பற்று நகரும் படகுகள் போல வழுக்கின! மஞ்சளும், வெள்ளையும், ஆரஞ்சுமாய் பூக்கள் அப்பிய மரங்கள். அத்தனை அலங்காரங்களின் நடுவே அமைதியும் அழகு தேவாலயம்.

இத்தனை அற்புதமான ஒரு சிற்றூரில் பிறந்து, வளர்ந்தால், நாடகங்களும் கவிதைகளும் உள்ளே கும்மியடிக்காதா பின்னே? ஊரின் அழகும் அமைதியும்தான் எழுத்தை ஊறச் செய்தன எனில் இங்குள்ள பத்து பேரேனும் எழுத்தில் பேர் பெற்றிருக்க வேண்டுமே? இல்லை - கற்பனையும் மொழி வளமும் ஒரு சிலருக்கு கடவுள் தரும் வரம்.

ஒரு பெருமூச்சுடன் நடந்தவள் கண்களில் துளி குப்பை படவில்லை. அதில் ஆச்சரியப்படவும் ஏதுமில்லை. மக்கள் அவரவர் ஊரைக் கருத்தாய் பேணுவது இங்கு பழகிப் போன ஒன்று.

"தமிழ்நாட்டின் தொன்மையான ஹிந்து கோயில்களை, சில சிதிலமடைந்த அரண்மனைகளை நீ பார்த்தால் மலைச்சு போவே, சுவாதி - ஆனால் நம் பண்டைய பெருமைகளை நாம அலட்சியம் பண்ணியிருக்கோம்னு மற்ற, நாடுகளைப் பார்க்கவுந்தான் புரியுது. எங்கேயும் குப்பையும் கழிவுகளுந்தான் என்று அம்மா குறை பட்டதுண்டு.

23 வருடங்களை - அதாவது தன் வாழ்நாளின் மூன்றில் ஒரு பங்கை இங்கே கழித்த தன்னால் இந்தியாவில் பொருந்திப் போக முடியுமா?

இக்கரைக்கு அக்கரை பச்சை என்ற கதையாகி விட்டால்? அப்பாவைத் தனியே குறிப்பிட்டு அம்மா ஏதும் அதிகம் பேசுவதில்லை என்றாலும் பல சுவாரஸ்ய கதைகள் அவரை இணைத்தே வரும்.

"இங்கே வந்து நாங்க முதலில் படிச்சது - அல்லது பழக நேர்ந்தது. 'க்யூ'வில் நிற்பதுதான் சுவாதி. 'எலிப் பொறி' என்ற மர்ம நாடகத்தைப் பார்க்கப் போனோம். ஐம்பது வருஷங்களாய் தொடர்ந்து மேடையேறிய எழுத்தாளர் அகத்தா க்ரிஸ்டியின் நாடகமது. வீக் - என்ட் சமயம் என்பதால் அன்றும் கூட்டம்தான். நம்மூரில் பண்டிகைக் காலத்தில் புதுப் படங்கள் ரிலீஸாகும். குடும்பமாய் படம் பார்க்கப் போவோம், எங்கண்ணன், வரிசையிலே நிற்பவரின் தோளில், தலையில் ஏறி மிதித்து பாய்ந்து டிக்கெட்ஸ் வாங்கிடறதுல எங்களுக்குத் தனி குஷி. இங்கே டிக்கெட் கவுண்ட்டரின் முன் சிலர் அசுவாரஸ்யமாய் நிற்க, அவர்... அதாவது உன் அப்பா ஓடிப்போய் கவுண்ட்டரில் காசை நீட்ட, அங்கே நின்றவங்க எங்களைப் புழுவைப் போல பார்த்தாங்க. டிக்கெட் தருபவரும்



விநோதமாய் முறைக்க, இவரின் கை தானாய் வெளியே வந்திடுச்சு.

'ஒரு வரிசை காத்திருப்பது தெரியலை - போய் கடைசியில் நில்லுங்கள்' என்று அவர் கடுக்க, நாங்க அவசரமாய் வரிசையின் வாலைக் கண்டு பிடிச்சு ஒட்டிட்டோம். காரசாரமான பேச்சு, கைகலப்பெல்லாம் இல்லை - ஆனால் அப்போது குன்றிய நாங்க, மறந்தும் பிறகு முண்டி மோதலை. நம்ப நாட்டிலே பலவானே பாக்கியவான்! ஒரு நிகழ்ச்சியின் போது உள்ளே நுழைவதில் மட்டுமல்ல, விட்டு வெளியேறும் போதும், பஸ்ஸில் ஏறி இறங்க என்று எதிலும் அவசரந்தான்.'

தாய் சொன்னது எதுவும் மறக்கவில்லை.

அப்படிப்பட்ட ஒரு வித்தியாசமான தேசத்தில் போய் தான் சௌஜன்யமாய் வாழ முடியுமா?

முதலில் போய் தன் நாட்டை, ஊரை, உறவை பார்ப்பது... எஞ்சிய வாழ்வை அங்கேயே கழிக்கக் கூடுமா என்ற ஒரு நோட்டம்...

முடியாதெனப் பட்டால் திரும்பி விடுவது.

ஆக இப்போதைக்குத் திருமண பந்தத்தில் அடைபட அவசியமில்லை.

'வெள்ளாட்டு வாலை பிடித்தபடி வெள்ளத்தைக் கடக்க முடியுமா?' என்றொரு பழமொழி அம்மாவின் வாயில் உருளும். வெள்ளத்தில் சிக்கியவன் கரடியைப் பற்றிக் கொண்டதாகக் கூட ஒரு கதையுண்டு -

இந்த திவாகர் விடாமல் இங்கே வந்ததைப் பார்த்தால் கரடி போலத்தான் தெரிகிறது!

தன்னையும் அவன் ஒரு விலாங்கு மீன். எனச் சொல்லிக் கொண்டாலும், இல்லை பாம்புதான் என்ற எச்சரிப்பு இவளுக்குள் தேவை...

எத்தனை பசப்பாய் பேசினான்?

'உன்னைக் கல்யாணம் செய்ய உன்னைத் தவிர வேறு காரணமில்லை - நீ பேரழகி, உன் கூர் மோவாயைத் தூக்கி நிற்கும் தோரணை, உன் உணர்வுகள் கொப்பளிக்கும் முகம் என்னைக் கவருது...' என்று நீள சரடு விட்டானே?

இந்த அடாவடிப் பேச்சிற்குத் துணையாய் அமர்க்களமான சிரிப்பு வேறு!

அவன் பேச்சிற்கு பிடி தராமல்,

'உங்களின் உதவி எனக்குத் தேவைப்பட்டால் கூப்பிடறேன்' என்று கறாராய் சொல்லி கிளப்பும் வரை, சகஜமாய் சௌகர்யமாய் உட்கார்ந்திருந்தானே.

கிளம்பியவனிடமிருந்து சில நாட்களாய் சத்தமில்லை. ஆனால் அதுவும் 'தொலைந்தானா' என்ற நிம்மதி தராமல், 'என்னாச்சு?' என்ற நெருடலையே விளைவித்தது!

திவாகரனோட சந்திப்பும், பேச்சும் அவன் சிரிப்பும் மனதுக்குள் படமாய் ஓடி, சலனப்படுத்தின - வேலையில் பதிய விடாமல் அவளைத் தடுமாற வைத்தன.

'நெருப்புக்குக் காற்று, போலம்மா, பிரிவு! காற்று வீச, தீ கொழுந்து விட்டு எரியுமே...' என்ற மிஸஸ். ரிச்சர்ட்ஸின் பேச்சு அவளுக்கு 'சட்'டென புரியவில்லை.

'என்ன சொல்றீங்க?' குழப்பமாய் கேட்டாள்.

'இப்போ பிரியம், பிரிவு என்ற பருவத்திலிருப்பது நீதானே, டியர்? அந்த திவாகரை இனியும் காணலியேன்னு



ஞ்சலப்படுகிறாய் - அப்படித்தானே? அவரைப் பிடிக்காதது போல நீ காட்டிக் கொண்டாலும் உள்ளூர ஒரு தவிப்பு - ம்ம்?' - நீலக் கண்கள் குறுகுறுப்பாய் துழாவின.

''தப்பாய் புரிஞ்சுகிட்டீங்க மிஸஸ். ரிச்சர்ட்ஸ். குழப்பமான யோசனையில் நானிருப்பது நிஜந்தான் - அது நான் இந்தியாவிற்குப் போவது பற்றி. முதலில் ஒரு சில வாரங்கள் போய் வந்தால் போதும் - ஆனால் அதுவரை வீடு... அதாவது நம் 'இந்தியா ஹவுஸ்'ஸை நிர்வகிப்பது யார்? இந்தியாவில் எனக்கு வரவேற்பு எப்படியிருக்கும் - இது போல... எனக்கு என் நாடு போக வலுவான காரணமுண்டு - ஆனால் அந்த... திவாகருக்கு என்னைக் கல்யாணம் செய்வதனால் என்ன லாபம்...? அதையும் நேராகவே கேட்டேனே.''

''அதற்கு என்ன பதில் வந்தது?'' - காதுகள் விடைக்க வினவினர் மிஸஸ். ராபர்ட்ஸ்.

''நீ அழகாயிருக்கிறாய்? என்னை வசீகரிக்கறேன் ராய்ன்ர உளறல்..''

''காதல் ஒரு ஆடவனின் கண் வழியாகவும் பெண்ணின் காது வழியாகவும் நுழைகிறது என்ற பழமொழி உனக்கும் தெரிஞ்சிருக்கணுமே டியர்?''

''அவர் கண்ணின் நிலை பற்றி எனக்குத் தெரியாது - ஆனால் என் காது பக்கா கண்டிஷனில் இருக்குது. ஆக நீங்கெல்லாம் அவனுக்காய் எத்தனை பேசினாலும் அவன் என்னில் நுழையலை.''

யாரிடம் காது குத்துகிறாய் பெண்ணே- என்பது போன்ற சிறு கேலியில் முதியவளின் உதடுகள் பிதுங்கின!

அதைக் கவனியாதது போல,

எனக்கு ரெண்டு நாளெனும் ஒரு மாறுதல் தேவை, மிஸஸ். ரிச்சர்ட்ஸ்.''

அறிவித்தாள்.

''ஷுயர் டியர். எங்களால் அதுவரை சமாளிக்க முடியும். டோஸ்ட், ரெடிமேட் உணவுகள் உண்டே. சரி நீ எங்கே போற?''

ஆகஸ்போர்ட்டின் மிக அருகேயிருந்தும், தான் இது வரை பார்த்திராத பல பிரபல இடங்களில் ஒன்றான 'ஸ்டாராட்பார்ட்'டை சுவாதி தேர்ந்தெடுத்து கிளம்பியது இப்படித்தான்.

மாற்றம் கண்களுக்கு மட்டுமல்ல உள்ளத்திற்குமே உற்சாகமாயிருந்தது. அந்த உற்சாகத்தில் குழப்பங்கள் வெகுவாய் மங்கின. 'கைட் - ஃப்ரைடே' டூரிஸ்ட் பஸ் களில் ஏறி ஊரை வலம் வந்தாள்.

''குடை எடுத்துக்கோ, டியர். நம்மூர் மழை பற்றிதான் உனக்குத் தெரியுமே'' என்று ரிச்சர்ட்ஸ் சொன்னதற்கேற்ப, வெயிலும், மழையும் மாறி மாறி கண்ணாமூச்சு ஆடியதை ரசித்தாள்.

ஒரு நாளிற்கான பயணச்சீட்டு வாங்கி விட்டால், நகரின் குறுக்கும் நெடுக்குமாய் ஓடும் எந்த 'கைட் - ஃப்ரைடே' பஸ்ஸிலும் ஏறி இறங்கலாம். பஸ்ஸிலிருக் கும் கைட் அவ்வூரின் சுவாரஸ்ய தகவல்களை விவரித்த படி வருவார்கள்.

'வில்லியம் பெட்டி எனும் இளைஞன் ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் நடித்து பெரும் புகழ் பெற்றவன். 1805-ம் ஆண்டு மார்ச் 14ம் தேதி 'ஹேம்லெட்' நாடகத்தில் அவன் நாயகனாய் நடிப்பதைக் காண, அன்று இங்கிலாந்தின் பார்லிமென்ட் சீக்கிரமாய் மூடப்பட்டது.'

தன் மனக் குடைச்சல்களை மீறி இத்தகவல்களில் மனதை குவிக்க முயன்றாள் சுவாதி.

நாள் முழுவதும் சுற்றி விட்டு, மாலை ஏழுக்கெல்லாம் தான் தங்கியிருந்த வீட்டிற்குத் திரும்பினாள்.

'பெட் அன்ட் ப்ரேக்பஸ்ட்' எனும் தங்கும் வசதி இங்கிலாந்தில் பிரபலம். தங்கள் வீட்டின் ஒரு பகுதியை வாடகைக்கு விட்டு, காலை உணவையும் தந்து விடு வார்கள். சுவாதியின் 'இந்தியா ஹவுஸ்'ஸைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்த கேரலின், சுவாதியை தன் வெகு விசேஷ விருந்தாளியாய் கவனித்துக் கொண்டாள். 'மூன்று வேளை உணவுமே நீ எங்களோடு உண்ணலாம் ஸ்வாதி' என்று சலுகை அளித்தாள்.

வீடு திரும்பியவளை முகம் மலர வரவேற்றவள், சூடான சூப்போடு புது தகவலையும் தந்தாள்.

''மிஸஸ். ரிச்சர்ட்ஸ் போன் பண்ணாங்க. ஸ்வாதி இன்டியாவிலிருந்து உன் அங்க்கிள் அழைச்சாங்களாம்... போன் செய்து விவரம் கேட்டுக்கிறியா?''

கிடைத்தது சந்தோஷமான விவரம்தான் -

மாமாவின் மகள் மலரினிக்குக் கல்யாணமாம். கல்யாணம் நிச்சயிக்கப்பட்ட கையோடு இவளுக்குத் தகவல் தெரிவித்திருந்தார்களாம்.

அடுத்த மாதம் திருமணம்.

இவளுக்குள் ஒரு சந்தோஷம் பரபரத்தது -

போய் உறவுகளைக் காண, கொண்டாட இது அருமை யான சந்தர்ப்பம் - தன் தாயின் திருமணத்தின் போது இந்த மாமா பிரம்மச்சாரிதான் - ஆக அதன் பிறகு திருமணமாகி,

அவருக்குப் பிறந்த இந்த மலரினி, தனக்கு இரண்டு வருடங்களேனும் இளையவளாயிருக்க வேணும். அது தான் இந்தியாவில் சரியான கல்யாண பருவம் போலும். அதனால்தான் அம்மாவும் தன் திருமணம் பற்றி அவசரப் பட்டிருக்கிறார்கள்.

ஏற்கெனவே டெல்லியிலுள்ள 'ஹோம் டிபார்ட்மெண்ட்' டிற்கு இந்திய குடியுரிமைக்கான வேண்டுதலையும் அனுப்பியிருந்தவள், 'விஸா', 'பாஸ்போர்ட்' ஏற்பாட் டிலும் இறங்கியிருந்தாள் - அவற்றில் எந்த சிக்கலையும் அவள் எதிர்பார்க்கவில்லை. வரும் மாதமே கிளம்ப வேண்டுமெனில், தன் வீடு, தொழில்... இவற்றைப் பற்றி தான் குழம்பினாள்.

தேவையின்போது தோன்றும் மாயபூதம் போல இவள் வீடு சேர்ந்ததுமே வந்து நின்றான் திவாகர்!

"எனக்குத் தெரிஞ்ச தன்வீருக்குத் தெரிஞ்சவன் இந்த சரத் - பார்க்க கண்ணியமாய் தெரிகிறான் - விசாரித்த திலும் பழுதில்லைன்னு படுது. உன் தேவையின்படி, அதாவது ஒரு மாதமோ, ஆறு மாதங்களோ உனக்காய் இந்த 'இந்தியா ஹவுஸ்'ஸை நடத்தி, பராமரித்துக் கொடுப் பான். ஒரு தொகைக்கு. நீ இங்க்லெண்ட் திரும்பும் போது உன் வீடும் தொழிலும் பத்திரமாய் இங்கிருக்கும் - சரத்தை வரச் சொல்லவா?"

மறுக்க வழியின்றி, சம்மதித்தவள் துணைக்கு வாஸந் தியை அழைத்ததுதான் சற்று வேண்டாத வேலையாய் போனது.

திவாகரை இதுவரை தோளில் வைத்து ஆடியவள், வந்த சரத்பாபுவை தன் தலைக்கே ஏற்றி விட்டாள்.

'ஹைய்யோ, ஹிந்தி ஸ்டாரின் உறவாய் இருப்பாரோ - இந்த சரத்? நல்ல உயரம், சாயல், குரல் - ஆனால் பழகும் விதத்தில் துளி அலட்டல் இல்லை. மிஸஸ் ராபர்ட் ஸுக்கும் அவரைப் பிடிச்சிருச்சு. ஆக ரெண்டு, மூணு மாசங்களுக்கு நீ கவலையே இல்லாமல் இண்டியா போய் உறவுக்காரங்களைக் கொஞ்சிட்டுத் திரும்பலாம்' என்று முடிவெடுத்து விட்டாள்.

சரத் எதிர்பார்த்த தொகை சற்று அதிகமே என்றாலும், இதைத் தொழிலாய் செய்பவன் அதை விடக் கம்மியாய் கேட்டு, பிழைக்க முடியாதெனவும் பட, சம்மதித்தாள்.

அடுத்த பரபரப்பு, உறவினருக்கு, மணப்பெண்ணிற் கான பரிசு பொருட்களைப் பற்றி.

இந்நாட்டில் தங்க பூ வேலை செய்த பீங்கான் பொருட்கள் பலர் விரும்பும் பரிசுப் பொருள். ஆனால் தாய் நாட்டில் தங்கத்திற்குத்தான் மதிப்பு என்று அம்மா சொல்லியதுண்டு.

இத்தனை நாட்கள் பார்க்காத மாமா மகளுக்குக் கல்யாணம் வேறு... ஆக வைரம்?

ஒரு ஜோடி சிறு வைரத்தோடுகளை வாங்கினாள்.

கலா ஆன்ட்டியின் ஆலோசனைப்படி மற்றவர்களுக்கு எலெக்ட்ரானிக் பொருட்களை வாங்கி சேர்த்தாள்.

"புது காமரா கூட கொண்டு போ... ரெண்டு மாசம் உனக்கு வேண்டிய படங்களை எடுத்த பின், அதையும் பரிசாய் கொடுத்திடலாம்."

அதுவரை புகைப்படங்களில் கூட பரிச்சயமாகாதவர் களிடம் போன் மூலம் அடிக்கடி பேசினாள். மணப்பெண் மலரினியைத்தான் லேசில் பிடிக்க முடியவில்லை.

'கல்யாண பத்திரிகை வேலை, ஷாப்பிங்னு அவளுக்கு மூச்செடுக்கவும் முடியலை, சுவாதிம்மா - ஆனா உன்னை வரவேற்க ஏர்போர்ட்டுக்கோ, ஸ்டேஷனுக்கோ வந்திடுவா'' என்றார்கள் அத்தை.

வேகமாய் ஓடிய நாட்களுடன் இவளுடன் ஓடி, கடைசியில் விமானத்தில் ஏறியவள்... அதிர்ந்து போனாள்.

# 8

இவனை பாம்பு, கரடி என்றெண்ணியதில் தப்பே இல்லை. இவன் அவைகளை விட ஆபத்தானவன்.

விமானத்தில் தனக்கு அடுத்த இருக்கையில் விச்ராந்தியாய் உட்கார்ந்திருந்தவனைக் கண்டவளுக்கு முதலில் நெஞ்சும் பதறி, தொடர்ந்து உடலும் உதறியது.

அந்த உதறலில் வார்த்தைகள் உதிர்ந்து காணாமற் போயின!

''என்ன சுவாதி, என்னைப் பார்த்த சந்தோஷத்தில் வாயடைச்சிடுச்சா?'' அவள் கண்கள் அவனுக்குக் காட்டமான ஒரு பதிலைத் தந்தன.

''நீங்க எங்கே இந்தியாவிற்கு?'' என்றாள் அமர்ந்த பின்பு.

''நான் இந்திய பிரஜை சுவாதி, வந்த வேலையை முடிச்சிட்டு எந்நாடு திரும்பறேன். அங்கும் எனக்கும் வேலையிருக்குது. இயல்பாக சொன்ன விளக்கம், 'இதில்



நீ ஆச்சரியப்பட, ஆத்திரம் கொள்ள என்ன இருக்கிறது'' என்றும் வினவியது.

விதண்டாவாதம் செய்ய விரும்பாமல் தன் இடதுபுறமிருந்த சிறு ஜன்னல் வழியே பார்த்தாள்.

முதல் சந்திப்பின் போதும் இப்படி முறுக்கியபடி நின்ற ஞாபகம் வந்தது - ஆனால் இப்போது திவாகரை அதிகம் தெரியும் - அதிகம் வெறுப்பும் கூட!

ஆனால் அவன் செய்த உதவிகளும் நினைவிற்கு வந்து தொலைத்தன. தன்வீர் மூலம் சரத்தை கூட்டி வந்து, இந்த விமான டிக்கெட்டை சகாய விலையில் வாங்கித் தந்ததும் கூட திவாகர்தான்.

எல்லாம் சரி - ஆனால் தானும் உடன் வருவதாய் இவன் ஒரு வார்த்தை சொல்லாதது ஏன்?

ரகசியமாய் வந்து பக்கத்து இருக்கையில் உட்கார்ந்திருப்பது திண்ணக்கந்தானே?

போக வர எண்பது ஆயிரம் என்பது சாமான்ய தொகையல்ல... இவனது ஊர் நெல்லை அல்ல. ஆக திவாகர் இடையே இறங்கிக் கொள்ள வேண்டும்தான்.

ஆக இயல்பாகவே கேட்டாள்,

''எங்கே போறீங்க - மும்பை அல்லது சென்னை?''

''உன்னோட நான் இருக்கணும்ரது மிஸஸ். ராபர்ட்ஸ், கலா ஆன்ட்டியின் வேண்டுகோள் - அன்பு கட்டளைனு கூட சொல்லலாம்! சின்னப் பெண்ணை பல ஆயிரம் மைல் கடந்து முதன் முதலாய் தனியாய் அனுப்பற அவங்களின் தவிப்பு எனக்கும் புரியுது..''

அவன் இடக்காகப் பேசுவதாகவே இவளுக்குப் பட்டது!

தன்னோடு நெல்லைக்கே வருவானா?

தன்னை எதிர்கொள்ள வரும் மாமா குடும்பத்திடம் இவனை என்னவென்று அறிமுகப்படுத்த?

'எனக்கு வரனாக வந்து அப்படியே ஒட்டிக் கொண்டவர்' என்றா?

'குடும்ப நண்பர் - துணையாய் வந்திருக்கிறார்... ஹிஹி' என்றா? மாமா குடும்பம் சந்தோஷப் படுவார்களா... இல்லை சந்தேகம்தான் மிஞ்சும்! இவளது தாய் ஒருவனோடு ஓடிப் போனது போல, மகளும் ஒரு புதியவனோடு வந்து இறங்கியிருக்கிறாள் - என்று உதடுகள் பிதுங்கும்...

வெலவெலத்தாள்.

மிஸஸ். ராபர்ட்ஸ், கலா ஆன்ட்டி, வாஸந்தியை நினைத்து பல்லைக் கடித்தாள்.

உண்மையிலேயே அவர்கள் இதில் உடந்தையா இல்லை இவன் புளுகுகிறானா? 'பேகேஜ் ஸ்லிப்' வாங்கி இவள் கையசைக்கும் வரை கண்ணீர் மல்க தன்னுடன் இருந்தவர்கள் திவாகரைப் பற்றி ஏன் ஏதும் சொல்லவில்லை?

தான் ஆத்திரப்படுவோமென்றா... அல்லது இனிய ஆச்சரியமாய் இருக்கட்டும் என்ற அறியாமையா?

விமானப் பயணிகளில் பெரும்வாரியாய் தமிழ், தெலுங்கு பேசுபவர்கள், மீதி வட இந்தியர்கள். பேச்சும், புடவையுமாய் ஒரு கல்யாண மண்டபம் போலிருந்தது, சூழல். ஆனால் உணவிற்குப் பின்பு, தங்களுக்கு எதிரேயிருந்த சின்னத் திரையில் தரப்பட்ட சில ஹிந்தி, தமிழ் திரைப்படங்களுள் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து மூழ்க ஆரம்பித்திருந்தனர். எதிர், பக்க இருக்கையினர் ரசித்துக் கொண்டிருந்த படங்களின் ஆக்ரோஷ சண்டைகளும், குத்துப் பாடல்களும் இவளை ஆயாசப் படுத்தின. 'அன்பே வா', 'சித்தி' போன்ற படங்களை அம்மாவுடன் சேர்ந்து சிரித்து அல்லது கண்ணீர் சிந்தி ரசித்தவள் இவள் அத்தகு திரைப்படங்கள் வாழ்வை, ஒரு உற்சாகத்தோடு அல்லது நெகிழ்வோடு நோக்க உதவின... இவை..?

மேலும் ஆராயாமல் கண்களை மூடிக் கொண்டாள்.

பயண ஏற்பாடுகளில் அயர்ந்திருந்தவளை திவாகரின் அதிர்ச்சி வேறு சேர்ந்து அடித்திருக்க, கண்களைத் திறக்க மனமின்றி கிடந்தாள்.

விமானத்தின் வயிற்றில் இருந்தவளுக்குத் திரிசங்கு சொர்க்கத்தில் மிதப்பது போலொரு பிரமை!

அப்படியே உறக்கத்துள் நழுவியிருந்தவளை, எழுப்பி உண்ண வைத்தான். அளவும் சுவையுமான உணவை சாப்பிட்டவள் அவனைப் பார்க்கப் பிடிக்காமல் மறுபடி கண்களை மூடிக் கொண்டாள்.

'நூறு பெண்களை ஏமாற்றி மணந்த லியாகத் அலி' - என்று சில மாதங்களுக்கு முன்பு பத்திரிகைகளை கலக்கிய செய்தி மனதில் ஓடியது. தமிழ் செய்தித் தாள்களில் பத்தி பத்தியாய் விவரிக்கப்பட்ட அச்செய்தி இவளை சுருக்கமாய் வந்து எட்டியிருந்தது, போலி மாப்பிள்ளைகள் அதிகரித்து விட்டார்கள் என்ற அங்கலாய்ப்போடு.

இந்த திவாகரும் அந்த வர்க்கமா?

தன்னை அவன் விடாமல் சுற்றி வரக் காரணமென்ன?

தன் பணமா?

சாத் நீட்டிய ஒப்பந்த பத்திரங்களை நிதானமாய் படித்து, சம்மதித்தது திவாகர்தான் - சட்ட நுணுக்கங்கள் அறிந்தவன்.

அவனுக்கு யாரையும் ஏமாற்றுவது எளிது.

லேசாய் இமை பிரித்து தன்னருகே இருந்தவனை நோட்டமிட்டாள். தூங்கிக் கொண்டிருந்தான் -

ஆனால் வாய் பிளந்த அசதியிலல்ல - உறக்கத்திலும் ஒரு அழுத்தமிருந்தது.

இவன் கௌவிய இரையை லேசில் விட்டுவிட மாட்டான்.

ஆனால் இவள் வகை நண்பர்களுக்கும் இவனைப் பிடித்துப் போனதே?

அதுதான் ஆச்சரியம்...

இப்போது மாமா குடும்பத்தினருடனும் பழகி, தான் அவனைத் திருமணம் செய்தே தீர வேண்டுமென்ற கட்டத்திற்கு கொண்டு வந்து நிறுத்தி விடுவதுதான் அவனது திட்டமா?

மறுபடி அவன் எழுப்பியே கண் விழிக்க நேர்ந்தது - மணமான காபி காத்திருக்க, பருகினாள்.

முகம் கழுவி, தலை கோதி வந்து மறுபடி அமர்ந்த போது புது அலட்சியம் முளை விட்டிருந்தது -

'என்ன செய்து விட முடியும் இவன்? - அதுவும் தான் கவனமாய் இருந்து விட்டால்..?'

ஆனால் அந்த அல்டாப்பு சற்று நேரம் அவனுடன் பேசியதுமே கருகி காணாமற் போனது!

இந்தியாவின் விலைவாசி, வேலை வாய்ப்பு, நில மதிப்பு, வீடு பற்றி பேச்சை வளர்த்தியவன் வீட்டின் மேல் வாங்கும் கடன் பற்றி விலாவாரியாய் விளக்கினான் -

'ரிவர்ஸ் மார்ட்கேஜ்' - எதிர் அடமானம்னு கேள்வி பட்டதுண்டா? ஹவுஸிங் வங்கி தரும் புது திட்டமிது. அறுவது வயதிற்கு மேற்பட்டவர்களுக்கானது. இருக்கும் வீடு மட்டுமே சொந்தமாயிருப்பவர்களுக்கு வைத்திய அல்லது வேறு பெரிய செலவு வர, திகைக்க வேண்டாம். வீட்டை பாங்க்கில் அடமானம் வைத்து, அவர்கள் காலத்திற்குப் பிறகும் அடமான கணக்கைத் தீர்க்கலாம்.''

இதைத் தன்னிடம் ஏன் அவன் விளக்க வேணும் என்று புரியாவிட்டாலும் 'அழகு, கல்யாண தத்துவங்கள்' பற்றி அவன் பேசாத வரை போதும் என்று அரை குறையாய் தலையாட்டிக் கொண்டிருந்தாள்.

''எழுவது வயது வரை வீட்டின் மதிப்பில் 45% கடனாய் வாங்கலாம். பிறகு 60% வரை கிடைக்கும். வட்டி உண்டு - நிலத்தின் மதிப்பு உயர, மேலும் கடன் கிடைக்கலாம்.''

''பாடம் நடத்தறது போலிருக்குது'' - என்றாள் சலிப்பும் கிண்டலுமாய். அந்தத் தொனி வேறு எவரின் வாயையும் அடைத்திருக்கும் - இவன் அசரவில்லை!

''முதியோர்களே வீட்டை மீட்கலாம் அல்லது வாரிசுகளுக்கு அந்த உரிமை உண்டு.''

''பயங்காட்டறீங்களா? ஆனால்... எதற்காகன்னுதான் புரியலை.''

''சும்மா தகவல்கள் தர்றேன் சுவாதி. விவரங்கள் தெரிஞ்சு வச்சிருப்பது எப்போதுமே ஒரு பலம் ஆக கரிசனையான ஒரு உதவி.''

எனக்கு உதவணும்னால், நீங்க என் கண்ணில் படாதிருங்க போதும். என் உறவுக்காரங்க உங்களைப் பார்த்தால் எனக்கு புது பிரச்சனை, சங்கடங்கள்...''

அவளையே பார்த்தவன், தன் பாக்கெட்டைத் துழாவி தோல் பையிலிருந்த 'செல்-போனை' அவளிடம் தந்தான்.

''இது நீ இந்தியாவில் பயன்படுத்தக் கூடியது. சென்னையில் இதற்கான கார்ட் போட்டுத் தந்துடறேன். ஆக எதுவும்... தேவைன்னால் உடனே நீ என்னைத் தொடர்பு கொள்ளலாம், சுவாதி - அதாவது நான் உன் கண்ணெதிரே இருக்க மாட்டேன் - சரிதானே?''

''இதுவும் ஒரு விதமான மிரட்டல்தான். நானில்லாமல் உன்னால் சமாளிக்க முடியாது - அப்போது என்னைத் தேடி வர இந்த போன் உதவும்ரது வேறென்ன? அங்கே எனக்கு என்ன ஆபத்து நேரும்னு எதிர்பார்க்கறீங்க?'' நேரடியாகவே கேட்டு விட்டாள்.

''உன் முதல் அயல்தேசப் பயணம் ரம்மியமானதாய் இருக்கவே விரும்பறேன் சுவாதி. இந்த மாற்றம் நிச்சயம் உன்னைப் புதுப்பிக்கும்.''

வருடா வருடம் ஒரு புது ஊருக்குப் பயணப்படும் அவள் தோழிகளின் கருத்தும் அதுதான். சுவாதியின் தாய் பெரும் ஊறுகாய் ஜாடிகளை வெயிலில் குலுக்கி வைப் பதைப் பார்த்த தோழி ஜேனட் சிரித்தபடி சொன்னாள் -

'நீங்க உணவிற்குத் தரும் முக்கியத்துவத்தை உங் களுக்குத் தருவதில்லைன்னு நினைக்கிறேன் மிஸஸ். சுஜாதா. இங்கேயே இருப்பது உங்களுக்கு ஆரோக்கிய மில்லை.. ஊறும் காயைக் கூட குலுக்கி, இடம் மாற்ற வேண்டியிருக்கில்லையா? அது போல பயணம் நம்மை புரட்டிப் போட்டு புதுப்பிக்கும் - சோராமல் காப்பாற்றும் - முயன்று பாருங்களேன்.'

ஆக அம்மா, மகள், கலா ஆன்ட்டியோடு ஐந்து நாட்கள் பாரிஸ் போய் திரும்பினார்கள் - வேறு தேசம் பார்க்கும் புத்துணர்வு தனிதான்.

ஆனால் தனியே நேர்ந்த இப்பயணம் சற்று மிரளச் செய்தது. சென்னையிலிருந்து மதுரை பறந்தது. அங்கே ஒரு வாடகைக் காரில் நெல்லை நோக்கிய பயணம் என்று பிசிறின்றி ஏற்பாடுகளைச் செய்திருந்தான் திவாகர். உடனிருந்தும் அவசியமின்றி அவளுடன் பேசவில்லை. முகம் ஏதோ யோசனையில் கட்டுண்டிருந்தது - டாக்ஸி பயணத்தின் ஓட்டுனருடன் முன் இருக்கையில் அமர்ந் தவன் திரும்பியும் பாராதது பாதி நிம்மதியாகவும் மீதி நெருடலாயுமிருந்தது.

நெல்லையில் ஒரு ஹோட்டலில் இறங்கிக் கொண்ட வன் விடை தர, மாமா தெரிவித்திருந்த மற்றொரு உணவகத்தின் முன் போய் கார் நின்றது.

''நம்ப வீட்டை லேசில் கண்டு பிடிக்க முடியாதும்மா - ஆக 'சங்கம்' வந்திடு. நாங்க எல்லோரும் அங்கே காத் திருந்து உன்னை வீட்டுக்குக் கூட்டிட்டுப் போறோம்.''

உணவகத்தின் வாசலில் குடை பிடித்திருந்த மரத்தின் கீழிருந்தவர்களை ஆர்வமாய்ப் பார்த்தாள் சுவாதி. அவர்கள் முகத்திலும் பரபரப்பு தெரிந்தது.

இவள் இறங்கியதும் முன்னே வந்தவர்,

''சுவாதி?'' எனக் கேட்டதும் இவள் கரம் கூப்ப, தொடர்ந்த இரண்டு நிமிஷங்களுக்கு அறிமுகங்களோடு நலம் விசாரிப்பு தடபுடலப்பட்டது.

அல்லது ஐஸ்-க்ரீம் சாப்பிடலாமா? சுவாதி?''

''இல்ல மாமா - வீட்டுக்கே போயிடலாம்.''

''பத்து நிமிஷந்தானாவும்'' - என்றவர் தன் பிள்ளைகளை அவளுடன் டாக்ஸியில் ஏற்றி விட்டு, மனைவியுடன் ஸ்கூட்டரில் பின் தொடர்ந்தார்.

தன்னருகே உட்கார்ந்திருந்த மலரினியைப் பார்த்த சுவாதிக்கு நிறைய ஆச்சரியத்தோடு துளி ஏமாற்றமும் கலந்திருந்தது.

இவள் எதிர்பார்த்திருந்த மருதாணி சிவப்பு கைகள், அதனுடன் போட்டிப் போடும் முகத்தின் நாணச் சிகப்பு - பட்டுப் புடவை, பூ, ஜிமிக்கி - எதுமில்லை.

அழகு நிலையத்தில் இஸ்திரி பண்ணப்பட்ட விறைப்பில் கூந்தல் விரிந்து கிடந்தது - பேருக்கு நகைகள், நிறைய ஒப்பனை, மிக இறுக்கமான ஸல்வார்.

மாமா பிள்ளைகள் 'ஹாய்' என கைக்குலுக்க, மாமாவைத் தான் சிரம் தாழ்த்தி வணங்கியது. சுவாதிக்கே சற்று விநோதமாய் பட்டது. மலரினியின் பார்வையும் தன்னை திருப்தியின்றியே ஆராய்கிறதோ?

ஏதும் பேச வழியின்றி மலரினி 'ஸெல்'லைத் தன் காதிற்குக் கொடுத்திருந்தாள்.

இளையவன் மோகன் புதியவளைப் பார்த்து புன்னகைத்தான் -

''அக்காக்கு இதுதான் ஜோலி.''

''ஏதேனும் முக்கிய விஷயமாயிருக்கும்'' - என்றாள் சுவாதி மெள்ள.

''அதுக்கு சோறு தண்ணி கூட வேணாம் - இப்படி வெட்டிக் கதையடிச்சாப் போதும்...'' என்றவனின் போனும் ராகமிழுக்க, ஒரு அசட்டுச் சிரிப்புடன் அவனும் அதில் பேச ஆரம்பிக்க, அதுவும் 'வெட்டிக் கதையே' என்பது அவன் பேச்சில் சுவாதிக்குப் புரிந்தது.

முதன் முதலாய் சந்திக்கும் உறவினருடன் பேசாமல், அவர்கள் தங்களிலேயே அமிழ்ந்து போனது சங்கடம் தர, வெளியே பார்வையை விட்டாள்.

ஊரின் நெரிசலும், ரோட்டோர குப்பையும் தூசியும், இரைந்தபடி விரைந்த வாகனங்களும் கலவரப்படுத்தின. அலட்சியமாய் ரோடைக் கடக்கும் மனிதர்களை, ஊடாய் நின்ற மாடுகளை விழி விரியப் பார்த்தாள்.

லண்டனிலும் அமைதியான கிராமப்புறங்களில் மாடுகளைக் காணலாம்தான். பசும் மேடுகளில் மாடுகள் மேய்வதைப் பார்த்தால் பெரியவர்கள் -

'ஆஹா - இன்னைக்கு நிச்சயம் மழை பெய்யாது' என்று ஆருடம் சொல்வார்கள். அவையும் கழுத்து மணியசைய சமர்த்தாய் வீடு போய் சேருமே ஒழிய, ரோட்டிற்கு உலா வருவதில்லை.

சற்றே ஒதுங்கிய ஒரு சாலையில் திரும்பிய கார், ஓரங்கட்டி நிற்க, வரிசையாய் நின்ற அப்பழங்கால வீடுகளில் ஒன்று தன் தாயினுடையது என்பது புரிந்ததும் உள்ளே பரவசம் மொட்டு விட்டது. புன்னகையுடன் மாமாவின் மக்களை இவள் நோக்க, இருவரும் மும்முரமாய் 'ஸெல்'லோடு பேசியபடி.

வீட்டின் வாசலில் நிற்க, ஒடுங்கிய வீட்டின் அமைப்பு நெடுக ஓடுவது தெரிந்தது. அலங்காரமே இல்லாத கட்டுமானம் - ஆனால் படியேறியவளுக்குச் சிலிர்த்தது.

'அம்மா இருந்திருந்தால்..?' என்ற ஏக்கத்தில் நெஞ்சு வலித்தது. சுண்ணாம்பு காறை உதிர்ந்த சுவர், பராமரிப் பற்று வெளிறிய தரையும், கதவு, ஜன்னல்களும்.

எண்ணெய்க் காணாத கூந்தலாய் வறண்டிருந்த வீட்டை அவள் பார்வை பரிவுடன் நீவியது.

சாமான்களை உள்ளே எடுத்துச் செல்ல உதவிய வளுக்குள் ஏதேதோ கற்பனைகள் - தன் தாய் குழந்தை யாய், பள்ளி செல்லும் சிறுமியாய், கல் ஜிமிக்கியோடு தாவணியணிந்த குமரியாய் வீட்டின் ஆங்காங்கே நிற்பது போல்!

முப்பது ஆண்டுகளாய் அம்மா பார்க்க, புழங்க ஏங்கிய இடமிது. வீட்டினுள் மேலும் பல புதிய முகங்கள் -

'இவுக எங்க அண்ணி, அவுக அம்மா, இது எஞ் சித்தி' என்று அவர்களை வசந்தா அத்தை அறிமுகப்படுத்தி னார்கள்.

அவர்களுக்குள்ளே முணுமுணுப்புடன் தன்னை முறைத்தவர்களை சிறு சங்கடத்துடன் வணங்கினாள்.

"மோரா, காபியா?"

என்று கேட்டு இவளை உபசரித்த பின் சுற்றியமர்ந்து பேச்சு வளர்த்தார்கள்.

"ஏம்மா, ஒண்டியாய் சொந்த பிஸினஸு நடத்தினி யாமே?"

"ம்ம்..."

"அப்ப, நல்ல வசதியான வாழ்வுதான்?"

"ஓரளவு."



"சொந்தத்துல வீடு கட்டி, நூறு பவுன் நகையேனும் சேர்த்திருப்பேல்ல?" தான் நடத்தும் விடுதிதான் தன் வீடு. என்றாக, அதை சொந்தம் என்பதா இல்லையா என்று குழம்பினாள் சுவாதி.

"சொல்ல விருப்பமில்லைனா வேண்டாம் விடு. எளிய பொண்ணாத் தெரிஞ்சே - அதாங் கேட்டேன். டிப்-டாப்பா வருவேன்னு எதிர்பார்த்தோம்."

அந்த தொனி அது பாராட்டா, குறையா என்றிவளை மேலும் குழப்பியது.

எட்டிப் பார்த்த மாமா,

"அவ கொஞ்சம் படுத்து எழும்பட்டும், வசந்தா. சுவாதிக்கு அவ போர்ஷன் வீட்டைக் காட்டு முதல்ல - அவளுக்கு உரியதை அவ பார்த்துக்கட்டும்" என்றது இவளை சற்று உலுக்கியது.

மோரின் புளிப்பு உள்ளேயும் பரவியது போல...

"வர்ரீங்களா - வீடு காட்டறேன்" என்று வந்த மலரினி யிடம் தன் வாழ்த்துதலைச் சொன்னவள் -

"உன் 'அவர்' போட்டோ இருக்குதா?" கேட்டாள்.

"அதெல்லாம் வேணாம். சுரேஷ் நாளைக்கு வருவாரு. அப்போ பார்த்துக்கலாம். என் லண்டன் கஸினைப் பார்க்க அவருக்கும் ஆர்வந்தான்."

இவர்களே தன்னிடம் பேச அதிக ஆவல் காட்டாத போது, வரப் போகும் மாப்பிள்ளைக்கு எனக்கு வந்தது - என்ற நினைப்புடன் தலையாட்டிக் கொண்டாள் சுவாதி.

விருந்தாளிகளும் கிளம்ப யத்தனிக்க, இவளும் வழி யனுப்பினாள்.

''கல்யாணம்னால் இப்படி சதா யாரேனும் வரப் போகன்னு வேலைதான்'' - அத்தை வசந்தா அலுக்க,

''என்ன வேலை, உதவின்னாலும் சொல்லுங்க அத்தை'' - மனமார முன் வந்தாள் புதியவள்.

''ஷாப்பிங், பத்திரிகை வேலையை மலரினியும் மாப் பிள்ளையுமே பார்த்துக்கறாங்க.''

''கல்யாணத்திற்கு நிறைய திட்டமிடல், வேலையெல் லாம் இருக்குமே?''

''அதுக்கெல்லாம் இப்ப 'ஏஜென்ட்ஸ்' தான். விருந் துக்கான அய்ட்டம், எத்தனை நூறு பேர், பூ அலங்காரம் எத்தனை ஆயிரத்துக்குன்னு சொல்லிட்டா, எல்லாம் நடந்திருது.''

''இங்கே கல்யாணத்துக்கு எத்தனை பேரை அழைப் பீங்க?'' வெளிநாட்டில் சராசரியாய் ஐம்பது, அறுபது விருந்தாட்கள்தான்.''

எல்லோரும் விழி விரித்து சிரித்தார்கள் -

''ஐயோ இங்கே ஆயிரம் பேரேனும் எதிர்பார்க்கலாம் - நாலு வருஷத்துக்கு ஒரு தரம் பார்க்கறவங்களைக் கூட அழைக்கணும் - இல்லைன்னாப் புலம்பித் தள்ளிருவாங்க - அக்கம் பக்கத்தார், தூரத்து சொந்தம், சம்பந்தக்காரர் வகையறான்னு எதையும் விட்டுடக் கூடாது.''

அப்படி வந்த அழைப்பைத்தான் ஆனந்தமாய் ஏற்று அவசரமாய் வந்து விட்டோமோ தான்?

கீழேயிருந்த சில அறைகளைக் காட்டிய பின் மாடிக்கு ஏறினார்கள். ஒடுங்கிய இருண்ட படிகளில் ஏற அங்கும் சின்னச் சின்ன அறைகள்.

இவள் முன்னே நடந்து போன மாமாவிடம் அம்மாவின் சாயல் இல்லை. சற்று குட்டையாய் அகண்டிருந்தவர் ஓரக்கண்ணால் பார்த்தபடி பேசினார்.

அவர் பழக்கமே அதுதானா...

அல்லது இவளை நிமிர்ந்து பார்க்கத்தான் துணிவில் லையா?

தன் விழிகளை ஊடுருவிய திவாகரின் நேர் பார்வை பற்றிய ஞாபகம் ஏனோ குறுக்கிட்டது.

தூசியின் வாடை மூக்கைக் குடைய, கைக்குட்டைக் குள் தும்மினாள். ''இங்கே பெண் பிள்ளைகளுக்கு சொத் துல பங்கு கிடையாது. இப்படி பெரிசா கல்யாணம் வைக் கிறது போக, முடிஞ்சளவு நகை போட்டு அனுப்பறது தான்'' மாமா விளக்க, அத்தை ஒத்து ஊதினார்.

''அதுவே லட்சக்கணக்குல ஓடிருதே'' - என்று.

சுவாதி அவர்களைச் சலனமற்று பார்த்திருக்க, மாமா சுவரிடம் பேசினார்.

''ஆனா... எந்தங்கை சுஜாதா அப்படிப் போயிட... அதாவது பெரிசாய் அவளுக்குக் கல்யாணம் பண்ணிப் பார்க்க விடாமல் அவ உங்கப்பாவோட போயிட, அவளுக்கு ஏதேனும் செய்யணும்னு எனக்குள்ளே ஒரு தவிப்பு. அதுதானே நியாயம்?''

மாமா சொன்னாலும் அவர் கண்கள் ஒரு நியாயஸ் தனின் தெளிவின்றி தத்தளித்தன!

''ஆக கால்வாசி வீட்டை - இந்த போர்ஷனை உனக் குன்னு வச்சிட்டேன். ஆனா அதிலும் வில்லங்கம்...''

அத்தை குறுக்கிட்டார் - ''அவ வந்ததுமே அத் தனையையும் கொட்டி அளந்திரணுமா? இதோ இதுதான்

எல்லாம் கேள்விப்பட்டதுதான்'' என்றார் அத்தை.

'எல்லாம்'மில் ஒரு அழுத்தத்துடன் மஞ்சள் குண்டு பல்பின் ஒளியில் அச்சிறு அறை மங்கலாகவே தெரிந் தது. ஓரத்திலிருந்த பெரிய டிரங்க் பெட்டிகளைக் காட்டி யவர்,

''உள்ளே அத்தனையும் புஸ்தகம்... அதுவும் ஒரு மாதிரியான வாசிப்பு -

அதனால மலரு எதையும் எடுக்கறதில்ல'' என்று முடித்தார்.

இப்படிப்பட்ட பேச்சைக் கேட்க, அம்மா வராதது நல்லதுதான் என்று பட்டது.

தான் வரும் நிமித்தமேனும் இச்சிறு பகுதியைப் பெருக்கி, துடைத்து வைத்திருக்கலாம் இவர்கள். எப் போதோ கரும்பச்சை பெயிண்ட் அடித்து, மங்கி உரிந்த ஜன்னலைத் திறந்தால், மேலும் சற்று வெளிச்சம் வரு மென்று சுவாதி முயல,

''அதைத் திறக்கறதில்லை - ரொம்ப நெருங்கக் கட்டின வீடுங்கல்லியா... ஆக பக்கத்து வீட்டுக்காரங்க இங்கே பார்க்கறதும், நம்ப பேச்சு அங்கன கேட்கதுமாயிருக்கும்...'' - தடுத்தார் மாமா.

''அறையில் காற்றும் வெளிச்சமும் வரட்டுமேன்னு...''

''அந்த சாக்கில் இங்க நுழைஞ்சதுதாம் கா...தல்!'' - இழுத்து அலுத்தார் அத்தை.

தெளிவாகவே புரிந்தது.

இங்கேயிருந்த அம்மாவிற்கும் பக்கத்து வீட்டு அப்பா விற்குமான காதலை இந்த ஜன்னலே திறந்து விட்டு விட்டதாய் பொறுமுகிறார்கள்.

''உங்கப்பா மருந்து விக்கிற ரெப்ரஸென்டேட்டிவ்வாம் - ஹீரோ கணக்கா அவரு உடுத்திட்டு போக, இருக்க இவ சபலப்பட்டுட்டா.''

ஜெயிக்காத காதல் அல்லவா - கொச்சைப்படுத்து கிறார்கள். இதுவே எல்லாம் சரியாய் இருந்திருந்தால் - சிரித்துக் கொண்டாடியிருப்பார்கள்.

''திரைச்சீலை போட்டால் 'ப்ரைவஸி' போகாது - காற்றும், வெளிச்சமும் வரும்.'' என்றாள் பொதுவாய்.

''அடுத்த வீட்டில் பிரம்மச்சாரி தடிப் பசங்க. ஆக மலரு இந்தப் பக்கம் வாரதேயில்ல'' - அத்தை பெருமையுடன் அலுத்தார்கள்.

பழைய மரக்கட்டிலில் கிடந்த மெத்தை - ஒரு காலத் தில் இலவம் பஞ்சால் அடைக்கப்பட்டிருந்தது போலும். இப்போது நாற்பது வயதிலுள்ள முறுகித் திரண்ட ஒரு கிராமப் பெண்ணின் உடம்பு போல கெட்டித்திருந்தது.

''நான் எங்கே தங்கணும் அத்தை?''

''உன் சௌகர்யம் போல இருந்துக்க. கல்யாண சமயங்கறதால பலரும் வந்து போவாங்க...''

தொனி, நீ ஒதுங்கியிருப்பது நல்லது என்பது போலி ருக்க, சுவாதி மும்முரமாய் அறையை சுத்தப்படுத்த ஆரம்பித்தாள்.

பத்து நிமிட நடையில் தமிழக அரசின் 'கோ-ஆப் டெக்ஸ்' இருந்தது - திரைச்சீலைகளோடு போர்வைகளும் தேவைப்பட்டன.

"கார்ட்டன்ஸ் எங்கே தைக்கலாம் மலரினி?"

"நாங்க சாயபு கடையிலதான் எல்லாம் தருவோம்."

15 மீட்டர் கெட்டியான துணி மூட்டையுடன் நடந்து திரும்புவதும் லேசாயில்லை. அரைத்துத் தள்ளி விடுவது போல பேருந்துகள் விரைந்தன.

சாயபு தையல் கடையைப் பற்றி விசாரிக்க, காட்டிய கடை ஏ.ஸி.யோடு பளபளவென்றிருந்தது. வேண்டிய அளவுகளில் தானே வெட்டி ஓரமாய் தையல் ஓட்டினால் போதும் - அந்த வேலையை இந்த கடையில் ஏற்றுச் செய்வார்களா? யோசனையோடு நடந்தவள் கண்ணில் சிறு பெட்டிக் கடையும் அதில் தையல் மெஷின் ஓட்டிய முதியவரும் பட, உற்சாகமானாள்.

இவள் தன் தேவையைச் சொல்ல,

"செய்துடலாமே" என்றார் அவர்.

பரபரவென்று அவர் உதவியுடன் அளந்து துணியை வெட்டித் தர, பேச்சும் ஓடியது.

"ஒரிஜினில் சாயபு கடை இதுதான்ம்மா. அந்தப் பயல் எங்கிட்ட காஜா எடுக்க வந்து, வேலைப் பழகி இப்ப வேற லெவலுக்குப் போயாச்சு. மேலே உசருவது குற்றமில்லை. ஆனா வேலையும் வாக்கும் சுத்தமாயிருக்கணுமில்ல? அது இப்ப அவங்கிட்டயில்லை - ஆனாலும் 'ஷோ' காட்டினதும் மக்கள், அங்கதான ஓடறாங்க? ஆடைங்கறது நம்மை அம்சமாய் மூடி வைக்க... அவனோ எல்லாத்தையும் எடுப்பாக் காட்டறது போல தைக்கறான் - ஆனா அதுக்குத்தான் காலமாயிருக்குது..."

சுவாதி கூச்சத்துடன் நெளிந்தாள்.



"உன்னைய இங்கே பார்த்ததே இல்லியேம்மா - வீடு பக்கத்திலேயா?"

"எதிரேதான் - சுந்தர்நாதன் வீடு."

வெட்டிய துணியை மடித்துக் கொண்டிருந்தவர் நிமிர்ந்தார்.

"ம்ம்... பெரியவங்க இருந்தவரை நம்மிடம்தான் எல்லாம் - பிறகு இப்ப யாரும் வர்றதில்லை... பிள்ளைங்க பெத்தவங்களைப் போலில்லை."

இவளது இதயம் சற்று குலுங்கித் துடித்தது.

"நீ எப்படிம்மா சொந்தம்?"

"அவர் தங்கச்சி மகள்."

மேலும் ஆர்வமாகிப் பார்த்தார்.

"யாரு - சுஜாதா மகளா? உங்கப்பாவுடைய பஞ்சாபி நிறமும் உயரமும் சேர்ந்ததால சட்டுனு சாயல் பிடிபடலை... பார்த்ததுல சந்தோஷம்மா - வெளிநாட்டுல இருக்கீங்கல்ல? அம்மா எங்கே?"

இவள் சொன்ன விவரங்களைக் கேட்டுக் கொண்டவர்,

"ஆண்டவன் துணையிருக்க, யாரும் தனியில்லம்மா... துணிஞ்சுதான் வாழணும். நீ இனி இங்கேதானா?"

"ல்ல... முடிவு பண்ணலை."

"இது சரியான துணை தேடி ஸெட்டிலாயிடற வயசும்மா. உங்கம்மா ஆசைப்பட்டு தேர்ந்தெடுத்த துணை தப்பாயிடுச்சு - அந்த பஞ்சாபி சரியில்லைன்னு கேள்விப்பட்டேன். சுஜாதாவிற்கு ஏற்ற பையன் அவனில்லைன்னு அப்பவே எனக்கொரு பயந்தான் - என்ன..? விஷயம் கோணலான பிறகு எல்லாரும் சொல்றதுதானேன்னு

நினைக்கறியா? சரி இப்ப இன்னொன்னு சொல்றேன். இப்ப உங்க மாமா வீட்டார் உன்னை வரவழைச்சது பாசத்தால இல்ல - காரியம் ஆகணும்னு. ஆக சுதாரிப்பாய் இரு.''

வெலவெலத்துப் போனாள்.

மூன்றாம் நபர் தன் குடும்பம் பற்றி தந்த தகவலில் வாயடைத்து வீடு திரும்பினாள் சுவாதி...

## 9

அந்த அறை இப்போது அழகாகவே இருந்தது. மரத்தாளால் தேய்க்கப்பட்ட கதவு ஜன்னல்கள் வழவழப்பாகி இருந்தன. வண்ண திரைச் சீலைகளும், புது மெத்தையை மூடிய அதே ரக போர்வையும், ட்யூப் - லைட்டின் வெளிச்சத்தில் அறையை பிரகாசமாக்கின.

சமையல் பரணில் கிடந்த ஒரு பாத்திர ஷெல்பை பழுது பார்த்து, அறைக்கு எடுத்து வந்தவள், டிரங்கு பெட்டியின் புத்தகங்களை சீராய் அதில் அடுக்கி அழகு பார்த்தாள். நா.பா, சாண்டில்யனின் காதல் நவீனங்களைத் தான் அத்தை 'ஒரு மாதிரியான' புத்தகங்கள் என்றிருக்கிறார் என்றதில் சிரிப்பு பொங்கியது.

இது போக வீட்டின் முன் அறையையும் சுவாதி அழகு படுத்தி, சமையலில் உதவ, அத்தை சமாதானமானார். வசதியான ஒரு பிரம்பு நாற்காலி ஒன்றை வாங்கிப் போட்டு, அதில் சாய்ந்தபடி அம்மாவின் பழுப்பேறிய நாவல்களை சுவாதி படிக்க, அதில் யாரும் குறுக்கிடவில்லை.

சுவாதி அவர்களுக்காய் கொண்டு வந்திருந்த பரிசு பொருட்கள் உறவுகளை இளக்கியிருந்தன.

மணப்பெண்ணிற்கான கம்மலைக் கண்ட அத்தை,

''கொஞ்சம் பெருசாயிருந்தா பார்வையாயிருக்கும்'' என,

''இது வைரம்'' என்று சுவாதி சொன்னதும், பளபளத்தார்!

பழுப்பில் வெள்ளி வேலை செய்த புது சல்வார் போட்ட, மலரினி, பொருத்தமாய் வைரக் கம்மலையும் சேர்த்து, அதைக் காட்ட சுவாதியைத் தேடி மாடி வந்த போதும், மூத்தவள் வாசிப்பில் அமிழ்ந்திருந்தாள்.

''எப்படியிருக்குது?''

''ஓ... டிரஸ்... ரொம்ப நளினமாயிருக்குது.''

''கம்மலைக் கேட்டேன் சுவாதி'' - சிரித்தாள் மலரினி.

''அடடே.. கச்சிதமாயிருக்குது உனக்கு.''

''வாசிக்கிற போது உன் கவனமெல்லாம் வரிகளில் தான் போல - அதுவும் பழைய தமிழ் நாவல்?'' தோள் குலுக்கிய இளையவளை வியந்து பார்த்தாள் சுவாதி.

அயல் தேசத்தில் வளர்ந்த மகளுக்குள் தாய்மொழிப் பற்றை ஊன்றியது அம்மாதான்.

தமிழின் அருமை பெருமை பற்றி விதவிதமாய் எடுத்து சொல்வார்கள்.

'புதுவையில் பாரதிதாசன் ஆசிரியராய் இருந்தபோது, அகரத்தைக் கற்று தர 'அணில்' படமிருந்ததை கண்டித்து

ப்ரெஞ்ச் அரசுக்குக் கடிதம் எழுதினாராம் சுவாதி. 'ஒரு குழந்தையின் வாழ்வு அம்மாவிலிருந்து தொடங்க வேண்டுமே தவிர, அணிலிலிருந்தல்ல' என்ற அவரது கருத்தை பிரெஞ்ச் அரசாங்கமும் ஏற்று பாட புத்தகத்தில் மாற்றம் செய்தது. இப்போ குழந்தைகளின் எழுத்தறிவு 'ஆப்பிளில்தான் தொடங்குது. வேற்று மொழி அவசியந்தான் - ஆனா அதற்காய் சொந்த மொழியை ஏன் தவிர்க்கணும்?'

இங்கே வந்த பின்பு அக்கேள்வி சுவாதியையும் குடைந்ததுதான், ஆனாலும் மணப்பெண்ணுடன் வாதம் புரிய விரும்பாமல் வெறுமே புன்னகைத்தாள்.

''கிளம்பு சுவாதி சில. சாரீஸை எக்ஸ்சேஞ்ச் பண்ண வேண்டியிருக்குது. கூட வா ப்ளீஸ்...''

''நா... நான் எதுக்கு?''

''சுரேஷும் வருது - அது சும்மா - வேஸ்ட்... நீ வந்தா ஹெல்ப்ஃபுல்.''

ஆங்கில வார்த்தைகளின் தூவலுடன் அவள் அபிநயங்களுடன் பேசியதை பார்த்த சுவாதி தயங்கினாள்.

தன்னைச் சந்தித்த மாப்பிள்ளை சுரேஷின் ஆர்ப்பாட்டம் அவளை கூசச் செய்திருந்தது.

''அடடே, மலர், உன் கஸின் பேரழகியாய் இருக்காங்களே - இதில் பாதி கூட. உனக்கு வரலியேம்மா'' என்று நாடக பாணியில் அவன் புலம்பியதை மலரினியின் வீட்டார் ரசித்ததாய் தெரியவில்லை.

ஆனால் மறுத்தவளை விடாமல் எழ வைத்து, தயாராக்கி விட்டாள் மலரினி.



''அப்படியே ப்யூட்டி பார்லருக்கும் போயிட்டு வரலாம். போன தரம் என்னோடு அங்கே வந்த சுரேஷ் உன் அழகைப் பற்றி ஆஹா ஓஹோன்ன, அங்கேயுள்ள சரளா அக்காவிற்கும் உன்னைப் பார்க்க ஆசை.. ப்ளீஸ்.''

மாடி ஏறி வந்த அத்தையின் கையில் நெருங்கக் கட்டிய ஜாதி மல்லிச் சரம்.

''இதை வச்சிக்கோ சுவாதி.''

''தலைமுடியை மலரினிக்கு... அவதானே கல்யாணப் பொண்ணு?''

''பின்னவும் மாட்டா - 'பின்' குத்தக் கூடாது - பிறகெப்படி மலரினி பூ வச்சுக்கறது? உன் பின்னலுக்கு அழகாயிருக்கும். ஏதேனும் நகையும் போட்டுக்கோயேன் உன்னை அலங்காரமாய் பார்க்க ஆசையாயிருக்கு.''

அத்தையின் ஆசையில் நெகிழ்ந்தவள், அம்மாவின் கல் ஜிமிக்கி போட்டு, கருநீலத்தில் வெள்ளிப் பொட்டிட்ட சன்ன பட்டுடுத்தி, ஜாதி மல்லிச் சரத்துடன் கீழிறங்கினாள்.

சில உறவினர்கள் வந்திருந்தனர் போலும் - பேச்சு சத்தத்தில் தயங்கினாள்.

''வேற்று ஆட்களில்லை - நமக்குச் சொந்தந்தான்'' என்று அத்தை அழைத்தாலும் மற்றவர்களின் பார்வைகள் குத்தின.

''அத்தனை சரளமாய் தமிழ் பேசுவா, படிப்பா. சமையலிலும், சரளந்தான்'' அத்தை தொடருவதற்குள், உள்ளே நுழைந்த மாப்பிள்ளை சுரேஷ் ஆர்ப்பாட்டத்தை ஆரம்பித்தான்.

''அடடே, உங்களைப் பெண் பார்க்க வந்திருக்காங்களா ஸ்வாதி? அலங்காரம் அப்படித்தானிருக்கு - ஸ்வீட், காபி எங்கே?''

வந்தவர்களின் முகம் அசடு தட்ட, அத்தையும்,

''அதெல்லாமில்ல தம்பி - இருங்க, மலரை வரச் சொல்றேன்.'' என்று மழுப்ப, சுவாதிக்கு சந்தேகம் தட்டியது - தனக்கு மாப்பிள்ளைத் தேடும் முயற்சி ஏதும் ஆரம்பிக்கிறதோ 'என்று!

ஆனால் மலரினி வந்த பின்பும் சுரேஷ் இடத்தை விட்டு அசையாமல் இங்கிலாந்தின் வாழ்க்கை முறை பற்றி கேள்விகளாய் குடைந்தான்.

''எனக்கு அங்கே வேலை கிடைக்குமா சுவாதி?''

''நம்ப தகுதி, திறமை பொறுத்து. விண்ணப்பிக் கலாம்.. ஆனா இப்ப இந்தியாவில் வேலை வாய்ப்பு தாராளம்னு தோணுது.''

''ஓக்கே. ஆனா வெளிநாட்டுக்கு வேலைன்னால் ஒரு ஜோஷ்! இங்கே அலட்ட வசதியாயிருக்கும்'' - என்றவன் கண்ணடித்தான்.

அத்தை தாளாமல்,

''என்னன்னு அலட்ட? சுவாதியப் பெத்தவங்க லீஸுக்கு எடுத்த வீடு அது. ஒரு சாமியார் மடமாம் - அதுதான் இன்னையளவுக்கு அவுக சொத்து - அதுவும் இன்னும் இருபது வருஷத்துக்கு. நம்மூருல பெட்டிக் கடை நடத்துறவங்ககூட நாலைஞ்ச வருஷத்துல கண்ணைப் பறிக்கறாப்ல ரோஸ், பச்சையின்னு பெயிண்ட் பூசி ஒரு ரெண்டடுக்கு வீட்டை எழுப்பிடறான். பொண் டாட்டி உடம்புல இருபது பவுன் மின்னிடுது.''



''நாம போலாமா, மலரினி!'' முதலில் வெளியே போகத் தயங்கிய சுவாதி, இங்கிருந்து கிளம்பினால் தேவலை என்று பட, எழுந்தாள்.

சுரேஷ் கொண்டு வந்திருந்த காரின் பின் இருக் கையில் அமர்ந்து கொண்டவளுக்கு, முன்புறம் ஜோடியா யிருந்தவர்களைப் பார்க்க, 'திடும்'மென திவாகரின் ஞாபகம் வந்தது. அவன் தந்த 'செல்' போனை சார்ஜ் செய்து வைத்திருந்தாலும் அழைக்க மனமில்லை.

ஏன்... அவன் கூடத்தான் இவளை அழைத்துப் பேசி யிருக்கலாம்...

இந்த ஊரில்தான் இருக்கிறானா... அல்லது பொழுது நகராமல் சென்னை போல வேறிடம் போய்விட்டானா?

அங்கே அவனுடன் அயல்தேசம் போய் குடும்பம் நடத்த எத்தனையோ பெண்கள் ஆவலாய் இருப்பார்கள்... சின்ன பொறுமலுடன் அசை போட்டது அவள் மனம்.

உடும்பாய் பிடித்துக் கொண்டானே என்று முன் அஞ்சிய, அலுத்த மனம் இப்போது திவாகருக்காய் ஏங்குகிறதா என்ன?

ஜவுளிக் கடையில் மலரினி புடவைகளைத் தேர்ந் தெடுக்க உதவியவளின் கண்கள், உடைகளை வாங்கக் கூடியிருந்தவர்களையும் சுவாரஸ்யமாய் ஆராய்ந்தன. ஆராய்ந்த விழிகள் ஓரிடத்தில் ஆச்சரியமாய் நிலை குத்தின!

அந்த உயரத்தை, அலட்சிய தோரணையை சுலபமாய் கண்டு கொள்ளலாம்தான். அவன் பார்வையும் தன்னைத் தடவியதில் சிலிர்த்தது.

தன்னைப் பின் தொடர்ந்துதான் இங்கு வந்திருக்கிறானா?

ஆக அவன் இதே ஊரில்தான்...

அந்த நிம்மதியில் அவளது கால்கள் இயல்பாய் அவனிடமாய் நகர்ந்தன. ஆனால் அவன் விலகி மாடிப் படியில் விரைவாய் ஏற, விக்கித்தாள்.

அவனைத் தொடர்ந்து போகவா, அல்லது ஒதுங்கவா... குழம்பினாள். சற்று நேரத்தில் இவளது 'செல்' சிணுங்கியது. இந்த 'எண்'ணை அவன் கலா ஆண்ட்டிக்கும் தெரிவித்திருந்ததால், அவ்வப்போது அவர்கள் அழைத்ததுண்டு. ஆனால் இந்த அழைப்பு வேறு 'எண்'ணிலிருந்து,

"நான் திவாகர்."

"ஓ...?" வேறென்ன பேச என்பது அவளுக்குப் புரியவில்லை.

"எப்படி போயிட்டிருக்கு?"

"ம்ம்... பரவாயில்லை. எல்லாம் பழகிட்டிருக்கு.. நீங்க இங்கதானா?"

"ஆமா..."

"என்னால உங்களுக்குத் தொந்தரவு... வேலை நடக்காமல்..."

"போன், இன்ட்டர்-நெட் மூலம் எங்கேருந்தும் வேலையை செய்துக்கலாமே. இன்னொன்னு..."

"சொல்லுங்க."

"அந்த காது - நகை உனக்கு ரொம்பப் பொருத்தம். தினமும் போட்டுக்கோ."

அத்துடன் தொடர்பு அறுபட, அவளுக்கு ஏனோ சிரிப்பு வந்தது.

மீண்டும் மலரினியோடு சேர்ந்து உற்சாகமாய் புடவைகளை அலசியவள், தனக்காகவும் ஒன்றை தேர்ந்தெடுத்து வைத்தாள்.

தான்தான் அசட்டுத்தனமாய் அவசரம் காட்டி விட்டோம். சுரேஷ், திவாகரைப் பார்த்தால், கேள்விகளால் தொணப்புவதோடு அத்தையிடமும் ஏதேனும் உளறி வைக்கக் கூடும். பின்பு வீட்டிற்கு வரும் உறவு கும்பலின் கேள்விகளுக்கு பதில் சொல்லி மாளாது - ஆகவேதான் திவாகர் ஒதுங்கியிருக்கிறான்.

இரவு உணவிற்குப் பின்,

"அத்தை, நான் எல்லாம் ஒழிச்சுக்கறேன். நீங்க படுங்க - பிறகு நான் மாடியிலேயே படுத்துக்கவா? வாசிச்சபடி தூங்க வசதி" என்றிவள் கேட்டபோது மறுப்பில்லை.

ஒரு பக்கெட் நீரை வறண்ட சிமெண்ட் தரையில் தெளித்து, மின் விசிறியை சுழல விட்டபோது, அறை 'சில்'லென்றானது. உடைகளைத் தளர்த்தியவள், கட்டிலில் வாகாய் தலையணைகளை அடுக்கி, புத்தகத்துடன் சாய்ந்தாள். கனமான திரைச்சீலை ஜன்னலை மூடியிருந்ததால் ஜன்னல் திறந்திருந்தது. கதவையும் கூட சுவாதி தாளிடவில்லை. தூரத்து திருமண மண்டபத்திலிருந்து வந்த பழைய காதல் பாடல்கள் சுகமாய் காதுள் புகுந்தன. ஆக கருத்து புத்தகத்தில் அதிகம் பதியவில்லை.. ஆக விளக்கை அணைத்து விட்டு அப்படியே கண்ணயர்ந்தவளுக்கு 'சட்'டென விழிப்பு தட்டியது...

கண்ணை உறுத்தியது எது?... புருவஞ் சுழித்தாள்.

கொள்ளலாமா?

விழிகளைத் துளித் திறந்து போர்வைக்காக கை நீட்டியவளின் கண்கள் அதிர்ந்து, விரிந்தன -

இதென்ன வெள்ளித் தட்டு போல ஒரு வெளிச்ச வட்டம் அறையைச் சுற்றி வருகிறது?

கிளம்பிய அலறலை அடக்கிக் கொண்டு கவனித்தாள்...

## 10

வேற்று கிரகங்களிலிருந்து பூமிக்கு வரும் பறக்கும் தட்டு பற்றி அவள் வாசித்ததுண்டு. ஆனால் அவை அறைக்குள் புகுந்து வட்டமடிக்குமா என்ன?

உறக்கம் முழுக்கக் கலைய, அது டார்ச்சின் வெளிச்சம்தான் என்பது புரிந்தது. சுவாதி எழுந்து அமர, ஒளி வட்டம் காணாமற் போனது!

அவள் கவனம் ஜன்னல் பக்கம் திரும்பியது - திரையை விலக்குவதற்காய் உள்ளே விடப்பட்ட கம்பு ஒன்று மெள்ள பின் வாங்கிக் கொண்டிருந்தது!

விழித்த மூளைக்கு முழுக்க புரிந்தது.

பக்கத்து அறை பிரகஸ்பதிகளின் சேட்டை இது!

நீள குச்சி மூலம் திரைச்சீலையை விலக்கியவர்கள், கிடைத்த சந்தில் ஒளியை அனுப்பி ஆராய்கிறார்கள்.

புடவையைத் தோளோடு போர்த்தியவள் எழுந்து போய் ஜன்னலை சாத்தி விட்டு, மறுபடி வந்து படுத்து, சற்று நேரம் புரண்ட பின் தூங்கிப் போனாள்.

காலையில் எழுந்து காபி பருகியபோது அம்மாவின் பயங்கள் சரிதான் என்பது புரிந்தது. தகுந்த துணையின்றி ஒரு பெண் புது இடத்தில் இருக்க முடியாது. மீண்டும் மலரினி பத்து 'ப்ளீஸ்' சிட்டு கெஞ்ச, அவளோடு அழகு நிலையத்திற்கும் போனாள்.

''ஹைய்யோ ஜவுளிக்கடை வாசல்ல நிறுத்தற பொம்மையாட்டம் இருக்காளே - உன் கஸின்!'' அழகு நிலையத்தை நடத்திய சரளா என்ற பெண் வித விதமாய் வியந்து பாராட்ட சுவாதி கூசினாள்.

''சில கொண்டையலங்காரம், ஒப்பனை தினுசுகளுக்கு எங்களுக்குச் சரியான மாடல் தேவைடா - நீ சரின்னா, உன்னைப் பயன்படுத்திக்கலாம் சுவாதி. என்ன?'' எனக் கேட்க, தயங்கினாள்.

''இந்த ராசி, உன்னைப் பிரபல மாடலாக்கிடலாம் - யார் கண்டா - உன் அழகு அப்படி'' என்றதும் முடிவெடுத்து மறுத்தாள்.

''அதெல்லாம் வேண்டாங்க. எனக்குப் பழக்கமில்லை.''

''என்ன பழக்கம்? சும்மா இப்படி நின்னு, இப்படி பார்த்து லேசா சிரிச்சாப் போமேடா...''

சரளா நின்று, பார்த்த விதம் சுவாதிக்கு அத்தனை திருப்தியாயில்லை! ஆக மலரினி ஏதேதோ அப்பிக் கொண்டு உட்கார்ந்திருந்த நேரம், இவள் பத்திரிகை ஒன்றை முழுக்க படித்து முடித்து விட்டாள்.

சரளாவின் பாராட்டு, கேள்விகளுக்கு ஒற்றை வார்த்தை அல்லது சிறு முணுமுணுப்பைத் தந்துவிட்டு ஒதுங்கினாள்.

சரளா விடவில்லை.

''கையில் போதுமான 'பேமென்ட்' தர்ரேன்டா. அம்சமாய்.. போட்டோ எடுக்கக் கூடிய பையனுண்டு. அவன் மூலம் நீ நல்ல பிராபலமாகலாம்.''

''எனக்கு அதில் நோக்கமில்லை.''

''காசுக்கு காசு, பேருக்குப் பேரு.''

சரளா இவள் கன்னத்தைத் தடவிய போது ஏனோ அருவெறுப்பாய் இருந்தது.

ஒரு அழகு நிலையத்தை நடத்திய சரளாவிற்கு அதற்கான கட்டான உடலமைப்போ களையான முகமோ இல்லை.

உப்பி வழிந்த உடம்பை மறைத்திருந்தால் கூட தேவலை.

இவளோ சதைத் தொங்கல்களை பிறர் பார்வைக்குத் தந்திருந்தாள் - கண்கள் ஒரு கடின கூர்மையுடன் பிறரைத் துளைக்க, அழுந்த சாயந்தோய்ந்த உதடுகள் விகாரமாய் இளித்தன -

மலரினி ஏனிங்கு வரவேண்டும் என்ற ஆதங்கத்துடன் ஒரு வழியாய் அவளைக் கிளப்பி, வெளியேறியவள்,

''ஹையோ - அந்த ஸில்வர் கலர் சப்பல் ரொம்ப ஸ்டைலா இருக்குல்ல?'' என்றபடி மலரினி அருகிலிருந்த ஒரு செருப்புக் கடைக்குள் பாய, பெட்டிக் கடையில் தொங்கிய பத்திரிகைகளைப் பார்வையிட்டபடி நின்றாள்.

''சுவாதி..''

மிக சன்னமாய் கேட்ட தன் பெயரில் திடுக்கிட்டு திரும்பினாள்.

''நான்தான் - பயந்துட்டியா?'' கேட்ட திவாகர் வேறெங்கோ பார்த்தபடி நின்றான். அவனோடு தான் போய் சொந்த ஊரில் இறங்கி நிற்பது, வீண் பேச்சிற்கு இடம் தரும் என்பதை அவன் இந்த அளவிற்குக் கொண்டு போக வேண்டுமா என்று பட, அவள் நேரே அவனைப் பார்த்தாள் -

''நேற்றிரவு நடந்த சம்பவம் உன்னைக் கொஞ்சம் கலவரப் படுத்தியிருக்கும் - பக்கத்து வீட்டு தடியன்களைப் பற்றி பயம் வேணாம் - இனி அவங்க தொந்தரவில்லாமல் பாத்துக்கறேன்.''

என்றவன் சொல்ல, சுவாதி திகைத்தாள்.

நேற்றிரவு நடந்ததை அவள் யாரிடமும் சொல்லாதிருக்க, விஷயம் இவனை எட்டியது எப்படி? தனக்கும் பக்கத்து வீட்டு அவன் சொன்னது போல தடியன்களுக்கும் மட்டுமே தெரிந்தது திவாகருக்கும் தெரியுமெனில்...

இவள் பார்வையை சந்தித்தவன் -

''ஏற்கெனவே சொல்லியிருக்கேன் - உள் உணர்ச்சிகளை உன் முகம் துல்லியமாய் பிரதிபலித்துடுதுன்னு... கவனமாய் ஒரு சுவாதி'' என்றான் கடுத்த முகத்துடன்.

என்ன சொல்கிறான்? தான் அவனை சந்தேகித்ததை தன் பார்வை அதற்கு வெளிக்காட்டி விட்டதாகவா?

அவன் கண்கள் அத்தனை கெட்டிக்காரத்தனம் உள்ளவையா அல்லது தன் முகம்தான் கண்ணாடியாய் தன் எண்ணங்களைக் காட்டி விடுகிறதா? திவாகர் அந்த

'தடியன்'களின் உள்கை, உடந்தையோ என்று கணநேரம் தோன்றியதற்கு வெட்கினாள் -

ஆனால் நள்ளிரவு நடந்த விவரம் அவனுக்கு எப்படித் தெரிந்தது - என்ற கேள்வியையும் புறந்தள்ள முடியாதே.

''இனி இந்த ப்யூட்டி பார்லருக்கும் நீ வரவேண்டாம், சுவாதி...''

அது ஏற்கெனவே அவள் செய்திருந்த முடிவுதான். என்றாலும் அவன் உத்திரவு தொனியில் சொல்ல, இவள் மனம் முரண்டியது.

சிறு குழந்தையை,

'இப்படி ஓடாதே.'

'அதை சாப்பிடாதே.'

'மூக்கைச் சிந்து.'

என்றபடி உடன் வரும் ஆயா போல, இவன் தன்னை பாவித்துக் கொள்கிறானே என்ற அலுப்புடன்,

''தாங்க்ஸ்'' - என்றபடி மலரினி நின்ற செருப்புக் கடைக்குள் நுழைந்து விட்டாள்.

ஆனால் வீடு திரும்பிய பிறகு அப்படி அவனுக்கு முதுகு காட்டியிருக்க வேண்டாம் என்று பட்டது. திவா கரைக் காணாத போது அவனைத் தேடுவதும், பார்த்ததும்,

'இவனுக்கு நம்மைத் தொடருவதைத் தவிர வேறு வேலையே இல்லையா?' என்று முறுக்கிக் கொள்ளும் முரண்பாடும், புரியாத புதிர்தான்.

வீட்டில் அத்தை, தன் அண்ணியோடு அமர்ந்த குரலில் பேசிக் கொண்டிருந்தவர் சுவாதியைக் கண்டதும் பரபரப்பாய் எழுந்தார் -



'டீ போடவாம்மா சுவாதி - உனக்காகத்தான் காத் திருந்தோம் -

குடிச்சபடி பேசலாம் வா. மலரு, உன் ப்ரெண்ட் சுவர்ணா போன் போட்டா - என்னன்னு கேளு'' - என்றபடி சமையலறைக்குப் போனார்.

கால், கை கழுவுபவள், ஃபால் வைத்துத் தைக்க வேண்டிய புதுப் புடவையோடு ஊசியும் நூலுமாய் அமர்ந்தாள்.

''இப்படித்தான், சும்மா ஒரு பொழுது கழிக்காத பொண்ணு - யாருக்குக் கொடுத்து வச்சிருக்கோ'' - அத்தை பேச ஆரம்பிக்க, சுவாதிக்கு நெருடியது - ஏதோ மாப்பிள்ளைப் பேச்சு கிளம்பப் போகிறது போலும்.

அவரது அண்ணி மதியம் தூங்கி எழுந்த கோலம் மாறாமல், உறக்கத்தில் சற்று வீங்கிய கண்களால் சுவாதியை உறுத்துப் பார்த்தார்.

''ம்ம் - நம்மதில் இத்தனைப் பார்வையாய் பொண் ணுங்க கிடையாது. குணமும் பழுதில்லங்கறே... இனம் மாறிப் போச்சுன்னாலும் அந்தக் குறையை நிரவ வழி வகையிருக்கே..''

தான் பேச்சைச் சரியான வழியில் தொடர்ந்த திருப்தி யுடன் தேநீரை உறிஞ்சினார் அந்தப் பெண்.

''ஆமாண்ணி. சுவாதிக்கும் நம்மூருல ஸெட்டிலாகிட ணும்னுதான் ஆசை. அவளுக்கும் தகுந்த வரன் அமைஞ்சிருச்சுன்னா மலரு கல்யாணம் போலவே விமர்சையா நடத்திரலாம். பாதி பஞ்சாபிங்கற குறைய நிரவ அவகிட்ட போதுமான காசு இருக்குது. இங்கிலாந் திலுள்ள பெரிய வீட்டை வித்தா பெரும் பணம் வரும்.

இந்த வீட்டைப் பெரியவங்க வைத்திய செலவுக்காய் அடமானம் வச்சோம் - வேறெங்கே? பாங்க்குலதான். ஆனாலும் மீட்கணுமே. இந்த வீட்டுல ஒரு பங்கு சுவாதிக்குன்னு ஆன பிறகு அவ அதை மீட்காமப் போவாளா? அதுக்கொரு 25 லட்சம் போக, மீதி பணத்துல ராஜகுமாரியாட்டம் கல்யாணத்தை தடபுடல் படுத்திரலாம்."

"அதுக்கு பாத்யதை உள்ளவதானே? செய்ய மாட்டாளா என்ன?" சுவாதிக்கு எங்கோ பொறி தட்டியது. எதிர் அடமானம் பற்றி திவாகர் சொன்னபோது அலட்சியமாயிருந்தவள், இப்போது அவற்றை நினைவிற்குக் கொண்டு வர முனைந்தாள்.

"என்ன அந்த சாமியார் மடத்தை விற்றா, ஒரு கோடி - அதாவது நம்ப காசுக்குத் தேறுமா?" பேராசை பச்சையாய் அந்த 'அண்ணி'யின் கண்களில் வழிந்தது.

"அதென்ன அண்ணி அப்படி கேட்டுட்டீங்க? நிலத்துக்கான மதிப்பு எகிறுனதில் இப்ப இங்கயே, இண்டு இடுக்கில உள்ள பழைய கட்டிடங்களுக்கு கோடியில விலை பேச, இங்கிலாந்திலுள்ள இடம்னா லேசா?"

"இருக்கட்டும் - என் சொந்தத்துல உள்ள பையந்தாம்மா - வசதிக்காரன். தான் ஆளு அம்சமில்லைங்கறதால அவன் கேட்கறது ஒண்ணே ஒண்ணுதான் - பொண்ணு பார்வையாயிருக்கணும்னு உன் வசதியைப் பார்த்தா, கல்யாணத்தை பிரமாதப்படுத்திடலாம்னு தோணுது. இந்த வீட்டுக்கு எவ்வளவு சொன்னே வசந்தா..? முப்பது லட்சமா - அதைத் தந்து மீட்டுட்டா - ஜோலி முடிஞ்சுது.."

தேநீரைச் சீப்பியபடி அப்பெண்மணி தான் நேற்று பார்த்த சினிமாவின் கதையைச் சொல்வது போல சொல்லிக் கொண்டே போக, சுவாதிக்கு பல விஷயங்கள் தெளிவாகின. ஆக தான் இங்கே காரியமாகத்தான் வரவழைக்கப்பட்டிருக்கிறோம் -

இங்கிலான்டில் கலா ஆன்ட்டி பயந்தது போல, இங்குள்ள சாயபு கடை தையல்காரர் எச்சரித்தது போல, இவளது எஞ்சிய உறவுகள் காசிற்குப் பறப்பவர்கள்.

அதை இவளிடமிருந்து பெறுவதற்கான தூண்டில் புழுதான் இந்த வீடு - 'உன் அம்மாவின் வீட்டின் ஒரு பகுதியை உனக்குத் தருகிறோம் - வா' என்ற ஆசைக் காட்டல்!

சொச்ச காசிற்கும் 'கல்யாண செலவு' என்ற வகையில் வேட்டு வைக்கப் பார்க்கிறார்கள்.

கணவனாகப் போகும் சுரேஷிடம் மலரினி சொன்னதை சுவாதியும் கேட்டாள் -

'வெளிநாட்டில் ரொம்ப வசதியாய் வளர்ந்த ஸ்வாதி, இங்கே ஸ்டார் ஹோட்டலில்தான் தங்குவான்னு நினைச்சோம் - நம்ப வீட்டுல ஏ.ஸி. பாத்ரூமில் ஷவர், பாத் டப் - ஏதும் கிடையாதே - ஆனாலும் ரொம்ப சிம்ப்பிளாய் எங்களோடவே தங்கிட்டா' - என்று.

இவள் எளிமையானவள் என்றதும், திருமணமே நடத்தி முழுத் தொகையையும் கறக்க முடிவு பண்ணிவிட்டார்கள்!

ஆனால் இந்த வீடு வங்கியின் எதிர் அடமானத்தில் இருந்தது எப்படி திவாகருக்குத் தெரிந்தது?

அது மட்டுமா... பக்கத்து வீட்டு வாலிபர்களின் சில்மிஷம் கூடத்தான் தெரிந்திருக்கிறது!

தான் பத்திரமாய் மாமா வீடு வந்து சேர்ந்தது பற்றி கலா ஆன்ட்டிக்கும், மிஸஸ் ரிச்சர்ட்ஸிற்கும் தெரிவித்தவளுக்கு அவர்களைக் குற்றம் சொல்லாமலிருக்க முடியவில்லை.

''அது சரி. ஆனா ஏன் திவாகர் என்னோடு அதே ஃபிளைட்டில் வர்ரதை எங்கிட்ட சொல்லலை? அவரை அடுத்த ஸீட்டில் பார்த்ததும் அரண்டுட்டேன்'' குறைபட்டாள்.

''தெரிஞ்சவர் உடன் வர்றான்னு சந்தோஷப்படுவேன்னு நினைச்சோம்.''

இழுத்தார்கள் -

''அப்போ அது மறைக்க வேண்டிய அவசியம்?''

''சிரமப்பட்டுதான் திவாகர் அதே ஃபிளைட்டில் டிக்கெட் வாங்கினார் - பயணச்சீட்டு கிடைக்குமோ இல்லையோ - ஆக எதையும் சுவாதியிடம் சொல்ல வேண்டாம்னார்...''

''நீங்களும் அந்த கதையை நம்பிட்டீங்க?'' கடுகடுத்தாள் - ''இது சுயநல உலகம் ஸ்வாதி - யாருக்காகவும் யாரும் மெனக்கெட விரும்புவதில்லை. வலிய வந்து இத்தனை உதவிகளைச் செய்பவரை நீ ஏன் புரிஞ்சுக்கலை? ஒரு எத்தனோடு உன்னை நாங்க அனுப்பலை - திவாகரைப் பற்றி தீர விசாரிச்சோம்.'

''எனக்குத் தெரியாமல் என்னென்னவோ நடந்திருக்குது...''

''அதிலும் திவாகரின் அக்காவிடம் பேசினால் நீயே உருகிடுவே - போ. தன் தம்பியைப் பற்றி ரொம்ப உயர்வாய் பேசினாள்.''

''உடன்பிறந்தவர்கள் விட்டுத் தருவாங்களா என்ன?''

''உன் ஸெல் நம்பரை திவாகர் தந்திருக்கார் - அதற்கு அந்த அக்காவின் அவ பேர் திவ்யா - நம்பரை எஸ்.எம்.எஸ். பண்றேன் - உங்கிட்ட பேசிப் பழகணும்னு அந்த பெண்ணுக்கும் ரொம்ப ஆசை.. நாங்க அந்தளவிற்கு உன்னைப் பற்றி பெருமையடிச்சிருக்கோம்...''

இப்போது ஏனோ அவளுக்கு அந்த முகம் தெரியாத திவ்யாவிடம் பேச வேண்டும் போலிருந்தது... தன் உறவுகள் ஏமாற்றி விட, வேறு யாரிடமேனும் அன்பும் ஆறுதலும் கிடைக்காதா என்ற பரிதவிப்பில் இருந்தாள் சுவாதி.

## 11

மரச்சட்டமிட்ட அச்சின்ன கண்ணாடியில் தன் முகத்தை ஆராய்ந்திருந்தாள் சுவாதி. தாய்நாடு போகப் போகிறோம் என்ற இன்ப எதிர்பார்ப்பில் விகசித்திருந்த முகம் இப்போது கூம்பி கிடந்தது. முகம் மலர்ந்திருக்க வேண்டுமானால் மனம் மகிழ்ந்திருக்க வேண்டுமே!

'நீ விரும்புவதை செய்வதில் உன் சுதந்திரம் அடங்கியுள்ளது.

நீ செய்வதை விரும்புவதில்தான் உன் சந்தோஷம் அடங்கியுள்ளது' என்ற முதுமொழி அவளுக்கு சம்மதமே. சுதந்திரமாய் தாய் வீட்டிற்கு வந்தாகி விட்டது. ஆனால் இங்குள்ள உறவுகள் தன்னை செய்ய வைக்க நினைப்பதை அவள் விரும்பத் தயாராயில்லை.

மேலும் சிக்கல்களுக்குள் சிக்கிக் கொள்ளும் முன் பறந்து விட வேண்டுமென்று பட்டது.

ஆமோதிப்பது போல சிணுங்கிய 'செல்'லை காதிற் குக் கொண்டு போனாள்.

''ஹலோ... நான் திவ்யா பேசறேன் - அதாவது திவா கரின் அக்கா..''

''ஓ... ஹலோ.. உங்களைப் பற்றி சமீபத்தில்தான் கலா ஆன்ட்டி சொன்னாங்க...''

இனிய திகைப்பில் தடுமாறினாள் சுவாதி.

''ஹைய்யோ அவங்களும் உன் ப்ரெண்ட் வாஸந்தியும் உன்னைப் பற்றிச் சொன்னதையெல்லாம், உன்னிடம் சொல்லலாமென்றால் இந்த ஒரு நாள் போதாது... அப்புறம் என் தம்பி சொன்னது... சரி அதான் ஆசையை அடக்க முடியாமல் உன்னைக் கூப்பிட்டுட்டேன். சுவாதி. எப்படியிருக்குது இந்தியா... முக்கியமாய் அம்மா வீடு?''

பட்டும் படாமல் அது பற்றி சில தகவல்களைத் தந்த சுவாதி,

''உங்களுக்குப் பூரண ஆயுசுக்கா. ஏனோ உங்களிடம் பேசணும் போலிருந்தது - நானே கூப்பிடலாம்னு இருந்தேன்.''

''நீயும் நூறு வயசுக்கு இருந்தால் நானும் பூமியில் தங்குவதில் ஆட்சேபணையில்லை-'' கலகலவென்று சிரித்த திவ்யாவின் உற்சாகம் இவளையும் பற்றிக் கொண்டது.

''உங்க அவர், குழந்தைகள் எல்லாம் சௌக்கியந் தானே?''

''சௌக்கியமாய் சுழண்டு கொண்டிருக்கிறார் அவர் - நாட்டுக்காக! என் ரெண்டு குழந்தைகளும் என்னைச் சுழல விட்டுட்டிருக்காங்க. ரெண்டு பேரையும் இவாசு சிப்பாய் சிநேகிதன் வெளியே கூட்டிட்டுப் போயிருக்கற தால இப்ப கொஞ்சம் நிம்மதியாய் பேச முடியுது... என்னவருக்கும் உன்னோடு பேச, உன்னை சந்திக்க ரொம்ப ஆவல் - கல்யாணப் பேச்செடுத்தாலே சுணங்கிய ஜீவாவைச் சுருட்டிய பெண் எப்படியிருப்பாள்னு!''

''ரொம்ப எதிர்பார்க்காதீங்க...''

அவர்கள் தான்தான் திவாகரின் மனைவி என்றே முடிவு பண்ணி விட்டது. சற்று சங்கடமாயிருந்தாலும் இத்தனை பிரியமான வரவேற்பு சந்தோஷமாயுமிருந்தது.

''சரி, உங்க ஊர் நீ எதிர்பார்த்தது போலிருக்குதா? கோயில்கள், தாமிரபரணி, நெல்லைத் தமிழ், அல்வா, புடவை ஷாப்பிங்னு?''

''புது அனுபவம்தான்.. மலரினியோடு கடைகளுக்குப் போறேன்.''

''சில அனுபவங்கள் மிரட்டிடுச்சு போலவே சுவாதி? பயப்படாதே திவாகர் உன்னைப் பத்திரமாய் பார்த் துக்குவான்.''

''உங்களுக்கு எப்படி?''

''நீ பிரியமாய் எங்களைப் பற்றியெல்லாம் விசாரிச்சே... திவா அதெல்லாம் செய்றதில்லை! எடுத்ததுமே உன் புராணம்தான். பக்கத்து வீட்டு காலி பசங்களின் விஷமம் பற்றி சொல்லும்போதே அவனுக்கு ரொம்ப ஆத்திரம். அந்த விஷமம் பற்றி அவனுக்குத் தெரிவிச்சது சாயபு டெய்லராம். எதிரேயுள்ள கடையிலேயே அவர் இருக் கறதால் உன்னைப் பார்த்துக்க சொல்லியிருந்தானாம்... அதை விடு - பக்கத்திலேயே பாபநாசம், குற்றாலம், மணிமுத்தாறுனு குளிர்ச்சியான இடங்களுண்டு. அங்க குளியல் போட்டுட்டு வந்தால் உடம்பே ஏ.ஸி. பண் ணினது போலிருக்கும் - போயிட்டு வா...''

“இங்க எல்லோரும் கல்யாணம் வேலையில் மும்முரமாயிருக்காங்க..”

“சரி - முதல்ல கல்யாணத்தை ரசி - பிறகு பேசறேன் சுவாதி - வைக்கட்டா?”

பேசி முடித்த சுவாதிக்குள் கலவையான உணர்வுகள் - திவாகர் ஏன் அத்தனையையும் தன் அக்காவிடம் சொல்ல வேண்டும் என்பது உட்பட. ஆனால் இறுகிய முடிச்சாயிருந்த சந்தேகங்கள் தளர்ந்திருந்தன. தன்னை அக்கறையாய் கவனிக்க, பேண, சிலருண்டு என்ற நிம்மதியில் மனம் லேசாகியிருந்தது.

ஆனால் சந்தேகம் - நல்லது, அவசியமானதும்கூட என்று சுவாதி சீக்கிரமே உணர நேர்ந்தது!

வீட்டின் மாடிப் பகுதியில் குளியலறை இல்லாததால் கீழே குளித்துவிட்டு, ஈரம் மிச்சமிருந்த உடம்பில் ஆரஞ்சு நிற சேலையைச் சுற்றியபடி மாடிப்படிகளில் ஏறப்போன சுவாதியை அந்த குரல் இழுத்துப் பிடித்தது.

“ஏதோ சந்தன சிலைதான் நடந்து போகுதோன்னு அசந்துட்டேன். சுவாதி கல்யாண பெண்ணுக்கு மருதாணி இட்டு விட வந்தேன் - கூடவே தங்க ஃபேஷியல் - அப்பதானே கல்யாண களை கட்டும்? நீ கட்டியிருக்கும் ஆரஞ்சு சேலைக்கு மெஹந்தி இட்டுகிட்டா அசத்தும் - வா வந்து உட்காரு - இருபதே நிமிஷம்.”

சரளா ஆர்ப்பரித்தாள்.

இனி அந்த அழகு நிலையத்திற்குப் போய் இவளைப் பார்க்கக் கூடாது என்று தான் நினைத்திருக்க, இந்த சரளா வீட்டிற்கே வந்து விட்டாளே... என்று அலுப்பதற்கு முன்னமே அங்கிருந்த பெண்களின் முகப்பூரிப்பு சுவாதியை ஆச்சரியப்படுத்தியது.

“அடடே எனக்குக் கூட அ[illegible] [illegible]ாய் பற்களைக் காட்டிய வசந்தா அத்தையின் இடது உள்ளங்கையில் மலர்ந்த தாமரை அச்சாகியிருந்தது!

“பின்னே, கல்யாணப் பெண்ணின் அம்மான்னா சும்மாவா? இது ஒரு விசேஷ அரேபிய மெஹந்தி - ஏழு, எட்டு நாட்களுக்கு மங்காமல் இப்படியேயிருக்கும் - நிறைய முகூர்த்தங்கள் வருதே? ஆக அழகு பண்ணிக்க பல கல்யாண வீட்டார் வர ஆரம்பிச்சிடுவாங்க - நான் இப்படி ஃப்ரீயாய் வர முடியாது - அதான் சீக்கிரமே வந்துட்டேன்.”

“ஒரு நிமிஷம்” என்றபடி மாடிக்குப் போன சுவாதி புடவைக் கட்டை சீராக்கி, தலை வாரிக் கொண்டு வந்தாள்.

“சின்ன பவுடர் பூச்சு, துளி சாயம் ஏதுமில்லாமலே அழகு அள்ளிக்குதுன்றதற்காக, அப்படியே வந்து நிற்கறியேடா...” என்று உருகிய சரளா, தன் கைப்பையிலிருந்த சில ஒப்பனை சாதனங்களை சுவாதியின் முகத்தில் ஒற்றியெடுத்து, தடவி விட, அங்கிருந்தவர்களின் கண்கள் எல்லாம் பாராட்டில் படபடத்தன!

இரு உள்ளங்கைகளிலும் மருதாணி பூவரிகளுடன் ஆரஞ்சு சேலையுடன் உட்கார்ந்திருந்த தான் பார்ப்பவரின் கண்களை நிறைக்கிறோம் என்ற உணர்வு சுவாதிக்கே தோன்ற, சற்று சங்கோஜமாய் நெளிந்தாள்.

“இத்தனை அழகை ஆள எந்த ஊர் ராஜாவுக்குக் கொடுத்து வச்சிருக்கோ?” என்ற சரளாவின் நெடும்மூச்சில் இவள் குறுகினாள். ஏனோ மறுபடி திவாகருடன் முதன்முறை அந்த சீன உணவகத்தில் பேசியதும் நினைவிற்கு வந்தது.

"இந்த 23 வயதிற்கு உனக்கு நிறைய அனுபவங்கள் தான் சுவாதி - வேதனையான அனுபவங்களும் கூட... ம்ம்?" என்றவன் கேட்டதில் பரிதாபமில்லை - ஏன் பரிவு கூட இல்லை.

"வயிற்று வலியா? விட்டு விட்டு வலிக்கிறதா இல்லை குத்து, வலியா? வயிற்றின் எந்தப் பக்கம் - அல்லது அடி வயிற்றிலா?' என்று வயிறை அழுத்தியபடி விசாரிக்கும் ஒரு மருத்துவரின் தொனியில்தான் பல சமயம் பேசினான். ஆனால் பெண்கள் பேசும் முறை வேறுதானே.

தவிர எல்லோரையும் நம்பும் மனநிலையில் வேறு சுவாதி இருந்தாள் - ஆகவேதான் அப்படி 'சட்'டென்று ஒத்துக் கொண்டாள் போலும்...

பேச்சும் அங்கும் இங்குமாய் சுற்றி பாபநாசம் போவது பற்றி வர, சுவாதி ஆர்வம் காட்டினாள் - ஒருவேளை திவாகரின் சகோதரி திவ்யா, நெல்லையைச் சுற்றியுள்ள அழகிய ஊர்களை, அருவிகளைப் பற்றி பேசியதும் காரணம் போலும்.

"பாலாய் பொழியற அருவியும் அதைச் சுற்றி சூழ ரசிக்கிறது போல நிற்கிற மரங்களும் பூஞ்செடிகளும் ரொம்ப அபாரமாயிருக்கும். நீ அருவியில குளிச்சிருக்கியா சுவாதி?"

"ல்ல.. இங்லான்டில் நா அருவி பார்த்ததேயில்லை - ஏரிகள் நிறைய உண்டு - அதில் குளிக்க முடியாது."

"அப்ப நீ கண்டிப்பாய் பாபநாசம் போயிட்டு வந்துரணும் - மலரினி நீ கல்யாணத்துக்கு முன்னே சுரேஷோட சேர்ந்து சில போட்டோஸ் எடுத்துக்கணும்னு ஆசைப் பட்டியே...?" சரளா கேட்க, மலரினி ஒரு மாதிரி மையமாய் தலையாட்டினாள்.

"கல்யாணத்தப்ப நூற்றுக்கணக்கில் படமெடுத்துக்கப் போறாங்க" -

வசந்தா குறுக்கிட,

"அதுல முக்கால்வாசி படங்களில் மாப்பிள்ளைப் பொண்ணைப் பார்க்க சகிக்காது - வியர்த்து, தலையும் துணியும் கலைந்து - நிறைய நகையோடு மாலை வேற..." சரளா மறுத்தாள்.

"ஆமம்மா - அழகான... இயற்கையான ஓரிடத்தில் நாங்க ரெண்டு பேரும்? விதவிதமான போஸ்களில் ஒரு ரோல் படமெடுத்துக்கறோம் அம்மா. மோகனும் சுவாதியும் எங்களோடு வரட்டும்."

"நல்ல ஏ.சி. காரும், போட்டோக்ராபரும் ஏற்பாடு பண்ண நானாச்சு. அதுதான் உங்களுக்கு என் கல்யாண பரிசு. இனி நான் பரபரன்னு ஓடிரும் - ஆக நாளை சின்னதாய், நிம்மதியாய் ஒரு பிக்னிக்!" கண் சிமிட்டினாள் சரளா.

இப்போது சுவாதிக்கும் கூட அது விகற்பமாய் படவில்லை!

ஆனால் மறுநாள் மலரினியின் தம்பி முறுக்கிக் கொண்டான் -

"என்னது? நீங்க ரெண்டு பேரும் குஷாலாய் படமெடுத்துக்கப் போறதுக்கு - நான் துணையா? வேற வேலையில்லயா என்ன?"

"என்னடா வேலை... ஓஹோ ஐயா கிரிக்கெட் மேட்ச்சை கண்ணு வீங்க பார்க்கப் போறே - அதான? சோம்பேறி."

"உங்களுக்குக் காவலாய் நான் கூட வந்தால் ரொம்ப சுறுசுறுப்பாக்கும்? ஒரு புதுமொழி தெரியுமா -

'நீ எத்தனை சுறுசுறுப்பாய் இருக்கிறாய் என்பதை விட, எதில் சுறுசுறுப்பாய் இருக்கிறாய் என்பதே முக்கியம்.' உங்களோட சேர்ந்து ஊர் சுற்ற நா வரலை - ஆங்.. அந்த புதுமொழி தொடருது கேளு -

'தேனியைப் பாராட்டுகிறோம்; கொசுவை அடிக்கிறோம்!'

''சபாஷ்டா மோகன் - இப்படி ஏதாவது பேசிட்டே வருவியே.''

''நீங்க அதற்குக் காது கொடுப்பீங்களாக்கும்? ஒரே லவ்ஸாயிருக்கும்! சுவாதிக்காக்கு ஒரு புத்தகம் இருந்தால் போதும் - நிமிர மாட்டாங்க.''

தானும் உடன் போகாவிட்டால் அந்த இளம் தம்பதிகளின் திட்டம் நிறைவேறாது என்பது புரிந்த சுவாதி புத்தகத்தோடு காரில் ஏறிக் கொண்டாள்.

போக்குவரத்து அதிகமிருந்ததால் அவர்கள் அருவிக் கரை போய் சேர ஒரு மணி நேரமானது. ஆனாலும், விதவிதமாய் படர்ந்த இயற்கை அவளைச் சலிக்க விடவில்லை. சாலை ஓரமாய் படர்ந்த புளிய மரங்களும் ஆலமரங்களும் சற்று நேரம் வர, பின் குளக்கரையும் அதைச் சுற்றிய கிராம மக்களும் - தென்னை, வாழையின் பசுமையைத் தாண்டினால் பனைமரங்கள் - இப்படி வறட்சியும் பசுமையுமாய் மாறி மாறி அழகுக் காட்டின.

கிராம மக்களின் வெள்ளந்தி முகங்கள் அவளை ஈர்த்தன - ஆனாலும் 'காரை நிறுத்துங்களேன் - அவர்களோடு பத்து நிமிஷம் பேசிட்டு போகலாம்' என்று சொல்ல முடியவில்லை. ஏனெனில் வசந்தா அத்தை இவளை எச்சரித்தே அனுப்பியிருந்தார் -

'போய் சுருக்கமாத் திரும்பிடுங்க சுவாதி - மலர் அப்பாட்ட நான் இது பற்றி சொல்லலை. சில நாளுல



கல்யாணத்தை வச்சுட்டு இப்ப எதுக்கு ஊர் மேயணும்னு நிச்சயம் திட்டுவார். சரளாவோட, மலரும் ஆசைப்பட்டாளேன்னு ஏதோ ஒத்துகிட்டேன். பாத்திரத்துல கலந்த சாதம்; முட்டை வறுவல் இருக்கு - அருவிக்கரையில உட்கார்ந்து சாப்பிட்டதும் திரும்பிடுங்க - சரிதானே?'

ஆனால் கார் ஓட்டுனரோடு வந்திருந்த காமராக் காரனை சுவாதிக்குப் பிடிக்கவில்லை. இந்தக் கபடக் கண்ணன் எப்படி கலையம்சமான படங்களை எடுக்கப் போகிறான் என்ற சந்தேகம் வேறு.

ஆனாலும் முற்றிலும் மாறுபட்ட இந்திய மண்ணின் அழகில் மயங்கியவள் பிறகு அவனைப் பற்றி எண்ணவில்லை.

வெள்ளிக் கிண்ணத்திலிருந்து அதன் மினுமினுப்பைச் சுரண்டிக் கொண்டு விழும் பாலாய் தோன்றிய அருவியைக் கண்டவள் மனமும் பொங்கி வழிந்தது -

''நாம இதில் குளிக்கலாமா, மலரினி?'' - ஏக்கமாய் கேட்டாள் -

''இங்க கூட்டமாயிருக்குது - பத்து நிமிஷம் ஏறினால் அமைதியான இடத்துல இதே தண்ணீர் மேலும் சுத்தமாய் விழும்'' என்றபடி காமராவுடனிருந்த குமார் சொல்ல, ஆளுக்கொரு உணவு பாத்திரம், ஜமுக்காளம் என்று எடுத்துக் கொண்டு மேலேறினார்கள்.

ஜனங்களின் பேச்சு சத்தம் கலைக்காத அமைதியான மலைக்காட்டின் உயர்ந்த மரங்களுடே ஏதேதோ ரகசியங்கள் மறைந்து கிடப்பதாய் தோன்றியது சுவாதிக்கு. நீரின் சலசலப்பும் பறவைகளின் குரலும் மட்டுமே துணைக்கு. யுகங்களைக் கண்டு விட்ட அயர்ச்சியில் கறும் பாறைகள் வழியெங்கும் இறுகி நின்றன. பெரும் யானை மண்டியிட்டிருந்தது போலிருந்த பாறையின்

மேல் ஏதோ அசைவு தெரிய, நெற்றிக்கு மேல் கை வைத்து கண்களைக் கூர்மையாக்கினாள் -

சுரேஷும் மலரினியும் ஒருவரை மற்றவர் அணைத்த படி போக, சற்று தடுமாறிய சுவாதிக்கு குமார் கை நீட்டி னான்.

''ல்ல, பரவாயில்ல'' என்று மறுத்திருந்தாள்.

நிமிடத்திற்கு இரண்டு மூன்று காட்சிகளைப் படம் பிடித்துக் கொண்டிருந்தவனும் மெதுவாகவே நடக்க, இவள் சமாளித்தாள்.

பாறை மேல் அமர்ந்திருந்த உருவம் இவளது பார்வை பட்டதும் இறங்கியது - பாறையின் மறுபக்கம் இவர் களைப் பார்த்தபடி நின்றவரைக் கண்டவள் சற்று கலங்கி தான் விட்டாள்.

அத்தனைக்கு விநோதமாயிருந்தது அவ்வுருவம் - பல காலமாய் மழிக்காததில் பெருகிய தலைமுடியும் உடம் பிற்கு 'இது போதும்' என்றளவில் சுருங்கிய ஒரு கோவண மும்மாய்... ஆனால் கண்கள் எல்லாம் கண்டுணர்ந்த ஞானத்தில் நிறைந்திருந்தன.

அவளையும் மீறி சுவாதியின் கைகள் குவிந்தன.

''நல்லாயிரு - கோரக்கர் சித்தர் வாழ்ந்த இடம்னு தேடி வந்தியாக்கும்?''

கரகரத்த குரல் கேட்டது.

''இல்லீங்க - அதெல்லாம் தெரியாது.. எனக்கு...''

''அவர் இங்க இருந்தது மூலிகைகளுக்காய்... நாற்பத் தஞ்சு மூலிகைகளைத் திரட்டி, இங்கேயுள்ள குகைகளி லேயே தயாரிச்சு உட்கொண்டுட்டா, உடம்பு அழியாது.''

அப்படி அழியாத உடம்பும், சேகரித்த ஞானமுமாய் தான் இவர் இங்கு தங்கி விட்டாரோ - என்பது போல



அவரைப் பார்த்திருந்தாள் சுவாதி. ''அதைவிட எளிமை யானதை உனக்குச் சொல்லித் தரவா? சோத்தையும் பேச்சையும் குறைச்சாலே ஆயுள் கூடும்.''

''நல்லதுங்க.''

ஏதோ யோசனையில் லயித்திருந்த அந்த பரட்டை சாமியின் விழிகள் சற்று தொலைவில் நின்று சுவாதி வருவதற்காய் காத்து நின்ற மூவரின் மீதும் பட்டு, பின் சலசலத்த ஒரு புதரைத் துழாவின.

''இங்க பெரிய மிளா... அதாவது காட்டு மானுண்டு - சாமர்த்தியக்கார செந்நாயும் திரியும். பலத்த மிளாவைத் தரையில ஜெயிக்க முடியாதுன்னு தெரிஞ்சுகிட்டு செந்நாய்ங்க கூட்டமாய் சேர்ந்து விரட்டி, மானை தண்ணிக்குள்ளார இறங்க வச்சிரும்ங்க. பிறகு பாய்ஞ்சு பிடுங்கினா மிளா மறுநிமிஷம் மூச்சடங்கி மிதந்திரும்! ஆனா தன் சாதுர்யத்தை செந்நாய், வளர்ப்பு நாயிடம் காட்டாது - ஏன் அதைக் கண்டாலே ஓடிரும்ல...''

வசியப்பட்டது போல் நின்றிருந்த சுவாதி கேட்டாள் -

''ஓ... ஏன்?''

''அந்த நாயின் பின்னே மனுஷப் பயல் நிற்பானே! வேட்டையாடற வினய்ப் பயலுகிட்ட அது ஜாக்ரதைப் படறதைப் போலத்தான் நானும்... நீயும் இருந்துக்கணும் - ம்ம்?''

அவர் போய்விட, இவளை ஏனோ திகில் பற்றிக் கொண்டது. மரக்கிளைகளில் தாவி ஆடிய குரங்குகள் கூட தன்னைப் புருவம் உயர்த்தி எச்சரிப்பதான புது அச்சம்.

''ஹையோ சுவாதி - இந்த இடம் பாரு... ரொ...ம்ப அழகு. குளிக்கத் தோதான இடம்.''

மலரினி வியந்தது போல அந்த இடம் அற்புத அழகு தான். ஆனால் குளித்த பிறகு ஈர உடைகளை எப்படி, எங்கே மாற்றுவது? இந்த குமார் வேறு கேமராவும் கூட கண்ணுமாய் இங்கேயே நிற்கையில்...?

''நீ... நீங்க குளிக்கலையா மலர்?''

''இப்ப பக்கா மேக் - அப்பில் வந்திருக்கேன் - பத்து, இருபது படங்களை எடுத்த பிறகு, குளிச்சுட்டு வேற ட்ரஸில் லைட் ஒப்பனையில் வேறு சிலது எடுத்துக் கலாம்னு தோணுது - என்ன குமார்?''

''இது உங்களுக்கான ட்ரிப் - நீங்க சொல்றதுதான் சட்டம்.''

தோள் குலுக்கினான் குமார்.

''அப்ப முதல்ல படம் எடுக்கலாம்...''

அவர்களின் நெருக்கம் கண்களை கூசச் செய்ய, ஒதுங்கிய சங்கவி புரண்டோடிய அருவி நீரருகே அமர்ந்து அதன் குளுமையைத் தொட்டு துழாவி ரசித்தாள். சிறிது நேரத்தில் நீரில் ஒரு நிழல் தெரிய அவள் திடுக்கிட்டுத் திரும்ப, அங்கே ஈரத்தலையைத் துவட்டியபடி நின்றது அவர்களது காரை ஓட்டி வந்தவன்தான்.

''ஓ... நீங்களா?''

''காரை அலசின கையோடு நானும் குளிச்சிட்டேன். பசி கிள்ளுச்சு. நீங்க சாப்பாட்டோட கிளம்பினேங்களேனு வந்தேன். தம்பதி ஒரே குஜாலுல இருக்காங்க - அவங்களுக்கு... வேற பசி.''

சுவாதிக்கு உடம்பு எரிந்தது - இயற்கை, அருவிக் குளியல் ஆசை எல்லாம் போய், வீடு திரும்பினால் போதுமென்ற அவதி மட்டுமே. தண்ணீரில் நனைந் திருந்த பாதங்களை உருவியபடி எழுந்தாள் -



''அடடா... அது நல்ல போஸாருந்ததே சுவாதி - ஏன் எழுந்திட்டீங்க? சரி, சிவப்புல கண்ணாடி வச்சு தைத்த சுடிதார், வெயில் பட்டு மினுமினுக்க, நீங்க இப்படி நிக்கறது கூட பிரமாதந்தான் - கொஞ்சம் வலப்புறமாய் திரும்பணும்.''

சுவாதி முதுகு காட்டி நடந்தாள் - மலரினி, சுரேஷைக் காணவில்லை. இந்த இரு அறிமுகமற்ற ஆண்களுடன் தான்... நீர், பறவைகள், மரங்களின் ஒலிகள் இப்போது அவளை மிரட்டின -

'தப்பி ஓடி விடு' என்பது போல விரட்டின.

செந்நாய்களின் விரட்டலுக்கு மிரண்டு நீரில் விழும் மிளா போல தானும் இங்கே விழுந்து ஒரே நிமிடத்தில் மிதந்து விடுவோமா?

பேச்சு சத்தம் இல்லாததால், ஓரக் கண்ணை அந்த இரு ஆண்களிருந்த பக்கமாய் ஓட்டினாள்.

ஒரு தட்டில் உணவை இட்டுக் கொண்டு சாப்பிட உட்கார்ந்திருந்தான் காரின் ஓட்டுனர். ஒரு குவளையில் ஆரஞ்சு நிற பானத்தை நிரப்பிய குமார் இவளிடமாய் வந்தான்.

''குடிங்க சுவாதி... இவ்வளவு தூரம் நடந்து வந்ததில் அசந்து தெரியறீங்க...''

''தாங்க்ஸ் - கார் சாவியைத் தந்தால், நான் அங்கே போய் இருக்கேன்...''

''குளிக்கலையா..?'' - அதிகப்படி ஆச்சரியத்துடன் கேட்டான்.

''புதுத் தண்ணி ஒத்துக்குமோ இல்லையோ...''

''அத்தனையும் மூலிகைங்க. மேலும் இளமை, வளமையா வீடு போய் சேரலாம்.''

''மலரினி எங்க?''

''என்னங்க... கல்யாணத்துக்கு முன்ன வெறும் போட்டோஸுக்காகவா இவ்வளவு தூரம் வருவாங்க? இந்த சாக்குல வேற சில அனுபவங்களையும் பாத்துடத் தான்! போஸ் கொடுக்கறப்பவே, மூடு கிளம்பி, மறைவிடம் தேடிப் போயிட்டாங்க. சரளாக்கா எல்லாம் சொல்லித் தான் விட்டாங்க - 'சிறுசுகளை விட்டுப் பிடி குமார் - சுவாதியை விட்டுடாதேன்னு.. ஜூஸைக் குடியேன்.''

''வேண்டாம் - நான் போறேன்.''

''எனக்கு ஒரு டஜன் படமேனும் தந்துட்டுப் போகலாம் - பிறகு தடையில்லை.''

''படமெடுக்கணும்னு நா... நான் வரலை.''

''நான் அதற்குத்தானே வந்தேன்? வந்த வேலையைப் பார்க்க விட மாட்டேங்கறீங்களே... கொஞ்சம் சிரிச்சாப்பல முகத்தை வச்சுகிட்டா... சரி வேண்டாம் முகமா முக்கியம் - அந்த துப்பட்டாவ எடுத்துட்டாலே போதும்...''

விதிர்த்து பின் வாங்கியவளின் கால்கள் தடுமாறின.

''ச்சீ... என்ன பேசற?''

''வடிவாயிருக்கறவங்க இப்படி முழுக்க மூடிறக் கூடாதுங்கறேன்'' - என்றவன் ஒரே தாவலில் நெருங்கி இவளது மேல்துணியை உருவ, சுவாதி அலறினாள்.

சாப்பிட்டுக் கையலம்பிக் கொண்ட ஓட்டுனர் -

''என்னா பிரதர் - ஹெல்பு வேணுமா?'' என்று கேட்க, குமார், ''மேல அதுக ரெண்டும் இருக்கும் - இங்க வராமப் பார்த்துகிட்டாப் போதும்'' என்று விட்டு சுவாதியின் தோளைத் தொட்டு அழுத்தினான்.

''உட்காரு சுவாதி - அந்த கறுப்பு ஈரப் பாறை பின்னணியில், மின்னுற சிவப்பு ட்ரெஸில் நீ அட்டகாசமாத் தெரியற.''

''இரண்டு கை நீரை அவள் மீது அள்ளி அடித்தான் -

''நனைஞ்சா மேலும் எடுப்பாத் தெரியற.'' என்ற சீண்டலுடன்!

சுவாதி பயத்தில் உறைந்திருந்தாள்.

## 12

திவாகரைச் சந்தித்த அன்று நெடுநெடு என்று நின்றவனைத்தான் வெறுப்பாய் நினைத்திருந்தாளே... இது.. இதுவல்லவா வெறுப்பு?

அச்சமும் அருவெறுப்புமாய் திரண்டு நெஞ்சடைக்கும் இந்த உணர்வு வேறு... திவாகர் மீது அவளையறியாமலேயே உருவாகியிருந்த ஈர்ப்பு - தான் தன்னை வெறுப்பு போல காட்டிக் கொண்டதோ?

ஐயோ... இப்போது உடனே அவரைப் பார்க்க வேண்டும்...

இறந்த மீனாய் தன் உடம்பு அருவி நீரால் அடித்துப் போகப்பட்டு எங்கோ மிதக்கும் முன்பு... ஒரு முறை திவாகரைப் பார்த்து விட்டால் போதும்...

அதற்குள் தட்டையான பாறை ஒன்றின் மேல் வைத்திருந்த பழரசக் குவளையை எடுத்து வந்து இவள் வாயில் பலவந்தமாய் ஊற்றினான் குமார் -

''இதென்ன பேயறைஞ்சாப்பல முழிக்கறே? இதைக் குடி பயந் தெரியாது - கொஞ்சம் இறங்கினாப்பல சிரிக்கலாம்...''

புரைக்கேறி இருமினாள் - உள்ளிறங்கிய சாறினாலோ, உதறலினாலோ உடம்பு துவண்டது... ஆனால் குமாரின்

கேமரா தன்னை படமெடுக்கத் துவங்கியது தெரிந்த புத்தி உடம்பை விரட்டியது -

'தப்பி ஓடு சுவாதி - சீக்கிரம்...' என்று.

சற்று நேரம் அவளைச் சிலையாக்கி வைத்திருந்த அச்சம், இப்போது அவள் கால்களுக்கு அசாத்திய பலம் தந்தது - வேகமாய் ஓடினாள். மூச்சு வாங்கும் ஓட்டம். என்னை விட்டு விட்டுரு...'' உதறி கதறியவளை இறுக அணைத்துக் கொண்டவன் -

''இனி பயமில்லை சுவாதி - நான் வந்துட்டேன் - உன் திவாகர் வந்திட்டேம் பாரு...'' தேற்றினான்!

பதமான வேகத்தில் அந்த கார் போய்க் கொண்டிருந்தது - வெளிறிய முகத்தோடு பின் இருக்கையில் அமர்ந்திருந்த மலரினியும் சுரேஷும் ஒட்டி உரசாமல், கண்ணியமான இடைவெளியுடன் இருந்தனர்.

தன்னருகே விழிமூடி இருந்த சுவாதியைப் பார்த்த திவாகர் -

''விளையாட்டு போல கிளம்பிட்டீங்க - விபரீதமாய் முடிஞ்சிருக்கும்' மலரினியிடம் மிகு மெல்ல பேசினாலும் குரலில் கண்டிப்பிருந்தது.

''எதிர்பார்க்கலையே... நீங்க மயங்கிய சுவாதியைப் பிடிச்சபடி - இருந்ததைப் பார்த்ததும் மேலும் நடுங்கிட்டேன்... எங்களோடு வந்த ரெண்டு வில்லன்களோடு மூன்றாவது ரௌடினு நினைச்சு...''

''இவ அலறுன அலறலில் அந்த கோவண ஆண்டி வேற வேல் கம்போடு பாய்ஞ்சு வர... ஹையோ... அந்த மலைக்காட்டுலதான் எனக்கு சமாதின்னு முடிவு பண்ணிட்டேன்'' - தலை குலுக்கினான் சுரேஷ்.

''சரளாக்கா அனுப்பிய ஆட்கள்னு நம்பினோம்.''

''எல்லாம் அந்த சரளா ஏற்பாடுங்கறதால தான் நானும் விவரம் தெரிஞ்சதுமே வேகமாய் இங்கே வந்தேன் -



சுவாதிட்ட கூட சொன்னேன்... அந்த சரளா சகவாசம் வேண்டாம்னு...''

''நேற்று அவங்க எங்க வீட்டுக்கு வந்து, எல்லாருக்கும் மருதாணி இட்டு விட்டு, இந்த 'ட்ரிப்' எங்களுக்கான பரிசு எனவும்...''

அரக்கில் வேலைப்பாடு செய்யப்பட்ட தங்கத் தாமரை போலிருந்த சுவாதியின் கைகளை மெலிதாய் நடுங்கின.

''ஏதும் குடிக்கிறியா சுவாதி - இனி எந்த பயமுமில்லை..'' சொன்ன திவாகரின் குரல் மிக இதமாயிருந்தது.

''உங்களை அடையாளம் புரியாமல் அடிச்சுட்டேன் திவாகர்... ஸாரி.''

''அடி பலம்தான். ஆனா தப்பும் வேகத்தில் விளையும் பலம் அது - நீ எப்படி இந்த பிக்னிக்கிற்குக் கிளம்பினேன்னுதான் இன்னும் புரியலை - ''

குறைபட்டான்.

''மலரினி சொன்னது போல, வலிய வந்து உதவினாங்க... தவிர சற்று முன்னே என்னோடு பேசின உங்கக்கா வேற பாபநாசம் மணிமுத்தாறு பற்றியெல்லாம் பேச...''

''ஆர்வமாய் கிளம்பிட்ட... திவ்யாக்கா எங்கிட்ட அது பற்றி சொன்னா - ஆனா சாயபு டெய்லர்தான் சரியான சமயத்துல எனக்குத் தகவல் தந்தார் -''

''அவர்ட்ட சொல்லியிருந்தீங்க போல...''

''உன்மேல் ஒரு கண் வைத்து எனக்குத் தகவல் தரணும்னு சொன்னதும் - 'முதல்ல உன்னைப் பற்றி போலீஸுக்குத் தான் தகவல் தரணும் சைத்தானே'ன்னு தான் மனுஷர் என்னிடம் எகிறினார்!''

குழலை இலகுவாக்க முறுவலுடன் பேசினான் திவாகர்.

''போன் மூலம் உங்க கலா ஆன்ட்டி, வாஸந்தி, எங்கக்கா எல்லோரோடும் பேசின பிறகு சமாதானமாகி, தோஸ்தும் ஆகிட்டார்.''

''ஆனா அதற்கு முன்பே உங்களுக்கு எங்க வீடு எதிர் அடமானத்தில் இருப்பது பற்றியெல்லாம் தெரிஞ்சிருந்ததே?''

''உலகம் சின்னது சுவாதி! எனக்கு வேண்டியவங்க இங்கேயும் உண்டு. அவங்க உன் மாமா குடும்பத்தைப் பற்றி விசாரிச்சதுல முதல்ல தெரிய வந்த தகவல் அது. மன்னிக்கணும் மலரினி... ஆனா சுவாதியை வரவழைத்தால் வீட்டின் மேலுள்ள மலரினி... ஆனா சுவாதியை வரவழைத்தால் வீட்டின் மேலுள்ள கடனை அவளே முழுக்க அடைச்சிடுவா என்பது உன் பெற்றோரின் ஆசை, திட்டம் எதுவோ ஒண்ணு.''

''சதின்னு கூட சொல்லுங்க ஸார்... நீங்க திட்டினால் கேட்டுக்க வேண்டிய நிலையில நிற்கறோம். ஆனா எனக்கு அந்த குமார் அத்தனை மோசமானவன்னு தெரியாது. சரளாக்கா எப்படியேனும் சுவாதியின் படங்கள் வேணும்னு ஆசைப்பட்டதைக் கூட விகற்பமாய் நினைக்கலை. ஆக எந்த சதி எண்ணமும் இல்லாமல்தான் நாங்க பாபநாசம் போனது.''

''இருக்கலாம் - ஆனா அங்கே வரம்பு மீறி நீங்க நடக்க, தனிமையைத் தேடி போனதுதான் குமாருக்கு வசதியாய் போச்சு.''

''அந்த ட்ரைவரும் மகா மட்டமான ஆளுதான் - குமார் எங்களை 'கொஞ்ச நேரம் குஷாலாயிருந்துட்டு வாங்க'ன்னு புதர் பின்னாடி அனுப்ப, பிறகு எங்களுக்கே அது சங்கோஜமாப் போச்சு - ஆனா காரின் ட்ரைவர் அங்கே வந்தவன், எங்களை அசைய விடலை. இளிச்சபடி மட்டமாய் அவன் பேச ஆரம்பித்த நேரம் சுவாதியின் கூச்சலும் கேட்க, நாங்க பதற ஆரம்பிச்சோம்.''



''சுரேஷ் நிறுத்த, மலரினி தொடர்ந்தாள் -

''ஆனா அந்தக் காலிப் பயல் எங்களை விடலை.

'அங்க வேற சினிமா ஓடுது - நீங்க உங்க நாடகத்தைத் தொடருங்கப்பா - ஸிங்கிள் ஆடியன்ஸ் பார்க்க...'னு சீண்ட, என் உடம்பே குளிர்ந்திடுச்சு - வசமா மாட்டிக்கிட்டோம்னு புரிஞ்சுது. சுரேஷ் அந்த ட்ரைவரைக் கண்டிப்பான்னு பார்த்தால் இவனோ,

''ப்ளீஸ் - எங்கள விட்டிருப்பா'னு கெஞ்ச ஆரம்பிச்சுட்டான்.''

"திடீர்னு வர்ற இக்கட்டுல புத்தி ஸ்தம்பிச்சிடுது மலரினி.."

சுவாதி மெள்ள சொன்னாள்.

''உண்மைதான். சாயபு நீங்க மூணு பேரும் பாபநாசம் கிளம்பினது பற்றிச் சொன்னதும் சில நிமிஷங்கள் நானும் செயலற்றுதான் நின்றேன். ஏன்னா அங்கே நிச்சயம் உனக்கு ஆபத்துங்கறது தெரிஞ்சு போச்சு. உங்க வீட்டுக்குப் பக்கத்திலிருந்த சில வெட்டிப் பசங்களுக்கு சரளாவோடு தொடர்புண்டு...''

''யாரு... ராத்திரி என் அறைக்குள்ளே டார்ச் அடிச்சு பார்த்தவங்களா?''

''அந்த தடி ராஸ்கல்ஸில் ஒருத்தனை அடிச்சு மிரட்டினதும் உண்மையைச் சொல்லிட்டான்.

''இது மாதிரி பலான விஷயத்துல சரளாதான் ஸார், எங்க குரு! மலரினி வீட்டுக்கு அப்சரஸாட்டம் ஒரு பொண்ணு வந்திருக்குன்ற தகவலை சரளாக்குச் சொன்னதே நாங்கதான். ஜன்னல் திரையை விலக்கி, டார்ச்சர்ல துழாவியும் பொண்ணோட சயன போஸை நாங்க பார்க்கக் கொடுத்து வைக்கலையே'ன்னு நாங்க புலம்ப,

''கவலைய விடு. அவளை தினுசு தினுசா நா படமெடுத்துத் தரேன்னா. பிறகு இன்டர்நெட் ஆபாச

படங்களுக்கு சுவாதி முகத்தைப் பயன்படுத்திக்கலாம்னு வேற...''

''கடவுளே...'' சுவாதியின் உடலும் சேர்ந்து நடுங்கியது.

''கோர்வையாய் சொன்னால் உனக்குப் புரியும் என்பதற்காய் சொன்னேன் சுவாதி. சாயபு டெய்லர் அலுத்துகிட்டார்.

''உலகம் ரொம்ப கசடாயிருச்சு தம்பி. முன்னேயும் எல்லா வித கச்சடாக்களும் உண்டு. என்றாலும் காலம் சுண்ட சுண்ட கசடு அதிகமாயிடுது'ன்னு. ஆக கைக்கு கிடைச்ச விஞ்ஞான வசதி, வளர்ச்சியையும் மனுஷன் தன் விகற்பத்திற்கு ஏற்றதுபோல வளைச்சுக்கறான்.''

''அந்த ரெண்டு பேருக்கும் குற்ற உணர்வேயில்லை - அதுதான் என்னை ரொம்ப பயமுறுத்தியது. 'ஏதோ உலகம் காணாத ஒரு அக்கிரமம் நடக்கிறாப் போலல்ல முழிக்கறீங்க? அப்படி ஒரு பாவம்னா இந்த பாபநாச அருவியில ஒரு முழுக்குப் போட்டுரு - சுத்தம்'னு எங்களை அந்த பசங்க மிரட்டினாங்க...''

''இப்ப போலீஸ் அவங்களைச் சரியானபடி மிரட்டிட்டிருக்கும் மலரினி முதல்லியே நான் சுவாதி பற்றி, அவளிருந்த சூழல் பற்றியெல்லாம் என் ப்ரெண்ட் மூலம், அவன் சிநேகிதனான போலீஸ் - இன்ஸ்பெக்டருக்குத் தெரிவிச்சிருந்ததால் உதவி உடனடியாய் கிடைச்சது - கிளம்பிய என் பின்னாடியே அவங்களும் வந்துட்டதால் வேற பிரச்சினையில்லை. சமாளிச்சாச்சு.''

''ஒரு அனுபவம் - ரொம்பக் கசப்பான அனுபவமிது.''

''ஸாரி சுவாதி - அதுல எங்க அப்பா அம்மாக்கும் பங்கிருக்குது. உன் பணத்தைக் குறி வைத்து உனக்கு நம்ப பரம்பரை வீட்டில் உரிமையுள்ளதாய் ஆசை காட்டி வரவழைத்ததில் எனக்கும் பங்கு தான் - இப்படி அலட்சியமாய் வந்து உன்னை ஆபத்துல சிக்க வைத்ததில்...''



''சொத்து ஆசையில் நான் வரலை மலரினி...''

''சுவாதி இந்தியா வந்தது கல்யாண ஆசையில்... உங்க கல்யாணத்தைப் பார்க்கும் ஆசையில்லை மலரினி, என்னைக் கல்யாணம் செய்துக் கொள்ளும் ஆசை!''

உற்சாகமாய் சொன்ன திவாகர் செலுத்திய காரின் வேகமும் கூட, அவன்புறம் கோபமாய் திரும்பினாள் சுவாதி!

''முயற்சி - ஒரு குவளைப் பால் என்றால்,

அதிர்ஷ்டம் - அதில் கலக்கும் ஒரு கரண்டி சர்க்கரையாம்! நான் முயன்றேன் என்பதை விடு சுவாதி. கூடவே எனக்கு இனிப்பான அதிர்ஷ்டமும் இருந்தது. இல்லைன்னா இப்படி கோபத்திலும் கூட கண்ணிற்கு குளுமையாய் தெரியும் ஒரு பெண் எனக்குக் கிடைப்பாளா?''

''ரொம்ப உளறுறீங்க.''

''நீ சிடுசிடுப்பாய் பேசறது பாவ்லாதானே? உன் அலங்காரமே சொல்லுதே.''

''என்னன்னு?''

முகம் திருப்பாமலேயே மாலை சூரியனைப் பார்த்தபடி கேட்டாள் சுவாதி. அவளது சிந்து பூந்துறை வீட்டின் மொட்டை மாடியில், எட்டடி நீளமும் மூன்றடி அகலமுமே இருந்த அச்சிறு இடத்தில் நிற்கும் இருவர் அதிகம் முறுக்கி விலக இடமில்லை!

தாமிரபரணியில் நனைந்த காற்று அவர்களை சிலுசிலுவென குளிர்வித்தது.

''என்னை வசியம் பண்ணத்தானே இத்தனை அலங்காரம்?''

மிக அருகே வந்து அவள் பின்னே நின்றபடி சீண்டினான்.

''இப்பவும் உளறத்தான் செய்றீங்க.''

''என்ன செய்றது? பெண்களோடு இப்படி இசகு பிசகாய் நிற்கும் வேலையில் ஆண்கள் மூளை ஸ்தம்பிச்சிடுதே...'' அவன் சற்றே அசைய இருவரது தோள்களும் உரசின.

''புத்தி மட்டுமல்ல, உடம்பும் தடுமாறுது போல?''

சிடுசிடுப்பாய் பேச நினைத்தவளை, மீறி குரல் சிணுங்கியது.

''பின்ன... இந்தக் கல் ஜிமிக்கி உன் அழகை ரொம்பக் கூட்டுதுன்னு நான் எச்சரித்த பின்னும் கூட, நீ அதைப் போட்டுட்டு.

''வாங்களேன் - மாடிக்கு போய் பேசலாம்'னே அதுக்கு என்ன அர்த்தம்? மயங்கி, என்னை ஏது வேண்டுமானாலும் செய்துக்கோன்ற மாதிரி தானே?''

''ச்சேச்சே... முதல்லியே உளறிய இந்த மனுஷன் வேண்டாம்னு நான் ஒதுங்கியிருக்கணும்!''

''நான் உளறினேன்தான் சுவாதி! ஒத்துக்கறேன். முதல் நாள் நம் சந்திப்பின் போது, நீ தொலைவில் வரும்போதே உன்னைப் பார்த்து... என்னை இழந்துட்டேன். உன்னைப் பற்றி கேள்விப்பட்ட நல்லவையை மீறி உன் அழகு என்னை உலுக்கினது. அதில் அசடனாய் தெரிஞ்சுடக் கூடாது என்பதற்காய் சற்று தெனாவெட்டாய் நின்றேன்... பேசினேன்.''

உள்ளே பொங்கிய சிரிப்பை, வெளியே வழிய விடாமல் வாய்க்குள்ளேயே உருட்டினாள் சுவாதி.

''கண்ணாடியாய் உன் உணர்வுகளை வெளிக்காட்டிய முகம், என்னை உனக்குப் பிடிக்கவில்லை என்று காட்ட, பதறிட்டேன். பேசி உன்னைக் கவர முயன்றேன். உன் 'நறுக்' பதில்களில் மயங்கினேன். உன்னை எப்படியேனும் உன் வாழ்க்கைத் துணையாக்கிடணும்ர துடிப்பு. ஆனா அதே சமம் வெறும் சௌகர்யத்திற்கான, ஒரு



நம்பகமான துணையாய் மட்டுமாய் நீ என்னை நினைச்சுடக் கூடாதேங்கற தவிப்பும்...''

அவள் கேட்கத் தவித்ததையெல்லாம் அவன் மடை திறந்த வெள்ளமாய் கொட்ட ஆரம்பிக்க, இனியும் மறைந்த சூரியனையேத் தான் பார்த்து நிற்பது அநாவசியம் என்பது போல மெள்ள திரும்பினாள் சுவாதி. அச்சன்ன அசைவில் ஆடிய கால் ஜிமிக்கிகள் அந்தி நேர வர்ணங்களை அள்ளியடித்தன... ஆனால் அவள் கண்ணின் ஒளிக்கு முன் அவை எடுபடவில்லை என்றே அவனுக்குத் தோன்றியது.

''ஓ... அதான். இந்தியா போக, அங்கே 'செட்டிலாக' திருமணம் அவசியமில்லைன்னீங்களா?''

''ரைட்... எதிரே வந்த ஒரு குடிகாரனிடமிருந்து உன்னை விலக்குவதற்காய் லேசாய் அணைத்த போது...''

திவாகரின் முகம் ஏன் இத்தனை சிவக்கிறது? மாலை சூரியனைப் பார்த்து நிற்பதாலா... அல்லது நினைவுகள் கிளறிய கிறக்கமா?

''உன்னை இறுக்கிக்க வேண்டும் போன்ற தாபம் என்னைத் தாக்கியதில் மிரண்டுட்டேன். உன் அப்பாவின் ஏமாற்றத்தால் கசந்திருந்த உன் வாழ்வை இனிப்பாக்கிட வேணும்ன்ர வேகம், உன்னை ரொம்ப பத்திரமாய், காலமெல்லாம் பார்த்துக்கணும்கிற ஒரு முடிவு...''

''நிஜமாவா... பார்த்த முதல் நாளேவா?''

சந்தேகமாய் கேட்டவளின் கண்களில் சந்தோஷம் கொப்பளித்தது.

''அதுதான் எனக்கும் புரியலை - இதுவரை எந்தப் பெண்ணிடமும் எனக்கு வராத சலனம்... இப்ப வந்து ஒரேயடியாய் சாய்ச்சிடுச்சேன்னு வெலவெலத்துட்டேன்.''

''அதான் என் வீட்டுக்கும் வந்துட்டீங்க?''

''மேடம் நிலைமையும் அதுவேத்தான்னு தெரிஞ்சுகிட்டுதானே வந்தேன்.''

''ஓஹோ... என் நிலைமையை யார் சொன்னாங்களாம்?''

''மிஸஸ். ராபர்ட்ஸ் புட்டு புட்டு வச்சுட்டாங்க! பொண்ணு மனசைத் திருடிட்டீங்க பாஸ்ன்னு. ஆனா எனக்கு அதில் ரொம்ப நம்பிக்கையில்லை - அதுதான் வாலாய் உன்னோடு விமானத்திலும் ஒட்டிட்டு வந்தேன்.''

''எங்கிட்ட ஒரு வார்த்தை அது பற்றி சொல்லியிருக்கலாம்...''

''கடைசி நிமிஷம் வரை டிக்கெட்டை ஊர்ஜிதம் பண்ணலை. எனக்கிருந்த பதட்டத்துல ஏதும் சொல்ல முடியலை, சுவாதி இப்ப கூட எனக்கு ரொம்ப இக்கட்டான நிலைதான்.''

அவனது பரிதாபமான முகத்தைப் பார்த்து குழம்பினாள். மலரினியின் திருமணம் நல்லபடி முடிந்து அவளும் மாப்பிள்ளை வீடு போய் விட்டாள். தேன்கூடு போல உறவினர்கள் அப்பிய வீடு, காலியாகி இருந்தது. மறுநாள் திவாகரின் தமக்கை திவ்யா வர இருப்பதால், இந்த வீட்டிலேயே எளிமையாய் சுவாதியின் கல்யாணத்தையும் நிச்சயித்து விடலாம் என்றிருந்தார் மாமா - முதன் முறையாய் சுவரைப் பார்க்காமல் இவளது முகம் பார்த்து!

''மன்னிச்சிரும்மா சுவாதி - அறியாமையில ஏதோ குத்தலாய் பேசியிருப்பேன் - உனக்கிருக்கும் பெரும் பணத்துல கால் கோடிங்கறது - கிள்ளுக் கீரை - அதை எங்களுக்கு நீ தந்தாலென்னன்னு நாங்க யோசிச்சது தப்புதான் - நீ பெருந்தன்மையா பத்து, பன்னெண்டு லட்சத்தைத் தந்திருக்க... மறுபடி நீ லண்டன் போறது... எனக்கு அவமானமாயிருக்குது - ஆனா உங்கம்மா ஞாபகம் உன் 'இன்டியா ஹவுசை' நடத்திட்டு, திவாகருக்கும் மனைவியாய் இருப்பதுன்ரது - நல்ல முடிவுதான் - நல்லாயிரு.''

அந்த பன்னிரெண்டு லட்சங்களை இவள் குடும்பத்தினருக்குத் தந்தது திவாகர்.

'முற்காலத்தில் ஆண் தன் பலத்தைக் காட்டிதான் பெண் கேட்பான் - இப்ப எனக்குப் போதுமான பண பலம் இருக்குது - அதான் அதைத் தந்து அவங்க வீட்டுப் பெண்ணைக் கட்டிக்கப் போறேன் - பாதி கடன் அடைஞ்சிட, உங்க மாமா கட்ட வேண்டிய வட்டி ரொம்ப குறைஞ்சிடுது - தவிர அந்தக் கடன் முழுக்க உன் தாத்தா பாட்டிக்காய் பயன்படலை. அவங்க பேர் சொல்லி வாங்கப்பட்ட கடன் தொகையில்தான் விமரிசையாய் இப்போது மலரினியின் கல்யாணமும் நடந்தது. ஆக அதற்கான வட்டியை அவ பெற்றோர் தாராளமாய் கட்டலாம்... அதே சமயம் நாம எதிர்பார்த்தது போல சுவாதி நமக்கு உதவலையேங்கற ஏமாற்றமும் அவர்களுக்கல்ல. சரிதானே?''

முன்பே இதைப் பற்றியெல்லாம் விளக்கி விட்டவனை இப்போது விழி நிரம்பக் காதலோடு பார்த்தாள் -

''ஐயோ... ப்ளீஸ் சுவாதி. எந்நிலை மேலும் இக்கட்டாகுது...'' தவித்தான்.

''என்னவாம்?'' சிரிப்பும் சினமும் கலந்து கேட்டாள்.

''சாயபு தன் கடையிலேயிருந்து இன்னமும் தன் கண்காணிப்பைத் தொடருரார் - பாரு...''

பெரியவரைப் பார்த்து கையசைத்தாள்.

'நல்லாயிருங்க' என்பது போல அவர் கை உயர்ந்தது.

''மலரினி கல்யாணத்திற்கு சாயபுக்கு பட்டு ஜிப்பா, வேட்டியெல்லாம் தந்து, உன் பக்கத்திலேயே உட்கார வச்சுகிட்டதில் மனுஷருக்கு ரொம்பப் பெருமிதம்.

'நல்லபடி வளர்ந்த பொண்ணு - அதை வருஷத்துக்கு ஒரு தரமேனும் எங்கண்ணுல காட்டணும்ப்பா'ன்னு கண் கலங்கிட்டார்.''

''அதை ஏன் உங்ககிட்ட சொல்லணும்?'' மரப்படிகளில் இறங்கியபடி கேட்டாள்.

''ஏய்... சும்மா மிரட்டாதம்மா - என் இக்கட்டு புரிஞ்சுகிட்டு படியிறங்கிட்ட பாரு... நீ கெட்டிக்காரி சுவாதி.''

''புரியலையே...''

''மத்தவங்க பார்க்கக்கூடிய இடத்தில நின்னு, உன்னை வசதியாய் கட்டிக்க, நம்ப முதல் முத்தத்தைக் கொடுத்துக்க முடியாதது ரொம்ப கஷ்டமான விஷயமாச்சே... அதைத்தான் இக்கட்டான நிலைமைன்னேன்!''

''இந்நிலை நம் கல்யாணம் வரை தொடரும் ஸார்.''

''சுவாதி...'' குரல் தந்தபடி மாமா படியேறும் அரவம் கேட்க, சற்று இடைவெளி விட்டு நின்றனர்.

''ரொம்ப நன்றி மாப்பிள்ளை - யாராலும் அசைக்க முடியாத பக்கத்து வீட்டுக் காலி பசங்களை அங்கிருந்து கிளப்பிட்டீங்களே?''

''வீட்டு உரிமைக்காரங்க புகார் தந்தாங்க...''

''நீங்க மற்றதைப் பார்த்துக்கறேன்னு தைரியம் தந்ததால் தான் அவங்க துணிஞ்சு போலீஸ் புகார் தந்தாங்களாம்...''

''இருக்கலாம் - தவிர இன்னுமொரு நல்ல செய்தி. ஜங்ஷன் ஆபீஸில் வேலை பார்க்கும் நாலு பொண்ணுங்களுக்கு உங்க வீட்டு மாடி போர்ஷன் பற்றி சொல்லியிருக்கேன் வாடகையாய் ஏறக்குறைய மூவாயிரம் ரூபாய் வந்தால் வங்கிக் கடனின் வட்டியேனும் சுலபமாய் கட்டிடலாம்...''

மாமா எக்கச்சக்க நன்றிகளைத் தெரிவித்து விட்டு கீழிறங்க, சுவாதியின் கண்கள் திவாகரை அள்ளி விழுங்கின -

மின்னும் ஜிமிக்கிகள் ஆட, எம்பியவள் அவனை வளைத்து இறுக்கி, கன்னத்தில் முத்தமிட்டாள் - இனி அவனில்லாமல் தான் இல்லை எனுமளவிற்கு - சுவாதிக்கு அவனைப் பிடித்திருந்தது!